Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா   செய்தி : 021 493 0000   விளம்பரம் : 021 493 1111

சுடர் :35   கதிர் :53   தை 4ஆம் நாள்   சனிக்கிழமை   18 ஜனவரி 2020   வள்ளுவர் ஆண்டு 2050

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2020
24 25 26
ஜனவரி / January
10.00am - 8.00pm
முற்றவெளி மைதானம்
இன்னும் நாட்களில் 6

## வான் புலிகள் விண்ணர்கள்!

### மகிந்த ஒப்புதல்



கொழும்பு, ஜன. 18

"போரியல் நுட்பம் தொடர்பில் பல புதிய விடயங்களை விடுதலைப் புலிகள் உலகுக்கு அறிமுகம் செய்தனர். குறிப்பாக வான்புலிகள் தங்கள் விமானத்தை , எமது விமானப்படையினரின் அதி நவீன கண்காணிப்பில் சிக்காமல் பறக்கும் விநோத நுட்பத்தைக் கொண்டிருந்தன. அத்தோடு வான்படையினை தன்வசம் கொண்டிருந்த முதலாவது தீவிரவாத அமைப்பாகவும் விடுதலை புலிகளே இருந்தனர். இவ்வாறான பலம் கொண்ட பயங்கரவாத அமைப்பை குறுகிய காலத்துக்குள் அழித்து, முப்படையின் பெருமையினையும் உலகுக்கு பறைசாற்றினோம்" என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரி 23

## சறுக்கி வீழ்ந்த மூதாட்டி சாவு

யாழ்ப்பாணம், ஜன. 18

கிணற்றடியில் சறுக்கி விழுந்த 70 வயது மூதாட்டி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் எழுதுமட்டு 07

## கொடி நட்டவர் கட்சி சார்பானவர்

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்ப்பாண நகர மத்தியில் பௌத்த கொடி நட்டவர் மாநகர சபைக்கு சிறிலங்கா சுதந்திரக் 07

## பொறிவெடியில் சிக்கி காயம்

இயக்கச்சி, ஜன. 18

இயக்கச்சி முகாவில் பகுதியில் பொறி வெடியில் சிக்கிப் படுகாயமடைந்த ஒருவர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் 07

## சம்பந்தன் ஒரேமாதிரி; விக்கியே குழப்பவாதி

### விமல் வியாக்கியானம்

யாழ்ப்பாணம், ஜன. 18

"சம்பந்தன் அன்று கூறியதையே இன்றும் கூறுகின்றார். ஆனால் விக்கினேஸ்வரன் நீதியரசராக இருக்கும்போது ஒரு மாதிரியாகவும் முதலமைச்சரான பின்னர் இன்னொரு மாதிரியாகவும் இருக்கிறார்" என்று கூறியுள்ளார் கைத்தொழில் மற்றும் வாணிபஅமைச் 23




## மீண்டும் 'பொங்கு தமிழ்'

### யாழ். பல்கலை சமூகம் அதிரடி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 18

இந்த ஆண்டு இறுதிக்குள் பொங்கு தமிழ் நிகழ்வு யாழ்ப்பாண பல்கலைக்கழகச் சமூகத்தால் நடத்தப்படும். இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், பொங்கு தமிழ் நிகழ்வு இடம்பெற்று 19ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளனர். 23

## போர்க் குற்றவாளிகளே ஆட்சியிலும், பதவியிலும்!

### நாட்டின் மிகப்பெரிய சாபக்கேடு என்கிறார் மாவை. எம்.பி.

யாழ்ப்பாணம், ஜன. 18

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை உள்ளிட்ட சர்வதேச மனித உரிமை அமைப்புக்களால் குற்றம் சாட்டப்பட்டவர்கள்தான் இன்று ஆட்சியில் இருக்கின்றார்கள். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகிய இராணுவத்தினருக்கும் பதவி உயர்வுகளை இந்த அரசு வழங்கி வருகின்றது. இதுதான் இந்த நாட்டின் மிகப்பெரிய சாபக்கேடாகும். இந்தச் செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் கடும் 07

## இனி பறக்கலாம் 'ட்ரோன்'

கொழும்பு, ஜன. 18

கடந்த ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர், ட்ரோன் கமராக்களை பறக்கவிடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க சிவில் விமான சேவைகள் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. 07

### முச்சந்தி முரளி




## பானைக்கு சிக்கல்

யாழ்ப்பாணம், ஜன. 18

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கட்சிக்குப் பொங்கல் பானை சின்னமாகக் கிடைப்பதில் சிக்கல் எழக்கூடும் என்று தெரியவருகின்றது. 07

## காட்டுமிராண்டிப் பொலிஸார் கையைமுறித்து அட்டகாசம்

### நடவடிக்கைக்கு நீதிமன்றம் உத்தரவு

வேலணை, ஜன. 18

விசாரணையின்போது சந்தேக நபர்களின் கைகளை அடித்து முறித்தமை தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலயத்தின் அம்பிலிஃபயர் திருடப் 07

## ரணிலை கைவிட்டு சஜித்தோடு 'மெகா' கூட்டணி பங்காளிகள் பச்சைக்கொடி


கொழும்பு, ஜன. 18

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் 'மெகா கூட்டணி' அமைத்து புதிய சின்னத்தில் பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகள் ஒப்புதல் வழங்கியுள்ளன. 23

# நெல்லுக்கு உலைவைத்த நேற்றைய திடீர் மழை

சாவகச்சேரி, ஜன. 18

**யாழ்ப்பாணக் குடாநாட்டில் பரவலாக நேற்று திடீரென்று பெய்த மழையால், தென்மராட்சி உட்பட பல பிரதேசங்களில் நெல் அறுவடை பாதிக்கப்பட்டது. அறுவடை செய்து காயவிடப்பட்டிருந்த மற்றும் மூடைகளாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூடைகள் மழையில் முழுமையாக நனைந்துள்ளன என்று நெற் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.**



அரிசி விலை அதிகரிப்பைக் கருத்திற்கொண்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் நெல் அறுவடை மும்முரமாக இடம்பெறுகின்றது. இயந்திரங்கள் மூலமாகவும் அறுவடை இடம்பெறுகின்றது.

பிரதேசத்தில் நெல் காயவைக்கும் மேடைகள் இல்லாததால் அறுவடைசெய்யப்பட்ட நெல்லை வீதியோரங்களிலும் வளவுகளிலும் காயவிட்டிருந்தனர்.

அறுவடையின்போது மேடைகளில் அடுக்கப்பட்ட நெல் மூடைகளும் வயல்களிலும் வீடுகளிலும் வாகனங்களின் வரவை எதிர்பார்த்து விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், நேற்றுக்காலை திடீரென்று மழை பெய்ததால் பரவவிடப்பட்டிருந்த மற்றும் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் முழுவதும் நனைந்துள்ளன என்றும் தெரிவித்தனர்.

நேற்று சுமாரான மழை பெய்துள்ளது. அதனால் நேற்று அறுவடை இடம்பெறவில்லை என்றும் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மழை பெய்ததை விவசாயிகள் வரவேற்றனர். அறுவடை செய்யப்பட்ட நெல் வயல்களில் சிறு தானியப்பயிர்களைப் பயிரிடுவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. சில இடங்களில் நேற்றுக் காலையில் சுபநேரத்தில் அறுவடை செய்யப்பட்ட நெற்பயிர்களை சூடு அடித்துக் கொண்டிருந்த சமயம் திடீரென்று கொட்டிய மழையால் சூடு அடிக்கும் பணிகளும் பாதிக்கப்பட்டன.

நவாலி, அராலி, சங்குவேலி, மானிப்பாய், வட்டுக்கோட்டை போன்ற பகுதிகளில் அநேகமான இடங்களில் இந்த நெய்பயிர்களை அறுவடை செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேசமயம் வடமராட்சியிலும் அறுவடைக்கு தயாராகின்றனர்.

(த-9,17)



## கலாசார மண்டபத்தை ஆளுநர் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுவரும்கலாசாரமண்டப கட்டடத் தொகுதியை வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சார்ள்ஸ்நேற்று முன்தினம்பார்வையிட்டார். அவருடன் யாழ்ப்பாண மாநகரமுதல்வர், இந்தியபிரதித் தூதுவர், இந்திய துணைத் தூதுவர், யாழ்ப்பாண மாநகர ஆணையாளர், ஆளுநரின் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தியஅரசின்நிதியில்இந்திய தூதரகத்தால் அமைக்கப்படும் இந்தக் கட்டடத் தொகுதி பற்றி கட்டட வடிவமைப்பாளர்களும்பொறியியலாளர்களும் ஆளுநருக்கு விளக்க மளித்தனர்.

கட்டடத்தொகுதி விரைவாக மக்கள் பயன்பாட்டுக்குக் கிடைக்கப்பெற வேண்டுமென்றும்கட்டடத்தில்உள்ள வசதிகள், வாய்ப்புகள் தொடர்பில் அனைவருக்கும்தெரியப்படுத்துவதோடு பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல் தொடர்பான வினைத்திறனான நீண்ட காலநிர்வாகப்பொறிமுறை தொடர்பில் மாநகர சபை விரைவாகதிட்டமிடவேண்டுமென்றும் அதற்கான முன்மொழிவுகளைத் தனக்கு விரைவாகஅனுப்பிவைக்குமாறும் ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

நவீனவசதிகளைக்கொண்ட கலாசார கட்டடத்தொகுதியைகலைஞர்களின்மேம்பாட்டுக்கும்சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கும் வினைத் திறனுடன் பயன்படுத்துவது தொடர்பாக அங்கிருந்தவர்களுக்கு ஆளுநர் ஆலோசனை வழங்கினார் என்று ஆளுநரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

(த)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

புதுக்குடியிருப்பு ஜன.18

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. அதிபர் அருட்தந்தை ஏ.றொபின்சன் ஜோசப் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

# வட்டியில்லா கடன் அரசின் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 18

அரசு அல்லாத உயர் கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக வட்டியில்லாக் கடனை வழங்கும் வேலைத்திட்டம் மாத இறுதியில் ஆரம்பிக்கப்படும் என்று உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

உயர் கல்வி அமைச்சுக்கு உட்பட்டதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட 12 உயர் கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பு கற்கை நெறியைத் தொடர்வதற்காக மாணவர் ஒருவர் 8 இலட்சம் ரூபா வட்டி இல்லாக் கடனை பெற்றுக் கொள்ள முடியும்.

2018ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்த அரச பல்கலைக் கழகங்களுக்கான வாய்ப்புக் கிடைக்காத மாணவர்கள் முதல் கட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க முடியும்.

கடன் திட்டத்தின் கீழ் பிரவேசிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்காத 2016ஆம் மற்றும் 2017 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு கடனைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கடனைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரமாக அதிகரிக்கப்படும். இதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள் ளது.

(ஒ.5,24)

## சமுர்த்தித் திணைக்களத்தின் தேசிய தைப்பொங்கல் விழா

அச்சுவேலி, ஜன. 18



சமுர்த்தித் திணைக்களத்தின் தேசிய தைப் பொங்கல் விழா, யாழ்ப்பாண மாவட்ட சமுர்த்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அச்சுவேலியில் நேற்றுக் கொண்டாடப்பட்டது.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், சமுர்த்தித் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், யாழ். மாவட்டச் செயலர், யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி திணைக்கள ஆணையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஆவரங்கால் சமுர்த்தி வங்கியில் பொங்கல் விழாவோடு ஆரம்பமாகி தொடர்ந்து பயனாளிகளுக்கு கடன் வழங்கும் நிகழ்வும், கொடுக்கல் வாங்கல் நிகழ்வும் விருந்தினர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முன்னாள் போராளிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகளை சமுர்த்திப் பயனாளிகளாக உள்வாங்குமாறு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது. அதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பதாக துறைசார் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உறுதியளித்தார்.

'யாழ்ப்பாண முயற்சியாளர்களுக்கு சந்தை வாய்ப்புக்கள் தேசிய ரீதியில் மட்டுமல்ல சர்வதேச ரீதியில் ஏற்படுத்தப்படும்.

பனை உற்பத்திப் பொருள்களை இணையத்தின் மூலம் சந்தைப்படுத்த ஊக்குவிக்கப்படும்' என்று அமைச்சர் தெரிவித்தார். (ஒ.5,20)

சட்டவிரோத

## மணல் அகழ்வு பற்றி திங்கள் ஆராய்வு

முலலைத்தீவு, ஜன. 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது பெரும் பிரச்சினையாக எழுந்துள்ள, சட்டவிரோத மண் அகழ்வைத் தடுப்பது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில்நாளைமறுதினம்திங்கட்கிழமை கலந்துரையாடல் நடத்தவேண்டுமென்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கள்ளவெட்டை, மருதமடு, பேராறு உள்ளிட்டபகுதிகளில் தொடர்ந்து இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் மிக பிரதான கவனஞ் செலுத்தப்பட்டது.

இந்த மாவட்டத்தில் பல பகுதிகளிலும் மணல் அகழும் பிரச்சினை காணப்படுகின்றது. இதற்கு உரிய தீர்வு எட்டவேண்டும் என்று பலரும் வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையில் நாளைமறுதினம் இது பற்றி ஆராயப்படவுள்ளது.

மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் ச.கனகரத்தினம், வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா, காதர் மஸ்தான், புதுக்குடியிருப்பு பிரதேசசபை தவிசாளர்



செ.பிரேம்காந்த் மற்றும் அரச அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

சட்டவிரோத மணல் அகழ்வு, நெல் விலை நிர்ணயம், காணிப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த-246)

# வீடு தேடி வரும் சேவை கோத்தாபயவின் திட்டம்

கொழும்பு, ஜன. 18

வாடிக்கையாளர்கள் சேவை வழங்குநர்களிடம் செல்வதற்குப் பதிலாக இணையத்தினூடாக சேவைகள் மற்றும் அனுமதிகளை வழங்கும் முறையை விரைவில் உருவாக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நேற்று நண்பகல் ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சுக்களின் செயலர்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது பணிப்புரை வழங்கினார்.

அரச பொறிமுறையில் நிலவும் வினைத்திறனின்மை, தாமதம் மற்றும் ஊழல் ஆகியவற்றை இல்லாதொழிக்கும் நோக்கில் அனைத்து அரச நிறுவனங்களையும் ஒரே தரவு வலையமைப்பில் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார்.

சகல அரச நிறுவனங்களிலும் காணப்படும் தரவுகள் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப நிறுவனத்தின் பூரணபங்களிப்புடன் ஒன்று திரட்டப்படும். மக்களுடன் மிக நெருக்கமாக செயற்படும் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் முன்னுரிமை அளித்து இத்தரவு வலையமைப்பு உருவாக்கப்படும்.

இந்த புதிய முறையில் தொழிநுட்பம் மற்றும் இணைய வழி பாவனையினூடாக அடையாள அட்டை, சாரதி அத்தாட்சிப்பத்திரம், கடவுச்சீட்டு, பிறப்பு, இறப்பு மற்றும் விவாக சான்றிதழ்களை பதிவு செய்தல் மற்றும் அரச காணி உறுதிகள் உள்ளிட்ட பல துறைகளில் உடனடி சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தரவுகளை ஒரே வலையமைப்பில் கொண்டு வருவதனூடாக நேரத்தை மீதப்படுத்தி வினைத்திறனின்மை மற்றும் ஊழல் ஆகியவற்றைத் தடுக்க முடியுமென்பதை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். வரி அறவிடுதல் முதல் ஓய்வூதிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வரையான அனைத்து துறைகளின் செயற்பாடுகளையும் தன்னிச்சையாக நிறைவேற்றுவதற்கு வாய்ப்பளித்தல் இதன் முதன்மை எதிர்பார்ப்பாகும்.

அனைத்து தரவுகளும் ஒன்று திரட்டப்பட்டிருப்பதனால் நாட்டிற்கு அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடிய தீர்மானங்களை மேற்கொள்ளும்போது சரியான பகுப்பாய்வை மேற்கொள்ள முடியுமென ஜனாதிபதி வலியுறுத்தினார். பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் அரச நிறுவனங்களில் ஏற்படும் தாமதங்களை உடனடியாக தவிர்த்துக் கொள்ளவும் இதனூடாக வாய்ப்பு கிடைக்கும்.

1919 அரச தகவல் மையத்தினூடாக மக்களுக்கு தகவல்களை வழங்கும் செயற்பாட்டை மீண்டும் செயற்திறனாக்குதல் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

நாட்டில் துரித அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக பல நிறுவன பிரதானிகளாக குறித்த விடயம் சார்ந்த நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் பெரும்பாலானவர்கள் சம்பளமின்றி நாட்டுக்காக சேவையாற்ற அர்ப்பணிப்புடன் உள்ளனர். அவர்களுக்கு அரச அதிகாரிகள் உயர்ந்தபட்ச ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தினார்.

துரிதமாக செயற்படுத்தப்பட வேண்டிய பல நிறுவனங்களுக்கு தலைவர்களை நியமிக்கும்போது அந்தந்த துறைகளில் திறமைமிக்கவர்கள் தொடர்பில் தகவல்கள் உள்ளடங்கிய கோவை ஒன்று காணப்படாமை பெரும் தடையாக அமைந்துள்ளதென ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அரச சேவையில் உள்ள திறமையானவர்களை மிகத் துரிதமாக இனங்கண்டு திறன்கள் குழுவொன்றை உருவாக்குவதற்கான தேவையை ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியதுடன், அவ்வாறானவர்களை உடனடியாக இனங்கண்டு குறித்த குழு தொடர்பான பரிந்துரைகளை விரைவில் சமர்ப்பிக்குமாறு அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் பணிப்புரை வழங்கினார்.

தகவல் தொழிநுட்பம் மற்றும் தத்தமது துறைகளில் உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதனூடாக திறமையான அரச சேவையாளர்களையும் சிறந்த அரச சேவையினையும் உருவாக்க முடியுமென ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இணைந்த சேவையில் மாத்திரமன்றி ஏனைய அரச சேவையாளர்களுக்கும் வெவ்வேறு அரச நிறுவனங்களுக்கும் இடமாற்றம் பெறுவதற்கான பொதுவான கொள்கையொன்று தயாரிக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்ததோடு இதனூடாக பல துறை சார்ந்த அனுபவங்களுடன்கூடிய முழுமையான அரசசேவையாளர்களை உருவாக்க முடியுமெனக் குறிப்பிட்டார். (ஓ.5)

## கொள்ளை
# சந்தேகநபருக்கு 30வரை மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 18

தெல்லிப்பழையில் பெண் பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டுக்குள் மறைந்திருந்த கொள்ளைச்சந்தேகநபர்இருவரும் 30ஆம் திகதி வரையில் மல்லாகம் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இதன் போதுகைதுசெய்யப்பட்ட மற்றைய சந்தேக நபர் விடுவிக்கப்பட்டார்.

மானிப்பாய், கோப்பாய் மற்றும் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்றகொள்ளைச் சம்பவங்களுடன்தொடர்புடைய இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்என்றுபொலிஸார்தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் கொள்ளையிட்ட நகைகளை வவுனியாவில்விற்பனைசெய்துள்ளனர்என்பதை அறிந்து மானிப்பாய் பொலிஸாரால்தேடப்பட்டுவந்தனர். அவர்கள்இருவரும்தெல்லிப்பழையில் உள்ள தமிழ் பெண் உத்தியோகத்தரின் வீட்டில் மறைந்திருக்கின்றார் என்று பொலிஸாருக்குத்தகவல் கிடைத்தது. அதனடிப்படையில்அந்தவீட்டுநேற்று முன்தினம்நண்பகல்முற்றுகையிடப்பட்டு சந்தேகநபர்கள்இருவரும்கைது செய்யப்பட்டனர். வீட்டில் மறைத்து வைத்திருந்த பெண்பொலிஸார்கடந்த இரு மாதங்களுக்கு மேலாக கடமைக்குச்சமுகமளிக்கவில்லை என்றும்தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் கைது செய்யப்படும்போதுஐந்தரைப் பவுண் தங்க நகையும்மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ.5,26)

# காணாமல் ஆக்கப்பட்டோர் ஐ.நா. பிரதிநிதி ஆராய்வு

கொழும்பு, ஜன. 18

காணாமற் போனோரின் குடும்பங்களின் அபிவிருத்திக்கான செயன்முறையைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹெனா சிங்கரை சந்தித்த போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்று பிற்பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வறுமை ஒழிப்பு, கால நிலை மாற்றம், அரச நிறுவனங்களின் டிஜிட்டல் மயமாக்கம், காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினையை முகாமைத்துவம் செய்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

வறுமையை இல்லாதொழிப்பதே அரசின் பிரதான குறிக்கோளாகும். குறைந்த வருமானமுடைய ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் சலுகை விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை பெற்றுக் கொடுப்பதற்கு முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் ஆகியன தொடர்பில் ஜனாதிபதி ஐ.நா. பிரதிநிதியிடம் தெளிவுபடுத்தினார்.

கல்வித்துறை, தகவல் தொழிநுட்ப மேம்பாடு மற்றும் அரச நிறுவனங்களின் டிஜிட்டல் மயமாக்கம் போன்ற செயற்பாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு ஐ.நா. பிரதிநிதி இணக்கம் தெரிவித்தார்.

காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினை பற்றியும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. அந்தக் குடும்பங்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கான செயன்முறையொன்றைத் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அரசியல் அபிலாசைகளுடன் முரண்பட்டுள்ளமையால் தமிழ் அரசியல்வாதிகள் அந்த நடவடிக்கைகளை நிராகரித்துள்ள போதிலும், பாதிப்புக்குட்பட்டுள்ள குடும்பங்களின் நலனுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதே அரசின் எதிர்பார்ப்பாகும் என ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார். (ந)

# மொட்டை ரஞ்சன்

கொழும்பு, ஜன. 18

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க சிறைச்சாலை அதிகாரிகளால் நுகேகொடை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார். சாதாரண கைதிகள்பிரிவில்தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஞ்சன், சிறைச்சாலை விதிமுறைக்கமைய மொட்டையடிக்கப்பட்டுள்ளார். அவர் மொட்டையடிக்கப்பட்ட நிலையில் அழைத்துவரப்பட்ட புகைப்படங்கள் ஊடகங்களில் வெளியாகி 'வைரலாகி' உள்ளன. (ஓ.5)

# பரீட்சை மைய கல்வி முறைமாறவேண்டும்
## கோத்தா தெரிவிப்பு

கொழும்பு ஜன.18

நாட்டின் பயன்மிக்க விழுமியப் பண்புள்ள படைப்புத்திறனுள்ள குடிமக்களை உருவாக்குவதற்கு சாரணர் இயக்கத்தின் குறிக்கோள்கள் காரணமாக அமைகின்றனஎனத்தெரிவித்தார்ஜனாதிபதிகோத்தாபயராஜபக்ஷ.

தேசிய சாரணர் இயக்கத்தின் முதன்மைச் சாரணர் பதவியும் சங்கத்தின் ஆலோசகர் பதவியும்ஜனாதிபதிகோத்தாபயராஜபக்ஷ விடம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து இலங்கை சாரணர் சங்கத்தினால் உத்தியோகபூர்வமாகக்கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கருத்துக்கூறும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின்தற்போதையகல்விமுறைமையை படிப்படியாக மாற்றியமைத்து அதனைமாணவர்மையகல்விமுறைமையாகஉருவாக்கவேண்டும். இதனூடாகவே நாட்டிற்கு தேவையான சவால்களை வெற்றிகொள்ளக்கூடியகுடிமக்களைஉருவாக்க முடியும். தற்போது நாட்டில் காணப்படும் பரீட்சை மைய கல்வி முறையை மாணவர் மைய கல்வி முறைமையாக மாற்றியமைக்க வேண்டும். இதற்கு சாரணர் இயக்கத்தின் பங்களிப்பினை பெற்றுக்கொள்ள முடியும். எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சாரணர் இயக்கத்தின் தலைவர் சந்ரசாகிஸ்ட முதன்மை ஆணையாளர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் பிரதி ஆணையாளர் ஜனபிரித் பெர்னாண்டோ ஆகியோருடன்சிரேஸ்ட மற்றும் பயிலுநர் தர சாரணக் குழுவினர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ந)

# எவ்வாறு வரும் ஆயிரம் ரூபா?

## ஜே.வி.பி. கேள்வி



கொழும்பு, ஜன.18

ஜனாதிபதியின் கட்டளையால் மாத்திரம் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் கிடைத்துவிடாது. அது எவ்வாறு வழங்கப்படும் என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் வலியுறுத்தினார்.

ஜே.வி.பியின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் முற்பகல் பத்தரமுல்லை பெலவத்தையிலுள்ள அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

அதில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளமாக ஆயிரம் ரூபா மார்ச் முதலாம் திகதி முதல் வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ வால் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டளை தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச வேதனமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற கட்டளை ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்டுள்ளது என செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்பது தொழிலாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் , சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரின் நெடுநாள் கோரிக்கையாகும். ஆனால் ஜனாதிபதியின் உத்தரவால் மட்டும் சம்பள அதிகரிப்பைப் பெற்றுவிடமுடியாது.

ஏனெனில் பெருந் தோட்டக் கம்பனிகளில் பெரும்பாலானவை தனியார் வசமே இருக்கின்றன.

தோட்டத்தொழிலாளர்களுக்கு தற்போது நாள்சம்பளமாக 750 ரூபா வழங்கப்பட்டுவரும் நிலையில் மேலதிகமாக எவ்வாறு 250 ரூபா வழங்கப்படும் என்பது தொடர்பில் அரசு தெளிவுபடுத்த வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இது தேர்தலுக்காக போடப்பட்ட குண்டாகவே கருதப்படும்.

பெருந்தோட்டங்களில் 1 லட்சத்து 50 ஆயிரம்பேர்வரை தொழில்புரிகின்றனர். அவர்களுக்கு 250 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குவதற்காக மாதமொன்றுக்கு 37.5 மில்லியன் ரூபா மேலதிக நிதியாக தேவைப்படுகின்றது.

பெருந்தோட்டக்கம்பனிகளுக்கு வரி உட்பட பல நிவாரணங்களை வழங்குவதன் மூலம் இதனை ஈடு செய்யலாம் என அமைச்சர் ரமேஷ் பத்திரணவும், தேயிலை சபையின் ஊடாக பெறப்படும் கடன் ஊடாகவே இந்தத் தொகை வழங்கப்படும் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பி டுகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்ற முயற்சிக்காமல் பொறிமுறை என்னவென்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும்-என்றார். (எ-44)

## மதவாதத்தைத் தூண்டிவிட்டே ஆட்சியேறினர் ராஜபக்சவினர்

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.18

ராஜபக்ஷ குடும்பத்தினர், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களை மையப்படுத்தி மதவாதத்தைத் தூண்டியே மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறினர் இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜே.சி.அலவத்துவல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்து இரண்டு மாதங்கள் நிறைவடைந்துள்ளன. மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புபட்டவர்களைத் தாம் ஆட்சிக்கு வந்த இரு நாள்களுள் கைதுசெய்துசட்டத்தின்முன்நிறுத்துவோம் என தற்போதைய ஆளும் தரப்பினர் தேர்தல் பரப்புஐர நடவடிக்கைகளின் போது கூறிக்கொண்டனர்.

ஆனால் அதற்கான எந்த நடவடிக்கைகளும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை. பெருமளவில் நிதி செலவிடப்பட்டு கோப் குழுவின் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. கோப் குழு அறிக்கையும் தயாரிக்கப்பட்டது. இந்த அரசு அதனை மூடிமறைக்கும் வகையிலான செயற்பாடுகளையே மேற்கொண்டு வருகின்றது.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்களை மையமாக வைத்து அரசியல் இலாபம் பெற்றே ராஜபக்ஷ குடும்பத்தினர் மீண்டும் ஆட்சிக்கு வந்தனர். தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளின் போது உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்களை மையமாகக் கொண்டுமதுஅரசின்மீதுகுற்றஞ்சுமத்தினர். தாம் ஆட்சிக்கு வந்தால் தாக்குதல்களுடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று அவர்கள் கூறினர்.

இப்போது அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா? எதற்காக இதுவரையில் எந்த நடவடிக்கைகளையும் அவர்கள் முன்னெடுக்கவில்லை?-என்றார். (எ-22)

## திருவாசக முற்றோதல்

கொடிகாமம், ஜன.18

கிளிநொச்சி கந்தன் குளம் செல்வாநகரில் அமைந்துள்ள ஓம் சக்தி வேல் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ-159)

## சிகரெட்டுக்களுடன் ஒருவர் நேற்று கைது

கொழும்பு, ஜன.18

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு தொகை சிகரெட்டுக்களை டுபாயில் இருந்து நாட்டுக்கு கொண்டுவந்த இலங்கை நாட்வர் ஒருவரை விமான நிலையபோதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர். சந்தேக நபரைநேற்றுக் கைதுசெய்தனர் என விமான நிலைய போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். கிளிநொச்சி, பரந்தன் பகுதியை சேர்ந்த 26 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரின் பயண பையில் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 10 ஆயிரத்து 800 வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## கிராம அலுவலர் பிரிவுகளில் தலா ஒரு வீட்டுக்கு அடிக்கல்

கொழும்பு, ஜன.18

நாட்டில் உள்ள 14 ஆயிரத்து 22 கிராம சேவகர் பிரிவுகளிலும் ஒவ்வொரு வீடுகளை அமைக்கும் வேலைத் திட்டம் இந்த மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும். மாத இறுதிக்குள் அனைத்து வீடுகளுக்கும் அடிக்கல் நடப்படும் என்று வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் ஹிந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் உள்ள 14 ஆயிரத்து 22 கிராம சேவகர் பிரிவுகளிலும் ஒவ்வொரு வீட்டை அமைப்பதற்கான அறிவிப்பை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டிருந்தார். அதன்படி அந்த வேலைத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பில் ஆலோசனைகள் இடம் பெற்று வருகின்றன.

14 ஆயிரத்து 22 வீடுகளை அமைப்பதற்காக 8420 மில்லியன் நிதி அவசியமாகும். அந்த வீடுகள் அனைத்தும் சுற்றாடலுக்கு பாதுகாப்பாகவே அமைக்கப்படும். வீடுகள் மிகவும் வறியவர்களுக்கும், சமுர்த்தி உதவியாளர்களுக்கும் வழங்கப்படும். வீடுகள் இல்லாத பிரச்சினை காரணமாக பல மாணவர்கள் அவர்களது உயர் கல்வியைத் தொடர முடியாது பணிக்குச் சென்றுள்ளனர். அவ்வாறான குடும்பங்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

இந்த வீடமைப்புத் திட்டத்துக்கான அடிக்கல் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் நடப்படும் என்பதுடன், 2020ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்படும். இதேவேளை, கடந்த அரசின் காலத்தில் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வீடமைப்புத்துறை அமைச்சராகவிருந்தார். நாடு முழுவதும் சுவரொட்டிகளை ஒட்டி வீடுகள் அமைக்கப்பட்டுள்ளது என்று பல பரப்புரைகளை மேற்கொண்டிருந்தார்.

கடந்த அரசின் காலத்தில் 7 ஆயிரம் வீடுகளே அமைக்கப்பட்டுள்ளன. அதிலும் 5 ஆயிரம் வீடுகள்தான் முழுமைப்படுத்தப்பட்ட வீடுகள். நாம் அவ்வாறில்லை நடைமுறைக்கு ஏற்ற வகையிலும் மக்களுக்கு பயனுள்ள வகையிலும் வேலைத்திட்டங்களை வகுத்து வீடுகளை அமைப்போம்-என்றார். (எ-24)

## 65 எம்.பிக்களில் 52 பேர் சஜித்துக்கே ஆதரவாம்

கொழும்பு, ஜன.18

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்துக்கு வந்த 65 பேரில் 52 பேர் சஜித்துக்கே ஆதரவு வழங்கினர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பின்ர்கள் கூட்டம் தொடர்பாகக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்தை அறிவதற்கு விருப்புத் தொடர்பான கணிப்பீடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

கூட்டத்துக்கு சமுகமளித்திருந்த 65 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 52 பேர் சஜித்துக்கு தலைமைத்துவத்தை வழங்க வேண்டும் என்ற கருத்தையே முன்வைத்துள்ளனர்.

கட்சியிலுள்ள பெரும்பான்மையினரின் கருத்துக்கு மதிப்பளித்து, தேவையான நடவடிக்கைகளை கட்சியின் சட்டத்தின்படி மேற்கொள்ள மத்திய செயற்குழுவையும், கட்சி மாநாட்டையும் கூட்ட வேண்டும்-என்றார். (எ)

## வெட்டுக் காயங்களுடன் பெண் சிகிச்சைக்கு சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 18
ஊரெழுப் பகுதியில் குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடால், கணவரால் வெட்டப்பட்டதாகத் தெரிவித்து மனைவி சிகிச்சைக் காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

ஊரெழு வீரகத்தி விநாயகர் வீதியில் இடம்பெற்ற கத்தி வெட்டில் 32 வயதான குடும்பப் பெண்ணே படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கழுத்து மற்றும் கையில் வெட்டுக் காயம் காணப்படுவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஒ.5,105)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் ஜன.18
இணுவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் புதிய ஆண்டுக்கான பொதுக்கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது. அதிபரும் பழையமாணவர் சங்கத் தலைவருமாகிய எஸ்.தேவதயாளன் தலைமையில் இன்று பி.ப 3 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பழைய மாணவர்கள் மற்றும் கல்லூரியின் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

## மாட்டுவண்டி சவாரி

கிளிநொச்சி ஜன.18
வட மாகாணத்தில் இந்த ஆண்டின் முதல் மாட்டு வண்டிச் சவாரி கிளிநொச்சி அக்கராயன் மத்திய சவாரித்திடலில் நாளை நடைபெறவுள்ளது. கிளிநொச்சி மாவட்ட மாட்டு வண்டிச் சவாரிச்சங்கத்தின் அனுசரணையுடன் பூநகரி விவசாயப் பெருமக்கள் நடாத்தும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டியே இவ்வாறு நடைபெறவுள்ளது. (ந)

## கலைத்தூது கல்லூரியின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் ஜன.18
திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 11 வது பரிசளிப்பு விழா நாளை இடம்பெறவுள்ளது. நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் கல்லூரியின் அதிபர் திருமதி.மேரி அஞ்சலா அல்போன்ஸ் தலைமையில் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் பிரான்சிஸ் சேவியர் அன்ரனும் சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக்கல்வி அலுவலக அழகியல் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி. கமலராணி ஜெயபாலசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. பரிசளிப்பு விழாவுக்கான அனுசரணையை கனடா திருமறைக்கலாமன்றம் வழங்குகின்றமைகுறிப்பிடத்தக்கது. (ந)

# மகாராணிவிருது ஈழ 'மாயா'வுக்கு!



லண்டன், ஜன. 18
இலங்கையைபூர்வீகமாக கொண்ட பிரபல ஆங்கில பாடகியான மாயா எனப்படும் மாதங்கி அருள்பிரகாசம் பிரிட்டன் மகாராணியின் கௌரவ விருதை பெற்றுள்ளார். பிரிட்டன் மகாராணி இரண்டாவது எலிசபெத்தின் பிறந்த தினத்தை முன்னிட்டு இசைத்துறையில் பங்களிப்பு செய்தமைக்காக கௌரவ விருது வழங்கப்பட்டுள்ளது.

விருதுக்கான பதக்கத்தை அரண்மனையில்இளவரசர் வில்லியம்ஸ், கடந்த செவ்வாய் கிழமை மாதங்கிக்கு அணிவித்துள்ளார்.

உள்நாட்டுப் போர் காரணமாக மாதங்கி 10 வயதாக இருக்கும் போது, அவரது குடும்பம் அகதிகளாக லண்டனில் குடியேறியுள்ளனர். மேலும்இவரதுதந்தையான அருளர் என்று அழைக்கப்படும், அருள்பிரகாசம் ஈரோஸ் அமைப்பின்ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவர் என்பதும் அண்மையில் யாழ்ப்பாணத்தில் காலமானார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## சந்திரிகாவின் பதவி பிடுங்கப்பட்டது

கொழும்பு, ஜன. 18
அத்தனகல தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை சிறிலங்கா சுதந்திரக் கட்சி நீக்கியுள்ளது. அந்தக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவரான மைத்திரிபால சிறிசேன தலைமையில்கட்சிதலைமையகத்தில் நேற்றுமுன்தினம்இரவுநடைபெற்றது. சந்திரிகாவை அமைப்பாளர் பதவியில் நீக்கும் தீர்மானம் ஏகமானதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்தனகல தொகுதியின் புதிய அமைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவன்னவை நியமிப்பதற்கும் கட்சியின் மத்திய செயற்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி கோத்தாபயவை ஆதரிப்பதற்கு சுதந்திரக் கட்சி தீர்மானித்திருந்த நிலையில் அதற்கு சந்திரிகா கடும் எதிர்ப்பை வெளியிட்டு புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கினார். கட்சிக் கட்டுப்பாட்டை மீறியமைக்காக அவர் நீக்கப்பட்டுள்ளார். (ஒ,5,24)


## தனது 37 ஆம் ஆண்டு நிறைவில் அபிவிருத்தி லொத்தர் சபை

வாழ்வை ஒளிமயமாக்கும் அபிவிருத்தி லொத்தர் சபை இந்த ஜனவரி மாதம் 19ஆம் திகதியன்று தனது 37ஆம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடவுள்ளது. இலங்கை வாழ் மக்களுக்காக உயர் நோக்கங்களை முன்னிலைப்படுத்தி 1983ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி லொத்தர் நிலையம் அன்றிலிருந்து இன்று வரை கடந்து வந்த தனது 37 வருடக் காலப்பகுதியினுள் அடையப் பெற்ற மைற்கற்களைப் போன்றே அது உருவாக்கிய வெற்றியாளர்களுக்கும் அளவே இல்லை. இந்த நாட்டு மக்கள் லொத்தர் சீட்டொன்றிற்காக செலவிடப்படும் இருபது ரூபாவினை மீளவும் அவர்களுக்கு மத்தியில் கொண்டு செல்லும் அபிவிருத்தி லொத்தர் சபை, இந்நாட்டில் அநேகமானவர்களின் வாழ்க்கையை ஒரே இரவில் அதிர்ஷ்டத்துக்கு உட்படுத்துவதோடு, நாட்டிற்காக சுகாதார மற்றும் கல்வி சார் பணிகளுக்கான பங்களிப்புக்களையும் வழங்குகின்றது.




ஜனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மூலம் 2.2 மில்லியன் ரூபா அளவுடைய நிதியை முதலீடு செய்து இச் சபை ஆரம்பிக்கப்படுவது ஜனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல நிதியத்தின் நிதியியல் சார் அடிப்படையை பலப்படுத்துவதே அதன் இறுதி எதிர்பார்ப்பாகும். அதற்கமைய ஜனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக தனது பங்கிலாபத்தை நன்கொடை செய்யும் ஒரே அரச நிறுவனமாக அபிவிருத்தி லொத்தர் சபை விளங்குகின்றது. அபிவிருத்தி லொத்தர் சபை அதன் ஆரம்ப காலங்களில் அபிவிருத்தி லொத்தர் நிலையம் என அறிமுகப்படுத்தப்பட்டதோடு அதன் பின்னர் அபிவிருத்தி லொத்தர் நம்பிக்கைப் பொறுப்பு என 1993ஆம் ஆண்டில் பெயரிடப்பட்டது. 1997 ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதியன்று 1997 இலக்கம் 20 இனையுடைய அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தின் மூலம் இந் நம்பிக்கைப் பொறுப்பு அபிவிருத்தி லொத்தர் சபை என பெயர் மாற்றம் பெற்றது.

நாளுக்கு நாள் நாட்டிற்காக வழங்கிய பங்களிப்பினை துரிதப்படுத்தி முன்னோக்கிச் சென்ற அபிவிருத்தி லொத்தர் சபை ஆரம்பம் முதல் இன்று வரை பல்கலைக்கழக மாணவர்களின் உயர் கல்விக்காக வழங்கிய மகாபொல புலமைப் பரிசில்களின் அளவு மூன்று இலட்சத்து இருபத்தைந்தினை எட்டியுள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டில் மாத்திரம் ஜனாதிபதி நிதியத்துக்கு வழங்கிய பங்களிப்புத் தொகை சுமார் 235 கோடியாகும்.

அவ்வாறான பங்களிப்பினை வழங்குவதற்கு அபிவிருத்தி லொத்தர் சபைக்கு சக்தியாக அமைந்த 'சனிக் கிழமை அதிர்ஷ்டம்', 'அபிவிருத்தி அதிர்ஷ்டம்', 'லக்கின அதிர்ஷ்டம்', 'ஜயோதா', 'கோடிபதி கப்ருக', 'சுப்பர் போல்', 'அத கோடிபதி' மற்றும் உடனடி லொத்தர் சீட்டுக்கள் என்பன அபிவிருத்தி லொத்தர் சபைக் குடும்பத்தின் லொத்தர் சீட்டுக்களினாலாகும்.

அவ்வாறான இணையற்ற பணியில் ஈடுபட்டு அதிர்ஷ்டத்தின் வைகறையை சுமந்து நாடு பூராகவும் செல்லும் அபிவிருத்தி லொத்தர் சபை அதன் அதிர்ஷ்டத்தினை பெறுகின்றவர்கள் அதனை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் மாத்திரமன்றி அனைவரும் அடைந்து கொள்கின்றார்கள். அபிவிருத்தி லொத்தர் விற்பனை வலையமைப்புடன் கைகோர்த்து நிற்கும் விநியோகஸ்த விற்பனை முகவர்கள் 89 பேரும், 2500க்கும் மேற்பட்ட விற்பனை முகவர்களுக்கும் மற்றும் அதன் கீழ் சேவையாற்றும் இருபதாயிரத்துக்கும் அதிகமான விற்பனை உதவியாளர்களுக்கும் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த பிறப்பிடமாக அபிவிருத்தி லொத்தர் சபை திகழ்கின்றது. 37 வருடங்கள் பூராகவும் அபிவிருத்தி லொத்தர் சபை மீது ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் வைத்துள்ள நம்பிக்கை அவ்வாறே தொடர்ந்தும் பேணிச் செல்லப்படும் என 37 ஆண்டு நிறைவினைக் கொண்டாடுகின்ற அபிவிருத்தி லொத்தர் சபை தனது அறிவித்தலை விடுத்துள்ளது.


## குழந்தைப் பேறின்மையும் அதிநவீன சிகிச்சைகளும்



வெள்ளவத்தை ரோயல் மருத்துவமனையின் இலவச மருத்துவ முகாம், இம்மாதம் 25ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலும் மறுதினம் 26ஆம் திகதி ஞாயிறன்று கண்டியிலும் நடைபெறவுள்ளது. இந்த முகாமில் கலந்துகொண்டு, குழந்தை யின்மைக்கு முகங்கொடுத்திருக்கும் தம்பதியருக்கு இலவச ஆலோசனை வழங்கவிருக்கிறார் உலகப் புகழ் பெற்ற செயன்முறைக் கருத்தரிப்பு சிகிச்சை நிபுணர் மருத்துவர் கீதா ஹரிப்ரியா! சென்னை, சேத்துப்பட்டில் இயங்கிவரும் பிரசாந்த் செயன்முறைக் கருத்தரிப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தலைமை மருத்துவர் இவர்.

குழந்தையின்மை மற்றும் அதற்கான காரணிகள் குறித்து அவர் தெரிவித்த கருத்துக்கள் இதோ!

'குழந்தையின்மைக்குப் பல குறைபாடுகள் இருந்தாலும் வயது ஒரு மிக முக்கிய காரணம். இலங்கைப் பெண்கள் குறிப்பாகத் தமிழ்ப் பெண்கள் அதிலும் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த பெண்கள் முப்பது வயதுக்கு மேலேயே திருமணம் செய்துகொள்வதை என்னைச் சந்திக்க வரும் தம்பதியரை வைத்துப் புரிந்துகொள்கிறேன்.

முன்னைய காலங்களில் முப்பத்தைந்து வயதுக்குள்ளான பெண்களுக்கு மகப்பேறுக்கான அறிகுறிகள் எதுவும் இல்லாதவிடத்து பரிசோதனைகள் செய்து கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது.

ஆனால், இன்று அப்படியல்ல! 28 வயதே ஆன பெண்களாக இருந்தாலும் சரி, திருமணமாகி ஒரு வருடத்துக்குள் குழந்தைப் பேற்றுக்கான அறிகுறி இல்லாதவிடத்து பரிசோதனை செய்துகொள்ளவேண்டும் என, குழந்தையின்மைக்கான சிகிச்சைத் துறை அறிவுறுத்துகிறது. வெகுவாக மாறியிருக்கும் வாழ்க்கை முறையே இதற்குக் காரணம்.

சில பெண்களுக்கு 'எண்டோமெட்ரியோசிஸ்' மற்றும் 'சொக்லெட் சிஸ்ட்' எனப்படும் இரத்தக் கட்டிகளின் பாதிப்பும் இருக்கும். இளம் வயதில் மகப்பேறின்மைக்கு முகங்கொடுக்கும் பெண்களில் பலருக்கும் இது பொதுவான காரணியாக விளங்குகிறது.

இந்த இரத்தக் கட்டிகள் கருமுட்டை வளரும் பகுதிகளில் படர்ந்து முட்டை வளர்ச்சியை அழிக்கிறது. எனவே, இதுபோன்ற காரணிகள் இருப்பவர்களுக்கு, வயதுப் பிரச்சினையும் சேர்ந்துகொண்டால் அவர்களின் கருமுட்டை உற்பத்தி பாதிக்கப்படுவதுடன், தரமற்ற முட்டைகளே உருவாகவும் வாய்ப்பு ஏற்படும்.

எனவே, முப்பது வயதுகளுக்குள் குழந்தை பிறக்கும் வாய்ப்பு இல்லாமல் போகும் பட்சத்தில், செயன்முறைக் கருத்தரிப்பு மூலம் குழந்தை பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், காலத்தை நீங்கள் தள்ளிப் போடத் தள்ளிப் போட, தாய்மைக்கான வாய்ப்பும் உங்களை விட்டுத் தள்ளிப் போய்க்கொண்டே இருக்கும்.

சரி.... செயன்முறைக் கருத்தரிப்பு மூலம் குழந்தை பெற்றுக்கொள்ள முடிவெடுத்துவிட்டீர்கள். அடுத்து என்ன செய்ய வேண்டும்? உங்களுக்குப் பொருத்தமான மருத்துவர் மற்றும் மருத்துவமனையை அடையாளம் கண்டு, அவரின், அந்த மருத்துவமனையின் உதவியுடன் உங்கள் கனவை நனவாக்கிக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

அடுத்து, நீங்கள் தெரிவுசெய்யும் மருத்துவரின், 'எம்ப்ரியோலஜிஸ்ட்' எனப்படும் மருத்துவ விஞ்ஞானியின் அனுபவம் குறித்தும் நீங்கள் அவதானம் செலுத்த வேண்டும்.

செயன்முறைக் கருத்தரிப்பு செய்துகொள்ளும் அல்லது செய்துகொள்ள விரும்பும் தம்பதியினருக்கு, 'எனது முட்டை ஃ உயிரணு தான் பயன்படுத்தப்படுகிறதா?' என்ற சந்தேகம் எப்போதும் இருக்கும். அதைத் தவிர்ப்பதற்கு, ஒவ்வொரு சிறு சிறு பணிகளுக்கும் பிரத்தியேக தாதியர், ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி இருக்கும் பட்சத்தில் எக்காரணம் கொண்டும் இந்தத் தடுமாற்றங்கள் நிகழ வாய்ப்பே இருக்காது.

வெள்ளவத்தை ரோயல் மருத்துவமனை நடத்தும் இலவச மருத்துவ முகாம் யாழிலும் கண்டியிலும் நடைபெறுகிறது. நீங்கள் ஏற்கனவே இலங்கையில் மகப்பேறின்மைக்கான பரிசோதனைகளைச் செய்திருந்தால் அந்த அறிக்கைகளுடன் என்னை வந்து சந்திக்கலாம். உங்களுக்குப் பொருத்தமான சிகிச்சை முறைகள் பற்றி அறியத் தருகிறேன்.

ஒருவேளை இன்னும் எதுவிதமான பரிசோதனைகளும் செய்யாதவர்களாக இருந்தால் கூட, நீங்கள் செய்துகொள்ள வேண்டிய பரிசோதனைகள் குறித்தும் விளக்குகிறேன். அவற்றைச் செய்து உரிய மருத்துவ ஆலோசனை பெற்றுக்கொண்டால், உங்கள் வீட்டிலும் வெகுவிரைவில் குழந்தையின் மழலைச் சத்தம் கேட்கும் என்றுள்ளார்.

## மைத்துனர் கொலை:
# குற்றவாளிக்கு 10 வருடச் சிறை!
### யாழ். மேல்நீதிமன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 18
சந்தர்ப்ப சூழ்நிலையால் மைத்துனனைக் கோடரியால் வெட்டிக் காயப்படுத்தி அவரின் உயிரைப் போக்கியவருக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்று நேற்று 10 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

2016ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி குப்பிளான், சமாதி கோவிலடியில் சீவரத்தினம் ஜீவராஜ் (வயது 38) என்பவரே கொல்லப்பட்டார். கொலைக் குற்றச்சாட்டில் அவருடைய மைத்துனன் ரத்தினம் நகுலேஸ்வரன் கைதுசெய்யப்பட்டார். அவர் கோடரியால் வெட்டியபோது ஜீவராஜின் மார்பில் கோடாரி பாய்ந்து படுகாயமடைந்தார். யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மூன்று நாள்களின் பின்னர் உயிரிழந்தார்.

நகுலேஸ்வரனைக் கைதுசெய்த சுன்னாகம் பொலிஸார் மல்லாகம் நீதவானிடம் முன்னிலைப்படுத்தியபோது மன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். சுருக்கமுறையற்ற விசாரணையின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

விசாரணைக் கட்டளையின் அடிப்படையில் எதிரிக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டுச் சுமத்தி யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் கடந்த ஜூலை 15ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தது. யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் கிழக்கு விசாரிக்கப் பட்டு வந்தது.

வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் சாட்சிகளை நெறிப்படுத்தினார். எதிரி சார்பில் அரச செலவில் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி சிவலிங்கம் ரிஷிகேசன் முன்னிலையானார். உயிரிழந்தவரின் மனைவி உள்ளிட்ட சிவில் சாட்சிகள், பொலிஸ் சாட்சிகள் மற்றும் நிபுணத்துவ சாட்சிய விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது.

எதிரி மன்றில் முன்னிலையானார். "இரண்டு தரப்புக்கும் ஆறாத பகை காணப்பட்டிருந்தபோதும் சம்பவ தினத்தன்று மாலை மங்கிய வேளையில் திடீரென ஏற்ப்பட்ட தர்க்கத்தால் உணர்ச்சி வசப்பட்டு, தன்னிலை மறந்து, தம்மைப் பாதுகாக்கும் நோக்கில், எதிரி செயற்பட்டிருக்கின்றார் என்று அளிக்கப்பட்ட விளக்கம், அனைத்துச் சாட்சியங்களின் தொகுப்பின் போதும், பகுப்பின் போதும் தெளிவாகின்றது. எனவே ஜீவராஜை கொலை செய்யவேண்டும் என்ற நோக்கம் எதிரியிடம் கணப்பட்டதாக நிரூபிக்கப்படாத நிலையில், எதிரி தண்டனைச் சட்டக்கோவை 296ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படவேண்டியவர் என்ற குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்படுகிறார். எனினும், ஜீவராஜுக்கு உயிரிழப்பை ஏற்படுத்தியமையால் குறைந்த குற்றச்சாட்டாகிய கொலையாகாத குற்றத்துக்கிடமான 'மனித உயிர் போக்கல்' என்ற குற்றத்தை இழைத்தமையால் தண்டனைச் சட்டக்கோவை 297ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படவேண்டிய தவறிழைத்ததான குற்றச்சாட்டுக்கு எதிரி குற்றவாளியாக மன்றால் காணப்படுகிறார்" என்று தெரிவித்த நீதிமன்று, நகுலேஸ்வரனுக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. (த)

# முறைப்பாடு செய்தோருக்கு மணல்கொள்ளையர் அச்சுறுத்தல்
## பொலிஸாரும் உடந்தையா? என்று பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் விசனம்

முல்லைத்தீவு, ஜன. 18
"முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கமநலசேவை நிலையத்துக்கு உட்பட்ட மருதமடுக் குளம் மற்றும் கள்ள வெட்டை குளங்களுக்கு அருகாமையில் மணல் அகழ்வு இடம்பெறுவதால், குளங்கள் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இவை பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்தால், மணல் கடத்தல்காரர்கள் எம்மை அச்சுறுத்துகின்றனர். நாம் தான் முறைப்பாடு செய்தோம் என்ற தகவல்கள் எப்படி அவர்களுக்குக் கசிகின்றன? என்று பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதன்போதே இந்த விடயத்தைப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

"தொடர் மணல் அகழ்வால் மருதமடுக் குளம் உடைப்பெடுக்கும் நிலை உருவாகியுள்ளது.

குளம் உடைப்பெடுத்தால் இந்தக் குளத்தின் கீழ் சுமார் 340 ஏக்கர் விவசாயச் செய்கை பாதிக்கப்படும். கைவேலி, மருதமடு, ஆத்திப் பிலவு, கோம்பாவில், பாண்டியன் வெளி, தேவிபுரம் உட்பட்ட பல கிராமங்களும் நீரில் மூழ்கும் அபாய நிலை உருவாகும்.

அதேவேளை, கள்ளவெட்டை குளக் கட்டுக்கு அருகிலும் பெருமளவில் மணல் அகழ்வு இடம்பெறுகின்றது. இந்தச் செயற்பாடு தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம், நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலர், மீனவ சங்கத் தலைவர் ஆகியோர் முறைப்பாடு செய்திருந்தனர். அவர்களுக்கு, மணல் அகழ்பவர்கள் என்று தம்மை அடையாளப்படுத்திய நபர்கள் அலைபேசி ஊடாகக் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். கொலை மிரட்டல் தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்டபோதும், பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை" என்றும் அந்தப் பிரதிநிதிகள் இதன்போது மேலும் தெரிவித்தனர்.

(த-246)


அரவிந்தசாமி

# வெளியானது அரவிந்தசாமியின் எம்.ஜி.ஆர். தோற்றம்

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் வாழ்க்கை, 'தலைவி' என்ற பெயரில் படமாகிறது. தமிழில் 'தாம்தூம்' படத்தில் கதாநாயகியாக வந்த பிரபல இந்தி நடிகை கங்கனா ரணாவத், ஜெயலலிதா வேடத்தில் நடிக்கிறார். இந்தக் கதாபாத்திரத்துக்காக பரதநாட்டியம் கற்று நடித்து வருகிறார்.

இந்தப் படம் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய 3 மொழிகளில் தயாராகிறது.

"தலைவி' படத்தில் எம்.ஜி.ஆர். வேடத்தில் நடிக்க அரவிந்தசாமியைத் தேர்வு செய்தனர்.

எம்.ஜி.ஆர். கதாபாத்திரத்துக்கு அவர் பொருத்தமாக இருப்பார் என்று படக் குழுவினர் அணுகியபோது உடனே ஒப்புக்கொண்டார்.

அரவிந்த சாமியின் எம்.ஜி.ஆர். தோற்றத்தை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர். அந்தப் புகைப்படம் சமூக வலைத் தளத்தில் வைரலாகிப் பலரும் பாராட்டி வருகிறார்கள்.

## துருக்கிய பழமொழி

**காடுகளில் உள்ள மரங்கள் அழிந்து கொண்டே வந்தன. ஆனால் மரங்களோ மீண்டும் மீண்டும் கோடரிக்கே வாக்களித்தன. ஏனெனில் மரத்தினால் செய்யப்பட்ட தன் கைப்பிடியைக் காட்டி "நானும் உங்களில் ஒருவன் தான்" என கோடரி ஏமாற்றியதை மரங்கள் முழுமையாக நம்பின.**



# 7 நாள்கள் காலக்கெடு கோத்தாபய விதிப்பு

கொழும்பு, ஜன. 18
பல்வேறு காரணங்களுக்காக சட்டரீதியற்ற முறையில் சேவையிலிருந்து விலகிச் சென்றமுப்படைகளின் உறுப்பினர்களுக்கு மீண்டும் படையினரிடம் சரணடைவதற்கான பொதுமன்னிப்பு காலமொன்றை பிரகடனப்படுத்துவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் கட்டளைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 7 நாள்கள் பொதுமன்னிப்பு காலமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் சேவையிலிருந்து விலகிச்சென்றமுப்படை உறுப்பினர்களுக்கே இந்த பொதுமன்னிப்பு காலம் ஏற்புடையதாகும்.

இந்த பொதுமன்னிப்பு காலத்திற்குள் சட்டரீதியாக படைகளிலிருந்து விலகிச் செல்லவோ அல்லது மீண்டும் முப்படைகளில் இணைந்துதமதுநாட்டிற்காகவும்மக்களுக்காகவும் சேவையாற்றவோ இவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும். (ஒ.5)

# சிறிமோகன் கிளிநொச்சிக்கு: சத்தியசீலன் திறைசேரிக்கு!

யாழ்ப்பாணம், ஜன. 18
வடக்கு மாகாண தொழில் திணைக்கள ஆணையாளர் கே.சிறிமோகன் உடன் நடைமுறைக்குவரும் வகையில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட நிர்வாகத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலராகப் பணியாற்றிய நிலையில் வடக்கு மாகாண தொழில் திணைக்கள ஆணையாளராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்தநிலையில் தற்போது கிளிநொச்சிக்கு மேலதிக மாவட்டச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் மேலதிக மாவட்டச் செயலராகப் பணியாற்றும் எஸ்.சத்தியசீலன் உடன் நடைமுறைக்குவரும் வகையில் மத்திய திறைசேரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-105)

## கொடி...

கட்சி சார்பில் போட்டியிட்டவர் என்று கண்டறியப்பட்டுள்ளது. யாழ்ப்பாண நகரில் மருத்துவமனை வீதியில் கடந்த 14ஆம் திகதி இரு தடவைகள் பௌத்த விவகார கொடியை நட்டதால் ஏற்பட்ட சர்ச்சை காரணமாக அதனை நட்டவரைப் பொலிஸார் தேடிவந்தனர். அதனடிப்படையில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

அவர் மனநலம் குன்றியவர் என்று கூறப்பட்ட நிலையில் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாண மாநகர சபையில் போட்டியிட்டவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-105)

## பொறி...

சேர்க்கப்பட்டுள்ளார்.

இராசையா பாஸ்கரன் (வயது -53 என்பவரே படுகாயமடைந்த நிலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 6 மணியளவில் வீட்டுக்கு அருகில் உள்ள பிரதேசத்தில் தனது மாடுகளை தேடிச் சென்றுள்ளார். அந்தப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த பொறி வெடி வெடித்தே படுகாயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் பளை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். பளைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஒ.5,105)

## சறுக்கி...

வாழ் தெற்கில் நேற்று மு.ப. 11 மணிக்கு இடம்பெற்றுள்ளது. அதேயிடத்தைச் சேர்ந்த சிவயோகலிங்கம் அன்னம்மா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கோயிலுக்குச் செல்வதற்காக கிணற்றடியில் குளிக்கச் சென்றபோது தவறி வீழ்ந்ததாகவும், அவர் உடனடியாக கொடிகாமம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5,9,159)

## இனி...

சிவில் விமான சேவைகள் விதிமுறைகளுக்கு அமைய ட்ரோன் கமராக்களை பயன்படுத்தலாம் என்று சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் 25 ஆண்டுகளின் பின்னர் தனியார் உலங்குவானூர்திகள் கொழும்பு காலிமுகத்திடலில்ல உள்ள பாதுகாப்பு அமைச்சின் விளையாட்டுத் திடலில் இறங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## போர்க்...

எதிர்ப்புக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கொமடோர் டி.கே.பி.தசநாயக்கவுக்கு ரியர் அட்மிரல் தரப் பதவி உயர்வை ஜனாதிபதி கோத்தாபய வழங்கியுள்ளார். கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் உள்பட 11 இளைஞர்கள் வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கிய சம்பவத்துடன் டி.கே.பி.தசநாயக்கவுக்குத் தொடர்பு இருக்கின்றது எனக் குற்றம் சுமத்தி குற்றவியல் விசாரணைப் பிரிவு அவருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து அவரைக் கைது செய்திருந்தது. பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், அவருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மாவை. எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ஆட்சியில் இருப்பவர்கள் மற்றும் இராணுவத் தளபதிகள் ஐ.நா. மனித உரிமைகள் சபை உள்ளிட்ட சர்வதேச மனித உரிமை அமைப்புக்களால் போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என்று குற்றம்சாட்டப்பட்டவர்கள். அப்பட்டிப்பட்ட ஓர் அரசின் கீழ் மேலும் பல இராணுவத்தினருக்குப் பதவி உயர்வு வழங்கப்படுகின்றது. இவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இதைத்தான் செய்வார்கள் என்று எங்களுக்கு ஏற்கனவே தெரியும்.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட டி.கே.பி.தசநாயக்கவுக்கு ஜனாதிபதியால் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தி வெளியாகியுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளைக் கண்டிக்க வேண்டும். ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டுள்ள மக்கள், மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கின்ற தரப்பினர் என்று அனைவரும் இவ்வாறான செயல்களைக் கண்டிக்க வேண்டும். நாங்களும் இதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். எங்களுடைய கடும் எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கின்றோம் -என்றார். (ஒ.5,22)

## காட்டுமிராண்டிப்...

பட்டுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி அவர்களிடம் விசாரணை முன்னெடுத்தபோது, சந்தேகநபர்களின் கைகளை அடித்து முறித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த விடயம் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவரும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்றுமுற்படுத்தப்பட்டனர். நீதிவானின் பணிப்புக்கு அமைவாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சட்டமருத்துவ அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்களைத் தாக்கிய பொலிஸ் அதிகாரிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாண மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கும், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் நீதிவான் உத்தரவிட்டார்.

தாக்குதல் நடத்திய பொலிஸ் அதிகாரி தமிழ்ப் பொலிஸார் என்றும் அவர் தொடர்பில் வடக்கு மாகாண மூத்த பொலிஸ் அதிகாரிகளுக்கு ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வேலணை சாட்டிக் கடற்கரைப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றம் கைது செய்யப் பணித்தபோது, மணல் அகழ்வு சந்தேகநபர்களுடன் பொலிஸ் பொறுப்பதிகாரி தொடர்பு கொண்டு முறைகேட்டில் ஈடுபட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## பானைக்கு...

தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சியை விக்னேஸ்வரன் அறிமுகம் செய்தபோதிலும் அந்தக் கட்சி இதுவரை பதிவுசெய்யப்படவில்லை. அவ்வாறு பதிவு செய்யப்படும் போது, சின்னத்தை தேர்தல் ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளும் வரையில் அது ஏற்றுக்கொள்ளப்பட்ட சின்னமாகவும் அமையாது.

இருப்பினும் விக்னேஸ்வரன் பொங்கல் பானைச் சின்னத்தைக் கோரினாலும் பெரும் சிக்கல் ஏற்படும் என்றே தெரிவிக்கப்படுகின்றது.

1982ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பொது வாக்கெடுப்புக்கு (சர்வஜன) பானைச் சின்னமும் மேசை லாம்பும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆட்சி நீடிப்புக்கு ஆம் என்பதற்கு மேசை லாம்புச் சின்னமும் வேண்டாம் என்பதற்கு பானைச் சின்னமும் பயன்படுத்தப்பட்டன. பொது வாக்கெடுப்புக்குப் பயன்படுத்திய சின்னம் அரசியல் கட்சிக்கு வழங்க முடியுமா இல்லையா என்ற சர்ச்சை எழுந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (த - 105)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
நடராசா
சௌந்தரேஸ்வரி

தோற்றம் 14.05.1931
மறைவு 29.01.2019

அகவைகள் பல கடந்தும்
அகலாதி புன் சிரிப்பும்
சோர்வு உடல் தளர்விலும்
வந்தோரை உபசரிப்பதிலும்
உன்னை மிஞ்ச வையகம் தனில்
யாரும் பிறக்கவில்லை
அம்மா!



கலாசாலை வீதி, 2 ஆம் ஒழுங்கை
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும்

நெஞ்சில் மகிழ
14 . 09 . 1935



நெஞ்சம் நெகிழ
22 . 12 . 2019

திருமதி
## தில்லையம்பலம் அன்னபூரணம்

'பெற்ற பிள்ளைகளைப் பேசாமடந்தைகள் ஆக்கிவிட்டு
உற்ற உறவுகளை ஏம்பித் தவிக்க விட்டுவிட்டு ஒரு நொடிப்
பொழுதில் பெருமான் சரண் அடைந்ததேனோ?
உங்கள் திருமுகத்தை இனி எப்போது காண்போம் நாம்'

கடந்த 22.12.2019 அன்று காலமான எமது குடும்பத் தலைவி அமரர் அன்னபூரணம் அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியைகள் நாளை (19.01.2020) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புண்ணிய தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிரியைகள் 21.01.2020 செவ்வாய்க்கிழமை காலை 8மணியளவில் வவுனியா பட்டக்காடு 6ஆவது ஒழுங்கை, இல. 190/2, அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.30மணியளவில் வவுனியா குருமன்காடு காளிகோவில் கலாசார மண்டபத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் எமது தாயின் மரணச்சடங்கிற்கு நேரில் வந்தவர்களுக்கும் தொலைபேசி மூலமாக அழைப்பு விடுத்தவர்களுக்கும் வைத்திய சாலையில் உதவி புரிந்த வைத்தியர்களுக்கும் துண்டுப்பிரசுரங்கள் பதாகைகள், பூச்செண்டுகள், மாலைகள் வழங்கிய பாடசாலைகள், தெற்கு கல்வி வலயம் உறவினர்கள், இறுதி நிகழ்வில் இரங்கலுரை வழங்கியவர்களுக்கும் பல்வேறு வகையில் உதவி செய்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பட்டக்காடு, வவுனியா
077 711 2250
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## இராமலிங்கம் நடராஜா
(Retired Finance Director CEYLON TEA MARKETING LIMITED)

மிருசுவில், உசனைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை (W.A.Silva Mawatha) வசிப்பிடமாகவும் கொண்டிருந்த இராமலிங்கம் நடராஜா கடந்த **(16.01.2020)** வியாழக்கிழமையன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - ஆச்சிமுத்து தம்பதியினரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - வள்ளிப்பிள்ளை (கரவெட்டி) தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதி நடராஜா அவர்களின் அன்புக்கணவரும் சுபோதினி (Ministry of Health), சுகந்தினி (Canada), நிரஞ்சன் (HSBC) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr.ஜனகன், ரமேஷ், பவதாரணி ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுஷன், கௌதமன், கீர்த்தனா, சஞ்சனா ஆகியோரின் பாசம் நிறைந்த பாட்டனாரும் காலஞ்சென்றவர்களான கண்மணி கைலாசப்பிள்ளை, சுப்பிரமணியம், சிவராஜா ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று **(18.01.2020)** சனிக்கிழமை (9.00am - 9.00pm) வரை பொரளை A.F.Raymond மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (1.00pm - 3.00pm) மணி வரை இடம்பெற்று தகனத்திற்காக கனத்தை இந்து மயானத்திற்கு (Opp. AMW showroom) எடுத்துச்செல்லப்படும்.

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

தகவல் - குடும்பத்தினர் 0777 364 636

சிறுமி மீது துர்நடத்தை

# பிரதேச சபை உறுப்பினருக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறை

கொழும்பு, ஜன. 18

14 வயது சிறுமியை துர்நடத்தைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட அக்குரெஸ்ஸ முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சாருவ லியனகே சுனிலுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 15 வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது. கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகேவால் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

25 ஆயிரம் ரூபா அபராதத் தொகை பிரதிவாதியால் செலுத்தப்பட வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதி பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா இழப்பீட்டைச் செலுத்துமாறு தீர்ப்பளித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதிகள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது கடுமையானது எனவும், இதன் ஊடாக பொதுமக்கள் ஜனநாயகம் மீது நம்பிக்கை இழக்கக் கூடும் எனவும் தீர்ப்பை அறிவித்து நீதிபதி குறிப்பிட்டார். 2012 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி மற்றும் அதே வருடம் ஜூன் மாதம் இரண்டாம் திகதி வரையான காலப்பகுதியில் 14 வயதுடைய சிறுமி ஒருவரை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தியமை தொடர்பில் பிரதிவாதிக்கு எதிராக சட்டமா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நீண்ட வழக்கு விசாரணைகளின் பின்னர் தீர்ப்பை அறிவித்த நீதிபதி, பிரதிவாதி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்படுவதாக குறிப்பிட்டார். (ஒ,5)

# கோத்தாவின் பரிந்துரை

கொழும்பு, ஜன. 18

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் யசந்த கோத்தாகொடவை உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்க ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பரிந்துரைத்துள்ளார். இந்தப் பரிந்துரையை அவர் சபாநாயகர் தலைமையிலான அரசமைப்புச் சபைக்கு வழங்கியுள்ளார்.

உயர் நீதிமன்ற நீதியரசர் பிரசன்ன ஜயவர்த்தனவின் திடீர் மறைவால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் யசந்த கோத்தாகொடவை உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்க ஜனாதிபதி பரிந்துரைத்துள்ளார். இதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் வெற்றிடத்து தற்போதைய சட்ட மா அதிபரை நியமிக்க வாய்ப்புள்ளதாக அறிய முடிகிறது. (ஒ,5)

# மரண அறிவித்தல்

மலர்வு
09 . 01 . 1945



உதிர்வு
15 . 01 . 2020

திருமதி.
## தணிகாசலம்பிள்ளை சுபத்திராதேவி

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தை இல.27. உருத்திரா மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. தணிகாசலம்பிள்ளை சுபத்திராதேவி 15.01.2020 புதன்கிழமை இரவு 10.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார். அன்னார் கலாநிதி நாகமுத்து தணிகாசலம்பிள்ளை (கல்வி அமைச்சின் முதுநிலை கல்வி ஆலோசகர்- ஓய்வுநிலை). அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசதுரை இராசம்மா தம்பதியரின் ஏக புதல்வியும் காலஞ்சென்ற நாகமுத்து தெய்வானைப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும் அமரர் Dr.தில்லைநாதன். அமரர்.சிவகுருநாதன். சண்முகநாதன் (முன்னாள் கிராம சேவகர் .முரசுமோட்டை). அமரர் சிவானந்தன். அமரர் பரமானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும். Dr.சுசிதரன் (புற்று நோய் வைத்தியசாலை - தெல்லிப்பளை. தற்போது தேசிய வைத்தியசாலை . கொழும்பு). Eng. நந்தனன் - (Chairman- Land maark Engineering (Pvt) Ltd) சுதந்தி (Australia). தர்சினி (ஆசிரியை- கொழும்பு இந்துக்கல்லூரி). Accountant தணிகைபாலன் (Australia). ஆகியோரின் பாசமிகு தாயாரும் Dr.துஷ்யந்தி (களுபோவில வைத்தியசாலை). Eng.சுகந்தினி . நரேந்திரன் (Lead Estimator-Australia). ஜயந்திரன் (வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு). சௌமியா (Australia). ஆகியோரின் பாசமிகு மாமியாரும். ஸ்ரீராம். ரகுராம். சிவாணி. தணிந்தன். ஜயதரன். சேதுசன். காணுஜன். பிரணிதன். நிகாஷன். தணிசா. தணிசன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் உள்ள அன்னாரது இல்லத்தில் அஞ்சலிக்காக 18.01.2020 சனிக்கிழமை வைக்கப்படும். இறுதிக்கிரியைகள் 19.01.2020 ஞாயிற்றுக்கிழமை பி.ப 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

தகவல்: குடும்பத்தினர் Tel: 0773506526 / 0766449298 / 0777316273

# ஒம்புட்ஸ்மன் நியமிப்பு

கொழும்பு, ஜன. 18

ஜனாதிபதியின் கவனத்துக்காகப் பொதுமக்கள் சமர்ப்பிக்கும் முறைப்பாடுகளை ஆராய்ந்து உடனடி நடவடிக்கை எடுப்பதற்காக குறைகேள் பிரிவு ஒன்றை அமைத்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ. பொதுமக்களின் குறைகேள் அதிகாரியாக (ஒம்புட்ஸ்மன் ) முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் விக்கிரமசிங்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதிக்கு அனுப்பப்படும் முறைப்பாடுகள்- விமர்சனங்கள் குறித்து கவனத்திற்கொண்டு உடனடி நடவடிக்கைகளை எடுப்பது இதன் நோக்கமாகும். இதற்கான அலுவலகம் மற்றும் அதன் செயற்பாடுகள் குறித்தான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்னும் சில தினங்களில் வெளிவரவுள்ளது. (ஒ,5)

**தேவை**
யாழ் நகரில் இயங்கும் தனியார் நிறுவனத்திற்கு **கணினி அறிவுடைய பெண் முகாமையாளர் தேவை.**
யாழ் நகரின் அருகில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:- 077 0740 351

**சிட்டை எழுதுநர் (பில் கிளாக்) தேவை**
**சிட்டை எழுதுநர் ( Bill Clerk ) - பெண் தேவை.**
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
ஆர்வம் உள்ளோர் நேரில் வரவும்.
077 844 8300 (CS/30624) (11,17)
வீனஸ் பாம்
6ஆம் ஒழுங்கை, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

**மணமகள் தேவை**
ஜேர்மனியில் வசிக்கும்
34 வயதுடைய பட்டதாரி
மணமகனுக்கு ஜேர்மனி
அல்லது சுவிற்சர்லாந்தில் வசிக்கும்
மணமகள் தேவை.
0049 2381 580589, 0049 1636 230074

# எல்லாச் சொற்களும் பொருள் குறித்தனவே

பேராசிரியர் ம.இரகுநாதன்
*யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.*

கடந்த 12ஆம் திகதி ஞாயிறு உதயனில் 'தமிழ் தெரியாதா?' என்ற தலைப்பில் ந.பரமேஸ்வரன் எழுப்பிய சந்தேகங்களைச் சிறுபிள்ளைத் தனமானது என்று பொருட்படுத்தாமல் இருந்து விடலாம் என்றே நினைத்தேன். ஆனால் அவரது சந்தேகம் வேறு சிலரையும் பாதித்து விடலாம் என்பதால் அவருக்கு இந்த விளக்கத்தை அளிக்க விரும்புகின்றேன்.

'அனைத்துலகத் தமிழியலாய்வு மாநாடு' என்ற தொடரில் வருகின்ற 'அனைத்துலக' என்ற தொடருக்கு அவர் புராணங்கள் கூறும் பல்வேறு உலகங்களையும் நினைத்துப் பாதாள உலகத்தவர்கள் கூடத் தமிழாய்வு செய்யப் பல்கலைக் கழகத்துக்கு வந்தார்களா எனப் பயந்துவிட்டார். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' எனக் கூறும் தமிழ் இலக்கண மரபு, சொற்கள் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப வெவ்வேறு பொருள் உணர்த்துவதையும் கூறாமலில்லை. தமிழில் ஒரு பொருள் குறித்த பல சொற்களும், பல பொருள் குறித்த ஒரு சொல்லும் இலக்கண விதிப்படியே அமைந்திருக்கின்றன. ஆனால் 'உலகம்' என்ற சொல் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பிரபஞ்சத்தைக் குறித்து நிற்பதில்லை. 'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' எனக் கூறும் தொல்காப்பியத்தையும்

*'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல*
*கற்றும் கல்லார் அறிவிலாதார்' (குறள் 146)*

என்ற வள்ளுவத்தினையும் தெரிந்தவர்களுக்கு இங்கெல்லாம் உலகம் என்பது வெறும் பௌதிக நிலைப்பட்ட பிரபஞ்சத்தையன்றி உயிர் வாழ் மக்களையே குறித்து நிற்கின்றது என்பது புரியும். ஏன் சாதாரணமாக ஊர் வழக்கில் 'உலகம் தெரியாதவன்' எனக் கூறும்போது பிரபஞ்சத்தையோ பூகோளத்தையோ பார்க்காதவன் என்றாபொருள் கொள்ளப்படுகின்றது. சாதாரண சினிமா ரசிகர்களுக்குக்கூட 'உலகம் போற போக்கைப்பாரு...' என்றோ 'உலகம் ஆயிரம் சொல்லட்டுமே உனக்கு நீதான் நீதிபதி...' என்றோ சினிமாவில் வருகின்ற பாடலடிகள் உலகம் என்பதை உயிர் வாழ் மக்களாகவே உணர்த்தும்போது பரமேஸ்வரன் பிரபஞ்சத்தையும் பாதாள உலகங்களையும் கற்பனை செய்வது பொருத்தமாக இருக்காது.

இன்னும், உலகக் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டி என அறிவிக்கப்பட்டால் உலகநாடுகள் முழுவதுமா அதில் பங்கு பற்றுகின்றன? கிரிக்கெட்டில் ஆர்வமே இல்லாத உலகநாடுகள் இல்லையா? உலக அழகியாக ஐஸ்வர்யாராயை தெரிவுசெய்தபோது உலகம் முழுவதிலுமுள்ள அழகிகள் போட்டியில் பங்கெடுத்தார்களா? எனவே 'அனைத்துலகம்' என்பதை பாதாள உலகம், மேலுலகம், கீழுலகம் என்றெல்லாம் நினைத்துப் பயங்கொள்ளத் தேவையில்லை. இது தமிழ் ஆய்வுப் புலங்கள் பலவற்றையும் சேர்ந்த அறிஞர்களின் கூட்டத்தையே குறித்து நிற்கின்றது என்பதைப் புரிந்து கொள்க.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் மனோன்மணியத்தில் 'பல்லுலகும் பலவுயிரும் படைத்தளித்து...' என வருகின்ற தொடரில் வரும் பல்லுலகு என்பது பல உலகங்களைக் குறிப்பதாகலாம். ஆனால் 'அனைத்துலகு' என்பது பல் உலகு என்ற தொடரில் வெளிப்படுகின்ற பொருளை உணர்த்தவில்லை. இங்கு அனைத்து என்பது 'ஒருங்கிணைந்து' என்ற பொருளையே தருகின்றது.

எனவே அனைத்துலகத் தமிழியலாய்வு மாநாடென்பது தமிழியற் புலங்கள் பலவற்றிலும் ஆர்வமுள்ள அனைவரையும் ஒருங்கிணைத்த மாநாடு என்ற பொருளையே குறிக்கின்றது.

இதே யாழ்ப்பாணத்தில் 2017இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை அனைத்துலகச் சைவமாநாட்டை நடத்தியபோது அங்கும் பாதாள உலகத்தவர்கள் வந்திருந்தார்களா? அது போகட்டும். 'தமிழ் என்றால் யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம் என்றால் தமிழ்' என்று பரமேஸ்வரனுக்கு யார் சொன்னது? யாழ்ப்பாணத்தவர்கள் இன்னும் தென்னிந்தியாவையே தமது தாய்நாடாகவும் இலங்கையை அதன் சேய்நாடாகவும் கருதிவருகின்றமையை நீங்கள் அறியவில்லையா? அகத்திய மாமுனிவர் தமிழுக்கு இலக்கணம் வகுத்ததும், சங்கப் புலவர்கள் பாடிமகிழ்ந்ததும். கம்பனைப்போல் வள்ளுவன்போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை எனப் புகழும் பாட்டிசையும் கேட்கவில்லையோ? இவர்கள் எல்லாம் யாழ்ப்பாணத்திலா பிறந்தார்கள்? பத்துப்பாட்டில் பத்துப்பிழைகள் இருக்கின்றன என உ.வே. சாவிற்கு குமாரசாமி சுட்டிக்காட்டினாராம். பத்துப்பாட்டு என்பது தனியொரு நூலில்லை. அது பத்து நூல்களின் தொகுதி. உ. வே. சாவின் சிந்தாமணியை மறந்துதான் பரமேஸ்வரன் பத்துப்பாட்டு என்று புதுக்கதை புகல்கின்றார். ஏட்டுப் பிரதிகளை அச்சில் பதிப்பிக்கும் போது தவறுகள் ஏற்படுவது சாதாரணமான விடயம். இவை தவறுகளே தவிர குற்றங்கள் அல்ல. யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலரின் கந்தபுராணப் பதிப்பில் கூடத் தவறுகள் இருக்கின்றன என்பதைப் பரமேஸ்வரன் தெரிந்துகொள்ள வேண்டும்.

சின்னஞ்சிறு வயதிலேயே 'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு' என்று படித்தவர்களுக்கு 'விற்பன்னர்கள்' என்று யாரையும் நினைக்கத் தோன்றாது. மணற்கேணி தொட்டனைத்தே ஊறும் என்பதை எப்படி மறந்துவிட முடியும்.

'நல்லது செய்தல் அற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்' என்ற புறநானூற்றுப் புலவனின் வார்த்தைகள் ஏனோ இவ்வேளையில் வருவதைத் தடுக்கமுடியவில்லை. எவ்வாறாயினும் பரமேஸ்வரனின் அக்கறைக்கு மிக்க நன்றி.


# உலகப்போர் அபாயமும் அழிவுகளும்

அந்தோனிமார்க்

இன்று உலகில் பரவலாகப் பேசப்பட்டு வரும் விடயம் மூன்றாம் உலகப் போராகும். இதற்குக் காரணம் நாட்டுத் தலைவர்களின் பேராசையாகும். ஏனைய நாடுகளின் மக்களையும், சொத்துக்களையும் தமது ஆளுகையின் கீழ் கொண்டு வர வேண்டுமென்பது அவர்களது பேராசை. உலகம் ஏற்கனவே முதலாம் உலகப் போரையும் இரண்டாம் உலகப் போரையும் சந்தித்துள்ளது. முதலாம் உலகப் போரில் 30 ஆயிரம் மக்கள் இறந்துள்ளனர். பல ஆயிரக் கணக்கான மக்கள் தமது உடலுறுப்புக்களை இழந்துள்ளனர். இரண்டாம் உலகப் போரில் 60 இலட்சத்துக்கு மேற்பட்ட யூத மக்களை ஹிட்லர் கொலை செய்தும். பல கோடிக்கணக்கான சொத்துக்களையும் அழித்தான். இவ்வாறான துன்பங்களைக் கண்டும் இந்த உலகம் இன்னும் திருந்த வில்லை. இன்று உலகில் பரவலாகப் பேசப்படும் விடயம் மூன்றாம் உலகப் போராகும்.

## ஆரம்பம்

ஈரானின் பாதுகாப்புப் படையணிகளின் மீது அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதலால் உயர்மட்ட இராணுவ அதிகாரி சுலைமானி கொல்லப்பட்டார். இதனால் ஈராக்கில் உள்ள இரண்டு அமெரிக்க இராணுவத் தளங்களில் ஏவுகணைத் தாக்குதலின் மூலம் 80 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர். தாக்குதல் நடத்தி சில மணி நேரத்துக்குள் ஈரானில் இருந்து புறப்பட்ட உக்ரைனின் பயணிகளின் விமானம் விபத்துக்குள்ளாகி 176 பேர் இறந்தனர். இந்த விபத்துக்கு அமெரிக்கா தான் காரணம் என்ற சந்தேகம் நிலவுகிறது. இதனால் மூன்றாவது உலகப் போர் ஏற்படும் என்ற அபாயம் தற்போது தோன்றியுள்ளது. ஏற்கனவே பல நாடுகளில் நாடு பிடித்தல், மக்களை அடிமையாக்கல் என்ற போர்வையில் போர் அழிவும் ஏற்பட்டுள்ளது. நமது நாட்டிலும் பூர்வீகமாகத் தமிழர் வாழ்ந்து வரும் பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்கு பல இராணுவ முகாம்களை அமைத்துச் சிங்கள குடியேற்றங்களையும், அதைப் பராமரிப்பதற்குப்பிக்குகளை நியமித்துள்ள னர். பௌத்த விகாரைகளையும் அரச செலவில் அமைத்து வருகின்றனர். இது மக்களுக்குப்பயத்தையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.



## உலகப்போர்

உலகப் போர் முடிந்ததும் அந்த அழிவுகளைப் பார்வையிட்ட சர்வதேச சமூகம் 1948 ஆம் ஆண்டு ஐ.நா சபையை ஆரம்பித்தது. இனிமேல் இவ்வாறான அழிவுகள் ஏற்படக்கூடாது என்ற காரணத்துக்காக. ஐ.நா. சபையை ஆரம்பித்தது. அத்துடன் சமாதான நடவடிக்கைகளையும், புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் செய்து வருகிறது. இன்று 193 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட பெரிய சர்வதேச அமைப்பாக ஐ.நா சபையும் அதன் பாதுகாப்பு சபையும் இயங்குகின்றன. ஆரம்பத்தில் இரு நாடுகளுக்கு இடையில் போர் ஏற்பட்டாலும் பாதிக்கப்படுவது இந்த இரண்டு நாடுகள் மட்டுமல்ல. உலகில் உள்ள சகல நாடுகளுமே பாதிக்கப்படும். போக்குவரத்துத் தடை ஏற்படும், பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும், விலை அதிகரிக்கும், எண்ணெய் இறக்குமதியில்லை, தொழிற்சாலைகள் ஸ்தம்பிதம், தொழில் செய்ய முடியாது, வறுமையால் மக்கள் அழிவார்கள், ஒருசிறு சம்பவமும் செயல்பாடும் ஒருசில மணி நேரத்துக்குள் உலகத்தில் உள்ள மூலைமுடுக்குகளுக்கும் சென்று பரவி பதற்றங்களையும், அபாயங்களையும் ஏற்படுத்தி அழிவுகளை அதிகரிக்கும், வல்லரசுகளும் ஒன்றை ஒன்று தாக்க முற்படும். அதனால் சர்வதேசமும், ஐக்கிய நாட்டுச் சபையும் ஐ.நா. பாதுகாப்புச் சபையைக் கூடிப் போர் வராமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். வெள்ளம் வருவதற்கு முன்பு அணை கட்ட வேண்டும்மென்பார்கள் உலகம் அழிந்த பின்பு புணர்வாழ்வு வேலை செய்வதில் எந்தப் பிரயோசனமும் இல்லை.

## ஆபத்துக்களை தவிர்ப்போம்

சமயத்தலங்கள் அரசுக்கு ஆலோசனை வழங்கி நாட்டில் சாந்தியும், சமாதானமும் ஏற்படப் பாடுபட வேண்டும். இலங்கையில் போர் முடிவுற்றாலும் பூரணமான சமாதானம் மக்களில் ஏற்படவில்லை. தற்போது சிங்கள பௌத்த பெரும்பான்மை என்ற கோட்பாடு மக்கள் மத்தியிலும், ஜனாதிபதியிடமும் உண்டு. பல இன் மக்கள் வாழும் நாட்டில் மேற்படி பெரும்பான்மைக் கோட்பாடு பெரிய ஆபத்துக்களை ஏற்படுத்தும். பௌத்த பிக்குகள் முதலில் மனம் திருந்த வேண்டும். சிறுபான்மை மக்களின் வாழ்விடங்களை அபகரித்து, அதில் சிங்கள மக்களை குடியேற்றுவதைத் தடைசெய்ய வேண்டும். எனவே இந்த 2020 ஆம் புத்தாண்டில் சகல மக்களும் தங்களது வாழ்விடங்களில் சுதந்திரமாக வாழ்ந்து சகல வளங்களையும் பயன்படுத்தி உற்பத்தியில் நமது நாடு தன்னிறைவு அடைய வேண்டும் வறுமை ஒழிக்கப்பட்டு நாடு சீர் அடைய வேண்டும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கோத்தாபயவின் நீதி இதுதான்!

காட்டுராஜாவான சிங்கமொன்று தன் இராச்சியத்தில், ஒரு விலங்குக்கு விலையுயர்ந்த பரிசு ஒன்றைக் கொடுக்கப் போவதாக அறிவித்தது. அவ்வளவுதான், சிங்கத்தின் குடிமக்களான விலங்குகள் அனைத்தும் , நீ முந்தி நான் முந்தி என்று அரண்மனைக்கு ஓடி வந்தன. சகல விலங்குகளையும் நேர்கண்ட சிங்கம், கடைசியாக இரண்டு பேரை இறுதி 'இன்ரர் வியூவுக்கு' அழைத்தது.

இறுதிப்போட்டியில் தெரிவு செய்யப்பட்டவற்றில் ஒன்று வெள்ளாடு. மற்றையது ஓநாய். வெள்ளாடு எப்போதும் நீதி, நேர்மை, நியாயம், மனிதாபிமானம், புலால் உண்ணாமை என்று அகிம்சையின் வடிவமாக இருக்கும் விலங்கு. ஓநாயோ அதற்கு நேர்மாறானது. எப்போதும் கொலைவெறியோடு அலையும். எந்த நியாய தர்மத்துக்கும் கட்டுப்படாதது. எனவே வெல்லப்போவது வெள்ளாடு தான் என்றே எல்லோரும் எண்ணினர். ஆனால் சிங்கம் தன் இதயம் கவர்ந்த விலங்காக ஓநாயையே தெரிவு செய்து பரிசிலும் அளித்தது. பின்னர் அது தன் இராச்சியத்தின் விலங்குகளைப் பார்த்து இப்படிச் சொன்னது ,

"உங்களுக்கு வேண்டுமானால் வெள்ளாட்டைப் பிடித்திருக்கலாம். ஆனால் நான் ஒரு மாமிச உண்ணி. எனக்கு எப்போதும் என்னைப் போல இருப்பவர்களையே பிடிக்கும். அதுதான் ஓநாயை எனக்குப் பிடித்திருக்கிறது. எனவே எனக்குப் பிடிக்காத வெள்ளாட்டினை என் பிரியத்துக்குரிய ஓநாய்க்குப் பரிசளிக்கிறேன்"

அடுத்த நொடியே வெள்ளாட்டினைப் பாய்ந்து கொன்றது ஓநாய்.

இதுதான் சிங்கத்தின் நீதி. அதைப் போலவே அவரவரும், தத்தம் கொள்கைநிலையில் இருந்தே தமக்கான நீதியின் எல்லையை வரையறுத்துக் கொள்கிறார்கள். அது ஜனநாயகத்துக்கு விரோதமானதாக இருந்தாலும், அவர்கள் தாம் செய்வதையே நீதியென்று நம்புகிறார்கள்.


இந்த அடிப்படையிலேயே இலங்கைக் கடற்படையின் முன்னாள் பேச்சாளரான டி.கே.பி. தசநாயக்க கொமாடோர் என்னும் பதவி நிலையில் இருந்து, ஜனாதிபதி கோத்தாபயவினால் ரியல் அட்மிரலாக தரமுயர்த்தப்பட்டதையும் நோக்கவேண்டியுள்ளது. பாதுகாப்புச் செயலராக கோத்தாபய இருந்த காலத்தில் அவரின் விசுவாசத்துக்குரிய ஒருவராக இருந்தவர் டி.கே.பி. தசநாயக்க. அப்படி இருந்தவருக்கு, தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி கோத்தாபய கொடுத்த பரிசே இந்தத் தரமுயர்வு. ஒரு கடற்படை அதிகாரிக்கு பதவியுயர்வை வழங்கியதற்கு ஏனிந்த அக்கப்போர்? எனச் சிலர் எண்ணலாம். ஏனெனில், தசநாயக்க ஒரு போர்க்குற்றவாளி. பலரைக் கடத்திக் காணமலாக்கியவர் என்று நம்பப்படுவர்.

ஒட்டுமொத்த நாட்டையும் ஒரு காலத்தில் கலக்கிய 'வெள்ளை வான்' கடத்தல்களின் பின்னணியில் தசநாயக்கவும் முக்கிய சூத்திரதாரியாகச் செயற்பட்டவர் என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. குறிப்பாக கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட விவாகரத்தில் தசநாயக்க பிரதான சந்தேகநபராக இனங்காணப்பட்டு, விளக்கமறியலிலும் வைக்கப்பட்டிருந்தவர். பின்னர் கொழும்பு மேல்நீதிமன்றத்தினால் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். அவ்வாறு அவர் வெளியில் வந்தபோதும், இன்னும் வழக்கு நிலுவையியே உயிர்ப்புடனேயே உள்ளது.

இப்படி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள பாரதூரமான வழக்கொன்றின் பிரதான சந்தேக நபருக்கே 'ரியல் அட்மிரல்' எனும் உயர் பதவியைக் கொடுத்து அழகு பார்த்திருக்கிறார் கோத்தாபய. இதுவே கோத்தாபயவின் சிங்கநீதி.

இப்படி போர்க்குற்றவாளிகளாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்களை இன்னும் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்தும் நாட்டில், ஓநாய்களுக்குத்தான் எப்போதும் மரியாதை. வெள்ளாடுகள் எப்போதும் பலியாடுகளாக மாற வேண்டியதுதான்.

# மொட்டிடம் 'கை' சரண்!




**கொழும்பு, ஜன.18**

**2020 ஏப்ரல் இறுதிவாரத்தில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கூட்டணியாக களமிறங்குவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியசெயற்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.**

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியசெயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவரான மைத்திரிபால சிறிசேன தலைமையில் மருதானையிலுள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

அதில் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. முக்கியமாக அடுத்த பொதுத்தேர்தல் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கூட்டணியாகக் களமிறங்குவதென்றும், மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெறுவதற்காக முழுமையான பங்களிப்பை வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் எந்தவொரு அரசியல் தொடர்பையும் பேணுவதில்லை என்றும், அந்தக் கட்சிக்கு ஆதரவளிக்கும் உறுப்பினர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. (எ-44)

## 33 ஆயிரத்து 226 பேர் கூட்டுறவில் இணைவு



யாழ்ப்பாணம்,ஜன.18

வடக்கு மாகாணத்தில் 2019 ஆம் ஆண்டில் மட்டும் 33 ஆயிரத்து 226 பேர் கூட்டுறவுச் சங்கங்களில் புதிதாக அங்கத்தவர்களாக இணைந்துள்ளனர்.

2018 ஆம் ஆண்டை விட 9 ஆயிரத்து 758 பேர் புதிதாக இணைந்துள்ளனர் என்று வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத் தகவல்கள் தெரிவித்துள்ளன. 2018ஆம்ஆண்டில்23 ஆயிரத்து 468 பேரும், 2017ஆம் ஆண்டில் 9 ஆயிரத்து 208 பேரும் அங்கத்தவர்களாக இணைக்கப்பட்டுள்ளனர். கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்தவும், இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் அங்கத்தவர்களை இணைக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அநேகமான கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தவர்களை இணைக்கும் செயற்பாடுகளில் கடந்த ஆண்டில் துரிதமாக ஈடுபட்டன. கிளை நிலையங்கள் மற்றும் பொது இடங்கள் போன்றவற்றில் இது தொடர்பான விழிப்புணர்வுப் பதாகைகள் கட்டப்பட்டும், துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டும் மக்கள் இணைக்கப்பட்டனர்.

2020 ஆம் ஆண்டில் மேலும் இணைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

## புனித யோசவ்வாஸ் அடிகளாரின் பெருவிழா

சில்லாலை, ஜன. 18

இலங்கையின் அப்போஸ்தலர் புனித யோசவ்வாஸ் அடிகளாரின் பெருவிழா சில்லாலையில்உள்ளபுனிதயோசவ்வாஸ் யாத்திரைத் தலத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருவிழாத் திருப்பலியும், திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை இவ் ஆண்டை கத்தோலிக்க திருச்சபை 'துயருறுவோர் ஆண்டாக"அறிவித்துள்ள நிலையில் யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் அதற்கான ஆரம்பச் சடங்கு நிகழ்வும் இன்றையதினம் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-135)

# வடக்கு செயலர் பதவிகளுக்கு வட பகுதியினர் புறக்கணிப்பு

### அரச ஆதரவுக் கட்சிகள் மௌனம்

யாழ்ப்பாணம், ஜன. 18

வடக்கின் 5 மாவட்டங்களுக்கும் மாவட்டச் செயலர்களாக வடக்கு மாகாணத்தைச் சாராதவர்களை நியமிக்க அரசு திட்டமிடும் நிலையில் அரசுக்கு ஆதரவளிக்கும் கட்சிகள் வாய்மூடி மௌனிகளாக உள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

வடக்கில் உள்ள மாவட்டச் செயலர்களில் மூவர் வெளிமாகாணத்தவர்கள். எனினும், அவர்கள் ஏற்கனவே வேறு மாவட்டத்தில் மாவட்டச் செயலர்களாகப் பணிபுரிந்து இடமாற்றம் செய்யப்பட்டவர்கள்.

ஆனால் வடக்கில் தற்போது காணப்படும் மாவட்டச் செயலர்களின் வெற்றிடங்களுக்கு பிற மாகாணத்திலிருந்து அதிகாரிகளை நியமிக்கப்படவுள்ளனர் என்று கூறப்படுகின்றது. இந்தப் பதவிகளுக்கு பிற மாகாணத்தவர்களாயினும் சேவையில் மூத்தவர்களாயினும் சரி நியமிக்க முடியும். ஆனால் தற்போது நியமிக்கப்படும் அலுவலர்களை விட சேவையில் மூத்த பல அதிகாரிகள் வடக்கில் மாவட்டச் செயலர் பதவிக்கு விண்ணப்பித்துக் காத்திருக்கின்றனர்.

ஆனால் வெளிமாகாண அரசியல்வாதிகளின் சிபார்சில் வடக்கில் மாவட்டச் செயலர்கள் நியமிக்கப்படும் நிலை காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இவை பற்றி வடக்கிலுள்ள அரச ஆதரவுக் கட்சிகள் கண்டுகொள்ளவில்லைஎன்றுகுற்றஞ்சாட்டப்படுகின்றது. (து-105)

# யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2020

JITF 2020
11TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR
24th, 25th & 26th January 2020

வடக்கு, கிழக்கு மற்றும் நாட்டின் ஏனைய பாகங்களைச் சேர்ந்த பொதுமக்களுக்காக ஆரம்பித்து வைக்கப்படவுள்ள யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2020, வடமாகாணத்தில் இத்தகைய அளவில் பிரமாண்டமாக இடம்பெறுகின்ற மிகப் பெரிய, ஒரேயொரு கண்காட்சி நிகழ்வு என்ற பெருமையைக் கொண்டுள்ளதுடன், தைப்பொங்கல் பண்டிகையை ஒட்டியதாக இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில், 2020 ஜனவரி 24 முதல் ஜனவரி 26 வரையில் யாழ்ப்பாணத்திலுள்ள முற்றவெளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

2010ஆம் ஆண்டுமுதல் வருடந்தோறும் இடம்பெற்றுவருகின்ற யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி, வர்த்தகக் கண்காட்சிக் கூடங்கள், மாலைப்பொழுது நேரடி இசை நிகழ்ச்சிகள், சிறுவர்கள் விளையாடும் வசதிகள் கொண்ட பொழுதுபோக்குப் பூங்கா, நடைபாதை உணவுக் கூடங்கள், பல்வேறு கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை இந்த ஆண்டில் உள்ளடக்கவுள்ளது.

யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நிகழ்வானது முதன்முறையாக 2002ஆம் ஆண்டில் இடம்பெற்றதுடன், வடபிராந்தியத்தில் மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற போரின் மத்தியில் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட காலப்பகுதியில் இது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. வடபிராந்தியத்தில் அபிவிருத்திக்கான ஒரு பொறிமுறையாகவும், வர்த்தகத் தொழிற்பாடுகளை மேம்படுத்தவுமே இது ஆரம்பிக்கப்பட்டது. சோதனைச் சாவடிகள், போதிய தங்குமிட வசதிகளின்மை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் போன்ற பல்வேறு சவால்களுக்கு மத்தியிலேயே முதலாவது கண்காட்சி இடம்பெற்றது.

2009ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வந்ததை அடுத்து, இரண்டாவது கண்காட்சி நிகழ்வானது 2010ஆம் ஆண்டில் இடம்பெற்றதுடன், அதனைத் தொடர்ந்து வருடந்தோறும் இந்த நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

தெற்கு மற்றும் சர்வதேச தொழில் முயற்சியாளர்கள் வடக்கிலுள்ள சக தொழில் முயற்சியாளர்களைச் சந்தித்து, தொடர்புகளை வளர்க்கும் ஒரு களமாக சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நிகழ்வு அமைந்துள்ளது.

யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2020 நிகழ்வானது தொடர்ந்து 11 ஆவது ஆண்டிலும் Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd (LECS) நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் இணை அனுசரணையுடனும், யாழ் மாநகர சபை, சர்வதேச வர்த்தகமன்றம், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடனும் இடம்பெறுகின்றது.

### யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2020 நிகழ்வின் சிறப்பம்சங்கள்?

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை அறிமுகப் படுத்தவும், வடக்கிலுள்ள சமூகங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள பல்வேறு வகையான உற்பத்திகள் மற்றும் சேவைகளை அறிந்து கொள்வதற்கும் யாழ் வர்த்தகச் சந்தை மாபெரும் வாய்ப்பாகக் காணப்படுகின்றது. இந்த ஆண்டில் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்டபார்வையாளர்கள் வருகை தருவர் என எதிர்பார்க்கப்படுவதுடன், பல்வேறுபட்ட வழங்குநர்களால் 300 கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

### அனுசரணையாளர்கள்

இந்த ஆண்டு நிகழ்வின் பிளாட்டினம் அனுசரணையை Insee Cement வழங்குவதுடன், ஒரு தசாப்தத்திற்கும் மேலாக பெருமைமிக்க கண்காட்சிக் கூட ஏற்பாட்டாளராகத் திகழ்ந்து வருகின்றது. 2016ஆம் ஆண்டில் முதற் தடவையாக கண்காட்சியாளராக அங்கம் வகித்த Insee Cement, 2018ஆம் ஆண்டில் 'உத்தியோக பூர்வ அனுசரணையாளராகவும்' மற்றும் நிர்மாணத் தீர்வுப் பங்காளராகவும் தனது ஸ்தானத்தை உறுதிப் படுத்திக் கொண்டுள்ளது. இந்த ஆண்டில் 2019/20 இற்கான பிளாட்டினம் அனுசரணையாளராகச் செயற்படுகின்றது. இதற்கிடையில் Ruhunu foods, 2015/2017 முதல் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்றுறையில் 'கண்காட்சியாளராக'யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியுடன் இணைந்துள்ளது. இந்த ஆண்டில் அவர்கள் நிகழ்வின் உத்தியோகபூர்வ உணவுப் பங்காளராக இணைந்துள்ளனர். Mobitel Pvt Ltd நிறுவனம் இந்த ஆண்டிலும் உத்தியோகபூர்வ தொலைத் தொடர்பாடல்கள் பங்காளராக இணைந்துள்ளதுடன், 2010ஆம் ஆண்டுமுதல் தொடர்ந்து 10 ஆண்டுகளாக நிகழ்வில் அங்கம் வகித்து வந்துள்ளது.

2020ஆம் ஆண்டில் உத்தியோக பூர்வ பாதணி பங்காளராகச் செயற்படும் DSI, 2014 ஆம் ஆண்டில் முதன் முத்லாக யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சிநிகழ்வில் ஒருகண்காட்சியாளராக பங்குபற்றியதுடன், முதற்தடவையாக 2017 ஆம் ஆண்டில் 'உத்தியோகபூர்வ பாதணி பங்காளராக' பங்குபற்றியதுடன், இம்முறையும் 2019/20 இல் 'உத்தியோகபூர்வ பாதணி பங்காளராக' செயற்படுகின்றது. 2014ஆம் ஆண்டில் கண்காட்சியுடன் இணைந்து கொண்ட British Cosmetics, தொடர்ந்தும் நிகழ்வுடன் இணைந்திருந்ததுடன், 2019/20 இல் முதற்தடவையாக உத்தியோக பூர்வ அழகு சாதனப் பங்காளராகச் செயற்படுகின்றது.

மேலும், 2010-2014 வரைபிரதான அனுசரணையை வழங்கிய Dimo Group- 2019/20 இல் 'உத்தியோக பூர்வ கருவிகள் பங்காளராகச்' செயற்படுகின்றது.




## ஆசிரியருக்கான கடிதம்

# வாசிப்பை ஊக்குவிக்கும் ஓவியங்களும் அவசியம்

நாட்டை அழகுபடுத்துவோம் செயற்றிட்டத்தின் கீழ் நம் அண்ணன்மார்களினால் வரையப்படுகின்ற சுவரோவியங்கள் அடிக்கடி நம் உதயனில் வெளியாகின்றன. இது மிக முன்னுதாரணமான பாராட்டத்தக்க செயற்பாடு ஆகும். தமிழ் மக்களின் பண்பாடு கலாசாரத்தைத் தற்கால சமூகம் அறிய வேண்டும் என்ற நோக்கம் உயர்ந்தது. இந்த ஓவியங்கள் இன்னொரு விடயத்தையும் பறைசாற்றியாக வேண்டும்.

தற்போது முன்னைய காலம் போன்று பத்திரிகை வாசிப்பு நூல்கள் வாசிப்பு என்பன அருகிவிட்டன. பத்திரிகையில் வெளியாகும் பல விடயங்கள் மக்களைச் சென்றடைவதில்லை. ஏனெனில் யாவரும் தொலைபேசி சமூகவலைத்தளங்களுள் மூழ்கியுள்ளோம். முதியவர்கள் நடுத்தர வயதினர்கூட இந்த நிலைமையில் தான் உள்ளனர். நான் கூற வருவது என்னவெனில் நாட்டில் நடைபெறும் சமூகப் பிரச்சினைகளையும் அவற்றைத் தீர்க்கும் முறைகளையும் அதன் விளைவுகளையும் நம் மக்களுக்கு எடுத்துரைக்கும் சாதனமாக சுவரோவியங்கள் அமைய வேண்டும். என்பதாகும். பத்திரிகையில் வரும் விழிப்புணர்வுக் கட்டுரைகள், ஓவியங்கள் சமூக ஊடகங்களில் வருபவை மக்களைச் சென்றடைவதைக் காட்டிலும் இம்முறை மிகவும் பயனுடையதாக அமையும் என நம்புவோம்.

**எஸ்.நிருஷா, மீசாலை மேற்கு**

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



# இலவச நுண்கலை வகுப்புக்கள் ஆரம்பம்

கொடிகாமம், ஜன.18
செரண்டிப் சிறுவர் இல்லத்தால் இலவச நுண்கலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. முல்லைத்தீவு மாமூலை மகாவிஷ்ணு ஆலய அறநெறி மண்டபத்தில் இந்த வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம், மிருதங்கம், சித்திரம், வயலின் மற்றும் யோகப்பயிற்சிகள் என்பனவே நடைபெறவுள்ளன.
மேற்கூறப்பட்ட கற்கை நெறிகளைக் கற்க விரும்புவோர் நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் தங்கள் பெயர் விவரங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறும், மேலதிக தகவல்களைப் பெற 0775571950 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் செரண்டிப் சிறுவர் இல்லத்தினர் அறிவித்துள்ளனர். (ஜ-159)



# சரஸ்வதி சிலை திறப்பு


கரணவாய், ஜன.18
யாழ்ப்பாணம், இமையாணன் அ.த.க வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலை நேற்றுமுன்தினம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. வித்தியாலய அதிபர் இ.சிவசங்கர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் குட்டித்தம்பி கலந்துகொண்டு சிலையைத் திறந்து வைத்தார். இந்தச் சிலை வித்தியாலயத்தில் 1986 ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்களால் அமைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-108)



## அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தில்

# குடியமராத காணிகளை மீளப் பறிக்கத் தீர்மானம்

வவுனியா, ஜன. 18
**அரச ஊழியர்களுக்காக ஓமந்தையில் வழங்கப்பட்ட காணிகளில் பலர் குடியிருக்கவில்லை என்பதால், குடியிருக்காதவர்களின் காணிகளை மீளப்பெற்று காணி அற்றோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்டமுகாமையாளர் எம்.வீ.குரூஸ் தெரிவித்தார்.**



வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றும் காணி அற்ற 600க்கும் மேற்பட்ட அரச அலுவலர்களுக்கு 2009 ஆம் ஆண்டு ஓமந்தையில் காணிகள் வழங்கப்பட்டு குடியேறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அந்த இடத்தில் 600 பேர் வரையில் காணிகளைப் பெற்றுக்கொண்டனர். எனினும், 80 குடும்பங்கள் மாத்திரமே அங்கு குடியேறி வாழ்கின்றன. 200 பேர்வரையில் பகுதியளவில் வீடுகளை அமைத்துள்ளனர். ஏனையோர் தமக்கு வழங்கப்பட்ட காணிகளுக்குள் எந்தவித வேலைகளையும் மேற்கொள்ளவில்லை.
அங்கு 100க்கும் மேற்பட்டோருக்கு வீடமைப்பு அதிகார சபையால் வீடு கட்டுவதற்காக ஐந்து இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டிருந்தது. வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளனவே தவிர, அவர்கள் குடியிருக்க வரவில்லை. அவை பற்றைக் காடுகளாக வளர்ந்து காடு மண்டிக் கிடக்கின்றன. இதனால் மக்கள் நடமாட்டமற்ற பகுதியாக உள்ளது. மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் கிராம மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். இந்த விடயம் தொடர்பாகவும், தமது பகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டிய அத்தியாவசிய உட்கட்டுமான வசதிகள் தொடர்பாகவும் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் மாவட்டச் செயலர் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளருக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. கடந்த மாதம் ஓமந்தையில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர். அதற்கமைய ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் அலுவலர்களின் குறைபாடுகள் தொடர்பாகத் துரித நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா மாவட்டச் செயலர் அரச அதிபர் எம்.ஹனீபா வீடமைப்பு அதிகார சபைக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.
கடந்த 2 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கமையவே கடிதம் அனுப்பி வைக்கப்படுகிறது என்றும் அதில் தெரிவித்திருந்தார். இந்த விடயம் தொடர்பாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட முகாமையாளர் எம்.வீ.குரூஸிடம் கேட்டபோது, இவற்றை உறுதிப்படுத்தினார். (த-110)

# மன்னிப்பு கோருமாறு கூறியதால் சர்ச்சை

சாவகச்சேரி, ஜன. 18
சபை அமர்வுக்கு தாமத மாகவந்தமைக்குஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் க.வேலாயுதபிள்ளை தவிசாளரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று தமிழ் மக்கள் தேசிய முன்னணியின் உறுப்பினர் ப.ஜெயகாந்தன் உரையாற்றியதனால் ஏனைய உறுப்பினர்கள் கண்டனக் குரலெழுப்பினர்.
சம்பவம் சாவகச்சேரி நகர சபையின் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் நடைபெற்ற அமர்வில் இடம்பெற்றது.
முற்பகல் 9.30 மணிக்கு அமர்வு ஆரம்பமானது. உறுப்பினர் க.வேலாயுதபிள்ளை சிறிதுநேரம் தாமதமாகவே அமர்வுக்கு வந்துள்ளார். அதன்போது உறுப்பினரான ப.ஜெயகாந்தன், அமர்வு தொடங்கிய பின்னர் வந்தமையால் உறுப்பினர் வேலாயுதபிள்ளை தவிசாளரிடம் மன்னிப்புக் கோரி அனுமதி பெற்று இருக்கையில் அமருமாறு கூறியுள்ளார். இதன்போதே சர்ச்சை ஏற்பட்டது.
"கடந்த இரண்டு வருடங்களாக சபை அமர்வுகள் மற்றும் விசேட அமர்வுகள், குழுக்களின் அமர்வுகள் இடம்பெறும் போது பல உறுப்பினர்கள் தாமதமாக வருவது வழமை. இது அமர்வுகள் குறிப்பிலும் தெரிவிக்கப்பட்டு வருகிறது.
இதுவரை காலமும் சபை உறுப்பினர் அமர்வுகளில் பங்குபற்றி வருகின்ற நிலையில் இவ்வாறான முன்மொழிவு சமர்ப்பிக்காமல் குறித்த உறுப்பினர் தாமதமாக வந்தமைக்கு மன்னிப்புக் கோருமாறு கோருவது சபை உறுப்பினரின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தும் செயல்" என்று சக உறுப்பினர்கள் தெரிவித்தனர். (த-9)

# தேர்தலின் பின்னர் ஊடகங்களுக்கு ஆப்பு

## வேறு பலருக்கும் சிக்கல் வரலாம்
## சிவமோகன் எம்.பி. எச்சரிக்கிறார்

மன்னார், ஜன. 18
நடைபெறவுள்ள தேர்தல் முடிவின் பின் ஊடகங்கள் உட்பட அனைத்துத் துறைகளிலும் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டு அனைவரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படக் கூடும் என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இன்றைய சிவில் நிர்வாகத்தில் கூட இராணுவப் புலனாய்வாளர்களின் தலையீடு அதிகமாகவுள்ளது. நேரடியாக பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டிய விடயங்கள் இராணுவத்துக்கும் புலனாய்வாளர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தச்செயற்பாடுகள் தமிழ் மக்களின் வாழ்வியலில் பெரும் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன.
இதற்கு ஆதாரமாகக் காட்டக் கூடியது தமிழர்கள் மீது இனப்படுகொலை நடத்தியவர்கள் இராணுவத்தில் பெரிய பொறுப்புகளிலும் அரச நிர்வாகங்களிலும் நியமிக்கப்படுகின்றமை.
2015லிருந்து தேர்தல் காலங்களில் இராணுவத்தினர் முகாம்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தனர்.




அடையாள அட்டை உள்ள புலனாய்வாளர்கள் மட்டுமே மறைமுகமாகச் செயற்பட்டு வந்தார்கள். இப்பொழுது மீண்டும் அதே புலனாய்வு வேகமாக ஊடுருவியுள்ளது.
கடந்த வருட குண்டுத் தாக்குதலைச் சாட்டாக வைத்து தமிழ் மக்கள் மீது அடக்குமுறைகளைச் செலுத்துவதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.
இராணுவத்திடமிருந்து விடுவிக்கப்பட்ட காணிகளைக்கூட மீண்டும் சுவீகரிப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளில் இராணுவத்தினர் இறங்கியுள்ளனர்.
ஒட்டுமொத்தமாக இந்த வருடம் தேர்தல் வருகின்ற படியால் அதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிட்டன - என்றார். (த-213)



## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

அச்சுவேலி,ஜன.18
அச்சுவேலி புத்தூரில் கட்டுத்துப்பாக்கியுடன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

அச்சுவேலிப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் 32 வயதான ஒருவரைக் கைது செய்துள்ளார்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவார் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-26)

## சிவ ஆராதனை

சண்டிலிப்பாய்,ஜன.18
சண்டிலிப்பாய் ஸ்ரீ மகா சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவிலில் ஓம் நமசிவாய லிகித ஜபமும், சிவஆராதனை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அடியார்கள் தாங்கள் எழுதிய ஓம் நமசிவாய மந்திரச் சுவடிகளை சிவலிங்கப் பெருமானின் பாதங்களில் சமர்ப்பித்து திருவருள் பெற்றுச் செல்லுமாறு குருமுதல்வர் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள் அறிவித்துள்ளார். (ஐ)

# என்டர்பிரைஸ் சிறிலங்கா கடன் திட்டத்துக்கு "தடா"

**கொழும்பு, ஜன.18**

**கடந்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட என்டர்பிரைஸ் சிறிலங்கா செயற்றிட்டம் முழுமையாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று அபிவிருத்தி வங்கிகள் மற்றும் கடன் வசதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடன்களைப் பெற்றுத்தருவதாகத் தெரிவித்துக் கொண்டு ஒரு தரப்பினர் நிதி மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர். அரசியல் தேவைகளைக் கருத்திற் கொண்டு கடந்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தக் கடன் திட்டம் முழுமையாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த அரசில் நிதியமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்ட கடன் திட்டங்கள் பயனற்றவையாகும். சாதாரண நடுத்தர மக்களுக்கு அந்தக் கடன் திட்டங்களை எவ்வழிமுறையில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக எவ்விதமான உரிய வழிமுறைகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. முக்கியமாக என்டர்பிரைஸ்சிறிலங்கா கடன்திட்டத்தைக் குறிப்பிட வேண்டும்.

இந்தக் கடன் திட்டத்தால் மக்கள் எவரும் பயனடையவில்லை. அரசியல் தேவைகளைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட இந்தக் கடன் திட்டம் முழுமையாகத் தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் ஊடாக கடன்களைப் பெற்றுத்தருவோம் என்று கூறும் நிதி மோசடிகாரர்களிடம் பொதுமக்கள் சிக்கிக் கொள்ள வேண்டாம். வியாபார நடவடிக்கைகளுக்கு கடன் தேவையாயின் இடைத் தரகர்கள் எவரது உதவியையும் நாடாமல் நேரடியாக வங்கிக்குச் சென்று உரிய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியும். இலகுவான முறையில் கடன் பெற்றுக் கொள்வதற்கான வசதி தற்போது அரசால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு சிறிய நடுத்தர வர்த்தக சமூகத்தின் முழுமையான ஒத்துழைப்பை பெறும் நோக்கில் அவர்களை ஊக்குவிக்கும் முகமாக கடன் உதவித் திட்டமொன்றை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது- என்றார். (எ)



# பாடசாலைகளை இனி மூடலாகாது

## கால்கோள் விழாவில் அதிபர் அறிவுறுத்து

கொடிகாமம், ஜன. 18
வடக்கில் பல பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இந்த நிலை இனிமேல் நீடிக்கக்கூடாது. மாணவர்களைப் பாடசாலைகளில் இணைக்க பெற்றோர்கள் முன்வரவேண்டும். பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்த தற்போது திறன் வகுப்பறை சிறப்புப் பெறுகின்றது என்பதையும் பெற்றோர்கள் உணர்ந்து செயற்பட முன்வரவேண்டும்.

இவ்வாறு கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை அதிபர் அ.தங்கவேல் தெரிவித்தார்.

கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையின் கால்கோள் விழாவும் திறன் வகுப்பறைத் திறப்பு விழாவும் நேற்றுமுன்தினம் முற்பகல் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டு மாணவர்களுடன் இணைந்து திறன் வகுப்பறையைத் திறந்து வைத்தார். மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. தரம் இரண்டு மாணவர்கள் தரம் ஒன்றுமாணவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்று பரிசில்களும் வழங்கினர்.

அதில் தலைமையுரை ஆற்றுகையில் அதிபர் மேலும் தெரிவித்ததாவது;

தரம் ஒன்றில் காலடி எடுத்து வைத்து எதுவிதமான பயமும் அச்சமும் இல்லாது கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்தும் ஒரு நிகழ்வாக கால்கோள் விழாவை கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தி சுமார் 15 வருடங்களாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. தென்மராட்சிப் பிரதேசத்தில் வழமையாக தரம் ஒன்றில் இணையும் மாணவர்களின் எண்ணிக்கையைவிட இந்த வருடம் இணைந்தவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியாகவுள்ளது. கடந்த வருடம் 800 மாணவர்கள் சேர்ந்தனர். இந்த வருடம் 700 மாணவர்களே இணைந்துள்ளனர். எங்கள் கோரிக்கைக்கு அமைய நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் இணைப்பாளரான செ.பிரதாப்பின் ஏற்பாட்டில் நாடா ளுமன்ற உறுப்பினர் 4 லட்சம் ரூபா விசேட நிதி ஒதுக்கீட்டில் திறன் வகுப்பறைக்கான உபகரணங்களை வழங்கியுள்ளார்.

திறன் வகுப்பறைக் கல்வி, கற்பதற்கும் கல்வி அடைவு மட்டத்தில் விருத்தி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் சிறப்பான நவீன கற்பித்தல் சாதனமாகவுள்ளது. இந்தச் சாதனங்கள் ஊடாக மாணவர்கள் தங்கள் கல்வியை வளர்ப்பதற்குச் சிறந்த முன்னேற்றத்தைக் காட்டுவதற்கு இந்த உபகரணங்கள் பிரயோசனமாகவுள்ளன. தென்மராட்சியில் 58 பாடசாலைகளில் 16 பாடசாலைகளில்தான் திறன் வகுப்பறைகள் உள்ளன. பல இடங்களில் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளே வழங்கியுள்ளனர். இதற்காக ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஏனைய ஆசிரியர்களுக்கும் இந்த பயிற்சியை வழங்கி மற்ற மாணவர்களும் பயன் பெறுவதற்கான வழிகளைச் செய்யக்கூடியதாக இந்த உபகரணத் தொகுதி இருக்கும். இதனூடாக எமது கல்வியில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும்- என்றார். (த-159)

## நெல்லை அழிக்கும் வெடிகதிர் நோய்

வரணி,ஜன.18
வரணி பிரதேச நெல் வயல்களில் வெடிகதிர் என அழைக்கப்படும் நோய்த் தாக்கம் பரவலாகக் காணப்படுகின்றது.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக நெற்பயிர்கள் அமோக விளைச்சலைக் கொண்டிருந்தாலும், இந்தநோய் காரணமாக விளைச்சலில் பெரும் பகுதி பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஒரு வகை சிறிய பூச்சிகளின் தொற்றால் பயிரின் மீது இடும் முட்டைகளில் இருந்து உருவாகும் புழுக்களின் தாக்கமே இந்த நோயின் அறிகுறியாகக் காணப்படுகிறது. நெற்பயிர்களின்நடுப்பகுதியிலேயே இதன் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கதிர்கள் பதரான நிலையில் காணப்படுகின்றன. ஆட்டக்காரி என அழைக்கப்படும் நெற்பயிர்களில் இதன் தாக்கம் சற்றுக் குறைவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-122)

## நிர்வாக தெரிவு

யாழ்ப்பாணம் ஜன.18
பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் நல்லூர் பிராந்திய சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில்செ.சந்திரசேகரம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலகக் கணக்காளர் ஆ. கிரிதரன் மற்றும் நிதியத்தின் மாவட்ட சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.


நிகழ்வில் புதிய ஆண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

# யாழ். மக்களிடம் அடிப்படைவாதம்

## கண்டுபிடித்தார் விமலரத்ன தேரர்

கண்டி, ஜன.18

யாழ்ப்பாணத்து மக்கள், அங்கு சிங்களவர்கள் வாழ்வதை விரும்புவதில்லை. விகாரைகள் கட்டுவதற்கும் எதிர்ப்பு வெளியிடுகின்றனர். அங்குதான் அடிப்படைவாதம் விதைக்கப்படுகின்றது. இவ்வாறு மல்வத்த பீடத்தின் அனுநாயக்கர் திம்புல்கும்புரே விமலரத்ன தேரர் சுட்டிக்காட்டினார்.



எதிர்க்கட்சித் தலைவராக கடந்த 3ஆம் திகதி கடமையேற்ற சஜித் பிரேமதாச நேற்றுமுன்தினம் கண்டி தலதா மாளிகைக்குச் சென்று சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டதுடன், மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசியும் பெற்றார். அதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் உடன் சென்றிருந்தனர்.

மல்வத்தபீடத்தின் அனுநாயக்கரை சந்தித்த சஜித் பிரேமதாச சமகால அரசியல் நிலைவரம் குறித்தும் தெளிவுபடுத்தினார். அதன்போது கருத்து வெளியிட்டபோதே மல்வத்த பீடத்தின் அனுநாயக்கர் திம்புல்கும்புரே விமலரத்ன தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனநாயக நாடொன்றில் ஆளுங்கட்சியைப் போன்று எதிர்க்கட்சியும் பலமாக இருத்தல் அவசியம் இந்த நிலையை உருவாக்குவதற்கான வலிமை உங்களிடம் இருக்கின்றது. பின்னடைவுகளை கண்டு தளர்ந்துவிடவேண்டாம் என்றும் சஜித் பிரேமதாசவிடம் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கு பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, எம்மிடம் சிறந்த குழு இருக்கின்றது. எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் தேசிய பாதுகாப்பு, சிங்கள, பௌத்தம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கி, ஏனைய இனத்தவர்களுக்கும் அவர்களுக்குரிய இடத்தை வழங்கிச் செயற்படுவதே எமது எதிர்பார்ப்பாக இருக்கின்றது என்றார்.

நாம் அடிப்படைவாதிகள் கிடையாது. ஆனால், யாழ்ப்பாணத்துக்கு சென்று பாருங்கள்? இங்கு போல் அங்கு எம்மவர்களுக்கு வாழமுடிகின்றதா? வீடு கட்டுவதற்கோ, விகாரை கட்டுவதற்கோ, சிங்கள மக்கள் வாழ்வதற்கோ அவர்கள் விரும்புவதில்லை. அதனால் அங்குதான் தவறு இருக்கின்றது என்றுதேரர் குறிப்பிட்டுள்ளார். (ஏ-44)



## மன்னார் மக்களுடன் மஸ்தான் எம்.பி. சந்திப்பு

மன்னார், ஜன.18

நாடாளுமன்ற உறுப்பினரும், மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான காதர் மஸ்தான், மன்னார் மாவட்ட மக்களை நேற்று முன்தினம் சந்தித்தார்.

உப்புக்குளத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்திப்பு நடைபெற்றது.

இதில் மக்கள் தமது பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

பிரச்சினைகளைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார் எனத் தெரிவித்தார். (ந)

## சர்வதேசம் தீர்வு தராது அமைச்சர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜன. 18

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை இலங்கைக்குள்ளேயே பெற்றுக்கொள்ள வேண்டும். வெளிநாடுகள் வந்து எமக்கான தீர்வுகளை பெற்றுத் தரமுடியாது. போர்க் காலத்தில் எங்களை விட்டு வெளியேறக் கூடாது என்று எமது மக்கள் சர்வதேசத்தின் காலில் வீழ்ந்து அழுதபோதும் அதைக் கண்டுகொள்ளாமல் அழிவுகளுக்குள் கைவிட்டே சர்வதேசம் சென்றிருந்தது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற தமிழ் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் டக்ளஸ் இவ்வாறு தெரிவித்தார் என்று அவருடைய ஊடகப் பிரிவு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்மக்களின் அரசியல் உரிமைப்பிரச்சினைகளுக்கும், அபிவிருத்திப் பிரச்சினைகளுக்கும், அன்றாடப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நாமே நடைமுறைச் சாத்தியமான வழியில் முயற்சிக்க வேண்டும்.

இன ஐக்கியம், தேசிய நல்லிணக்கத்தின் ஊடாகவே தேசிய அரசியல் பிரச்சினைக்கும் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைக் காண வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுதவிர, இந்திய மீனவர்கள் இலங்கை கடற் பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றமை, தடைசெய்யப்பட்ட தொழில் உபகரணங்களைப் பாவித்து கடல் வளங்களை நாசப் படுத்துகின்றமை தொடர்பாக இரு நாட்டுப் பிரதிநிதிகளுக்கிடையில் இந்தமாத இறுதியில் கொழும்பில் பேச்சு நடைபெறலாம் என்றும் தெரிவித்தார். (த)

## பொன்விழாவும் மதிப்பளித்தலும்

சண்டிலிப்பாய், ஜன.18

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் வடக்கு சிவசக்தி சனசமூக நிலையத்தின் பொன்விழாவும், மதிப்பளித்தல் நிகழ்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளன.

நிலையத் தலைவர். கீ.தங்கவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், கௌரவ விருந்தினராக வலி. தென்மேற்கு உதவிப் பிரதேசசெயலர் திருமதி. செ.செல்வகுமாரி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஐ-63)

## தென்மராட்சி கிழக்கில் நெல் அறுவடை ஆரம்பம்

சாவகச்சேரி, ஜன. 18

தென்மராட்சி தெற்கில் காலபோக நெல் அறுவடை ஆரம்பமான நிலையில் ஏராளமான வர்த்தகர்கள் வாகனங்களில் வந்து நெல் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

காய்ந்த நெல் மூடை (72 கிலோ கிராம்) 3 ஆயிரம் ரூபாவாகவும் இயந்திரத்தால் அறுவடைசெய்யும் ஈரநெல் (75 கிலோ கிராம்) 2ஆயிரத்து 800 ரூபாவாகவும் கொள்வனவு செய்கின்றனர் என்று தனன்களப்பு, மறவன்புலவு, கைதடி நாவற்குழி ஆகிய பகுதிகளில் உள்ள நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை காய்ந்த நெல் வயல்களில் அறுவடை மேற்கொள்ள இயந்திரங்கள் முற்பகுதிகளில் உள்ள வயல்கள் ஊடாகச், செல்வதால் தமது பயிர்கள் இன்னமும் காயாத நிலையில் காணப்படுகின்றமையால் அவற்றை அறுவடை இயந்திரங்கள் மற்றும் நெல்மூடைகள் ஏற்றச்செல்லும் வாகனங்கள் சேதப்படுத்துகின்றன என்றும் நெற்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

காலபோக நெல் அறுவடை செய்யப்படும் வயல்களில் ஈரத்தன்மை காணப்படுவதால் உப உணவுப் பயிர்கள், விதைப்பு மேற்கொள்ளும் விவசாயிகள் அந்தந்தப் பிரிவு கமக்கார அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)



## இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம் கைதடி குருசாமி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் சி சிவதாசன், ஆஸ்திரேலிய நியூ சவுத்வேல்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சி உதவியாளர் திருமதி சுதர்சன் ஜெனனி, பழைய மாணவனும் ஊர்காவற்றுறை பிரதேச சபை முகாமைத்துவ உதவியாளருமான கு.இராகவன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஐ-159)

# தற்போதைய ஆளுநராவது செய்வாரா என்று ஏக்கம்

## சுகாதாரத் தொண்டர்கள் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜன. 18**

**வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர் நியமனம் தொடர்பில் நான்காவது ஆளுநருடன் உரையாடுகின்றோம். தீர்வு மட்டும் கிட்டவில்லை. தற்போதைய ஆளுநராவது நியமனம் தருவாரா என்று பாதிக்கப்பட்ட தொண்டர்கள் ஏக்கம் தெரிவிக்கின்றனர்.**

நீண்டகாலமாகத் தொண்டராக இருந்த நிலையில் நீண்ட போராட்டங்கள் சந்திப்புக்களின் பின்னர் மெல்ல நகர்ந்த எமது நியமனம், நேர்முகப் பரீட்சை வரையில் வந்தது. நேர்முகத் தேர்வின்போதே சரியான திட்டமிடல் மேற்கொண்டிருப்பின் எமக்கான நியமனம் அன்றே கிடைத்திருக்கும். சிலரின் தவறான முடிவுகளால் பலர் பாதிக்கப்பட்டுள்ளோம். புதிய முகங்களை உட்புகுத்தியமையால் நாமே அதனை நிறுத்துமாறு கோரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

நேர்முகத் தேர்வு இடம்பெற்றபோதும் பலர்பாதிக்கப்பட்டோம். அதேபோன்று சில புதுமுகங்களும் உள்ளன. நியமன எண்ணிக்கையிலும் மாற்றம் உண்டு. இந்த நிலையில் முதல் நேர்முகத் தேர்வில் பெயரும் இரண்டாம் நேர்முகத் தேர்வின் பின்னர் வழங்கியநியமனக்கடிதமும்கையில் உள்ளன. ஆனால் பணி மட்டும் வழங்கப்படவில்லை. அதே போன்று இரண்டாவது பட்டியலிலும் பலர் பாதிக்கப்பட்டுள்ளோம். இது தொடர்பில் புதிய ஆளுநரை இரு தடவைகள் சந்தித்தோம். இது வரை தீர்வு கிட்டவில்லை. சுகாதார அமைச்சின் தகவல்களின் பிரகாரம் நியமன ஊழியர்களைச் சரியாக இனங்கண்டு உறுதி செய்யுமாறும் அதற்காக தினவரவின் மூலம் உறுதி செய்யுமாறு கோரப்பட்டுள்ளதாக தற்போது கூறப்படுகின்றது. அவ்வாறானால் இனியும் எவ்வளவு காலம் கடத்தப்படும் என்று அச்சமாகவுள்ளது. இதனால் எமக்கான நியமனம் வழங்கப்படுமா இல்லையா என்ற அச்சம் காணப்படுகின்றது. என்று மேலும் தெரிவித்தனர். (த-105)

# ரஞ்சனின் விவகாரத்தால் பலரது வாழ்க்கை மாறும்

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு

கொழும்பு, ஜன.18



ரஞ்சனின் விவகாரம் கட்சியை விட பலரது வாழ்க்கையிலேயே மாற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கண்டி தலதா மாளிகையில் சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்ட சஜித் அதன்பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொதுத்தேர்தலில் எங்களது செயற்பாடுகள் தொடர்பாக கூறுவதற்கு முன்னர் புதிய மாற்றமொன்றை கொண்டு வருவதற்கு மக்கள் தயாராக இருக்கின்றார்களா என்பதையே அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

நாட்டின் உண்மைகளை உணர்ந்து மக்கள் பொதுத் தேர்தல் ஊடாக எங்களுக்கு அதிகாரத்தை வழங்கினால், அவர்களுக்கு தேவையான அபிவிருத்தி செயற்பாடுகள் உட்பட நாட்டின் முக்கிய பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை எம்மால் வழங்க முடியும்.

ரஞ்சன் விவகாரம் கட்சியில் பிரச்சினை என்பதை விட பலரது வாழ்க்கையிலேயே பிரச்சினையை ஏற்படுத்துமென தோன்றுகின்றது. அதனால் ரஞ்சன் விவகாரம் தொடர்பாக நான் எந்தவொரு கருத்தையும் வெளியிட வேண்டிய தேவை கிடையாது. - என்றார். (எ)

# உப அலுவலகம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.18

ஆனைக்கோட்டையிலுள்ள மானிப்பாய் கிராம உப அலுவலகம் சுமார் 16 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் கீழ் மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்புக் கிராமம் என 4 உப அலுவலகங்கள் இயங்குகின்றன.

ஆனைக்கோட்டையில் இயங்கும் மானிப்பாய் கிராம உப அலுவலகம் கிராம சபை இயங்கிய காலத்தில் சுமார் 50 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்டது. பழைமை வாய்ந்த சிறிய கட்டடத்தின் வசதியீனங்கள் மத்தியில் இயங்கி வருகின்றது. மழை காலங்களில் உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளைச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பில் சுட்டிக்காட்டிய பிரதேசசபை உறுப்பினர்கள் உத்தியோகத்தர்களினதும், மக்களினதும் நலன்களைக் கருத்தில் கொண்டு புதிய கட்டடம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தவிசாளரைக் கோரியிருந்தனர்.

இவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட தவிசாளர் புதிய கட்டடம்அமைப்பதற்குநிதியின்மையால் தற்காலிகமாகக் கட்டடத்தைத் திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவித்திருந்தார்.

தற்போது சபை நிதியிலிருந்து சுமார் 16 இலட்சம் ரூபா செலவில் கட்டடம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (க-115)

# ஐ.தே.க. எம்பிக்கு மறியல் நீடிப்பு!

கொழும்பு, ஜன.18

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர்ஷாந்தசிசிரகுமார அபேசேகரவின் விளக்க மறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

பிணைநிபந்தனையைமீறியகுற்றச்சாட்டின் பேரில் ஷாந்த சிசிர குமார அபேசேகர கைது செய்யப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவர் நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும்21ஆம்திகதிவரைவிளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு, சட்டவிரோதமான முறையில் துப்பாக்கி வைத்திருந்தமை தொடர்பாக சிலாபம் மேல் நீதிமன்றத்தில் குறித்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி அவருக்கு பிணை வழங்கப்பட்டதுடன், ஞாயிற்றுக்கிழமைதோறும்காலை9மணிக்கும் 12 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் என்ற நிபந்தனையும்விதிக்கப்பட்டிருந்தது.

2018ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி, பிரதிவாதியின் தரப்பினரால் சிலாபம் மேல் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்த கோரிக்கைக்கு அமைய, வாராந்தம் கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டது. ஒவ்வொரு மாதாந்தத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை, சிலாபம் பொலிஸ்நிலையம்வந்துகையொப்பமிட வேண்டும் என நீதிமன்றம் அறிவித்திருந்தது.

அவர் இந்த நிபந்தனையை மீறியிருப்பதாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட நிலையிலேயேகடந்தஒக்ரோபர்10ஆம்திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ)

# ஆஸியில் இலங்கையர் கைது

கொழும்பு, ஜன.18

ஐந்து இலங்கையர்கள் உள்ளிட்ட ஏழு பேர் ஆஸ்திரேலியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர். திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே விக்டோரியா பொலிஸாரினால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மெல்போர்ன் நகரில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே, இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள இலங்கையர்களுக்கு எதிராக பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)



# வாக்குப் பொறுக்கவே சஜித் அப்படிச் செய்தார்

## அதனால்தான் வீடுகள் இழுபறி குற்றஞ்சாட்டுகிறார் மஸ்தான்

மன்னார்ஈ ஜன. 18



ஜனாதிபதி வேட்பாளராக மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே திட்டமிடாமல் வீட்டுத் திட்டங்களை வழங்கி தற்போதுமக்களைச்சிரமத்துக்குள் தள்ளிவிட்டுள்ளார். முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாச என்று கோத்தாபய ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் குற்றஞ்சாட்டினார்.

மன்னார் உப்புக்குளம் பகுதியிலுள்ள அவருடைய அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வீட்டுத் திட்டம் தொடர்பான விடயங்கள் தொடர்பாக தொடர்சியாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாடியுள்ளோம். வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கியிருந்த நிதியைவிட அரசியல் நோக்கத்துக்காக கண்டபடி வீட்டுத் திட்டங்களைக் கொடுத்துள்ளனர்.

திட்டமிடல் இல்லாத செயற்பாடுகளால்தான் மக்கள் தற்போது மிகுந்த சிரமத்துக்கு உள்ளாக்கியுள்ளனர். புதிய அரசு என்ற வகையில் மக்களுக்கான நிதியை வழங்குவதற்கு முயற்சிசெய்துகொண்டிருக்கின்றோம். உயர் மட்டத்துடனும் பிரதமருடனும் இராஜாங்க அமைச்சருடனும் பேசியுள்ளோம்.

அவர்கள் விரைவில் குழு அமைத்து எமது பகுதிக்கு அனுப்பி மாவட்ட ரீதியில் வழங்கப்பட வேண்டிய நிதிகள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர்.

ஆளும் கட்சி என்ற வகையில் மக்கள் எதிர்கொண்டுள்ள இந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்வது எமது பொறுப்பு என்பதன் அடிப்படையில் அவர்களுக்கான நிதியைப் பெற்றுக் கொடுக்க முயற்சிசெய்துகொண்டிருக்கின்றோம் என்று மேலும் தெரிவித்தார். (கு-56)

# கூட்டுறவாளர்களுக்கு விசேட கொடுப்பனவு

வவுனியா,ஜன 18

வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

சங்கத்தால் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

கிளை நிலைய பணியாளர்களுக்குஅவர்களின் வியாபார நடவடிக்கைக்கு அமைவாகவும் ஏனைய பணித்தொகுதியினருக்கும் இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.

சங்கத்தின் வருமானத்துக்கு ஏற்றவாறு இந்த மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்குவதற்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் இந்தப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமே இவ்வாறு முதன் முதலாகப் பணியாளர்களுக்கு விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்குவதற்கு முன்வந்துள்ளது என்று மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் இவ்வாறு தமது வருமான நடவடிக்கைகளை அதிகரித்து, பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்க முன்வரவேண்டும். சில கிளை நிலையங்களில் வருமான நடவடிக்கை அதிகரித்தாலும் கூட சங்கங்கள் இவ்வாறான ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்காமலும் உள்ளன. இதனால் பணியாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். வருமான நடவடிக்கைகளை அதிகரிக்கவும், ஊக்குவிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் அதற்கான ஆலோசனைகளை திணைக்களம் சங்கங்களுக்கு வழங்கத் தயாராகவுள்ளது. (க-17)

# ஊடக சுதந்திரத்தில் தலையிடுகிறது அரசு

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.18

புதிய அரசில் ஊடக சுதந்திரம் கேள்விக்குறியாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அண்மையில் தமிழ் ஊடகங்களின் ஆசிரியர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு தமிழ் ஊடகங்களில் ஏன் அரசுக்கு எதிரான செய்திகள் வெளியிடப்படுகின்றன என்று கேட்கப்பட்டுள்ளது. அதனை ஊடக சுதந்திரத்தில் மேற்கொள்ளும் தலையீடாகவே நாம் கருதுகின்றோம்.



இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்தித் சமரசிங்க தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அரசு தேர்தலுக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் தற்போது படிப்படியாகக் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன. முக்கியமாக ஊடக சுதந்திரம் கேள்விக் குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (எ)






# எம்.ஜி.ஆரின் பிறந்த தினம்

வடமராட்சி,ஜன.18

தமிழக முன்னாள் முதலமைச்சரும், பிரபல நடிகருமான புரட்சித் தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரனின் 103 ஆவது பிறந்த தினம் பருத்தித்துறை நகரில் எம்.ஜி.ஆர் பொதுப்பணி மன்றத்தில் நேற்றுக் கொண்டாடப்பட்டது.

மத்திய பஸ் நிலையப் பகுதியில் எம்.ஜி.ஆரின் உருவப்படம் வைக்கப்பட்டு, எம்.ஜி. ஆர் பொதுப்பணி மன்றத்தைச் சேர்ந்த எஸ்.பழனிப்பிள்ளை, பொ.இராசதுறை ஆகியோர் இணைந்து மலர் மாலை அணிவித்தனர்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் பருத்தித்துறை எம்.ஜி ஆர் பொதுப்பணி மன்றம் எம்.ஜி ஆரின் பிறந்தநாளை நினைவுகூர்ந்தது. எதிர்வரும் காலங்களிலும் நினைவு கூரல் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-173)

# பன்றிகளால் நெல் அழிவு

வரணி.ஜன.18

வரணிப் பிரதேசத்தில் வயல்களில் உள்ள நெற்பயிர்கள் முற்றிய நிலையில், பன்றிகள் கூட்டமாக அதன் ஊடே புகுந்து நெல்லை அழித்து வருகின்றன. வரணி மாசேரி வண்ணான்வயல் பிரதேசங்களில் பன்றிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதுடன் பனம் பாத்திகளையும் பன்றிகள் நாசப்படுத்தி வருகின்றன. கூட்டம் கூட்டமாக வரும் பன்றிகள் பனம் பாத்தி முழுவதையும் கிண்டிக் கிளறி கிழங்குகளை நாசப்படுத்தி வருகின்றன.

இதனால் பனம் பாத்தி உரிமையாளர்கள் பனம் கிழங்கு முற்றும் முன்பே பாத்திகளை விலை பேசி தனியாருக்கு விற்று வருகின்றனர். பன்றிகளின் தொல்லை காரணமாக உற்பத்தியாளர்கள் எதிர்பார்த்த வருமானத்தைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (க-122)

# விக்ரோறி வி.கழகத்தின் அதிஷ்டலாப சீட்டிழுப்பு

மூளாய், ஜன. 18

மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகத்தின் வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பின் வெற்றியாளர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

மூளாய் சிறி சித்தி விநாயகர் கோவில் முன்றிலில் மாலை 5.30 மணியளவில் பரிசில் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இதில் 1ஆம் பரிசை 5631என்ற அதிஷ்ட எண்ணைக் கொண்ட ஒருவர் பெற்றுக்கொண்டார். 2ஆம் பரிசை 4825 என்ற அதிஷ்ட எண்ணைக்கொண்ட தி.சிந்துஜா பெற்றுக்கொண்டார். 3ஆம் பரிசை 6809 என்ற அதிஷ்ட எண்ணைக்கொண்ட சி.ஸ்ரீரங்கனும், 4ஆம் பரிசை 0475 என்ற அதிஷ்ட எண்ணைக்கொண்ட ச.சிவப்பிரியனும், 5ஆம் பரிசை 4293 என்ற அதிஷ்ட எண்ணைக்கொண்ட சி.கோபிகாவும் பெற்றுக்கொண்டனர் என்று மூளாய் விளையாட்டுக் கழகத்தினர் தெரிவித்தனர்.

பரிசுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வில் வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் உபதவிசாளர், மூளாய் கிராம அலுவலர், மற்றும் விக்ரோறி விளையாட்டு கழக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த அதிஷ்டலாபச் சீட்டு விற்பனை செய்த அனைத்து கழக உறுப்பினர்களுக்கும் கழகத்தின் சார்பில் நன்றிகளையும் அந்தக் கழகத்தினர் தெரிவித்தனர். (ஜ-21)



# உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

க.பொ.த.உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகியிருந்தன. அதன் அடிப்படையில் சில பாடசாலைகள் பெற்ற புள்ளி விவரங்கள் பின்வருமாறு:

**கிளிநொச்சி இராமநாதபுரம் ம.வி.**

**கலைப் பிரிவு (புதிய பாடத்திட்டம்)**
சு.கிருத்திகா - 2ஏபி, ந.சியானுகா - ஏ2பி, இ.மதுசனா - ஏபிசி, பு.கஜலக்சி - 2பிசி, ஜெ.ஜஸ்னியா -ஏபிசி.

**வர்த்தகப் பிரிவு (புதிய பாடத்திட்டம்)**
தி.யதுஷா -2ஏபி, இ.அகல்யா -3பி, ர. விதுசா -2ஏபி, எஸ்.விநோதினி - ஏபிசி.

**கலைப் பிரிவு (பழைய பாடத்திட்டம்)**
ந. லக்ஜனா -2பிசி.

**வர்த்தகப் பிரிவு(பழையபாடத்திட்டம்)**
யோ. அபிராமி -3ஏ.

**யாழ். சென் ஜேம்ஸ் மகளிர் கல்லூரி**

**கலைப்பிரிவு**
ஆர்.அஜந்தினி - 2ஏசி, டி.பிரவினா - ஏ2பி.

**வயாவிளான் மத்திய கல்லூரி**

**கணிதப்பிரிவு**
தே.சங்கரன் - 3ஏ, த.சேந்தன் - 2ஏபி, சி.சிந்துஜன் - ஏ2பி, மு.ராகுலன்-ஏ2சி, அ.அகிம்சன்-ஏபிசி, ப.கஜீபா-ஏபிசி, யோ.கனுசன்-2பிசி, எஸ்.ஜோன்வின்மன்- பிசிஎஸ், ச.மிதுன் -பிசிஎஸ், சி.நிலானி -ஏபிசி, செ.யசிந்தா -ஏபிசி,யோ. வினோஜன்-ஏபிசி, சி.சுரேன்-2பிசி, உ.தேனுயா - 3சி.

**வர்த்தகப் பிரிவு**
வி.விதுனா-3ஏ, க.அகீபன்-2ஏசி,த.விபூலன் -2ஏபி, ப.கோபிகா-2ஏபி, செ.ஜெனுயா-2ஏபி, க.நிசாலினி -3ஏ,சி.நிதர்சன் -ஏ2சி, இ.நிதுசனா - ஏ2சி, இ.தர்சிகா-ஏபிசி, அ.திவ்யா - பி2சி.

**கலைப்பிரிவு**
ம.சுயந்தன்-ஏ2பி, சி.பதுசாயினி-2பிசி, ஞா.வித்தியா - 3ஏ, ர.சஜீவினி-ஏ2சி, உ.சர்மியா-ஏபிசி, ச.தனுயா - ஏ2சி,அ.தஸ்மிகா -ஏ2சி, ப.டனிஸ்ரா - 2பிசி,த.தர்சனா - பி2சி, த.ரவீனா - பி2சி, சி.திவ்யா-பி2சி, ச.தர்மிதா-3சி.

**உயிர்முறைமைத் தொழில்நுட்பம்**
ம.சாருஜா - 2சிஎஸ், ச.லக்ஸ்சிகா-சி2எஸ், சு.கவின்சிகா -3எஸ், க.கஜிந்தா-சி2எஸ், ர.கம்சாயினி - சி2எஸ்,தே. தனுஸ்டிகா- சி2எஸ், த. ஆரணி - 3எஸ்,

**பொறியியல் தொழில்நுட்பம்**
ஜெ.கனிஸ்ராஜ்-2பிசி, சி.சினோஜா- 2சிஎஸ், த.யதுர்சன் -3சி, இ.வக்சன் -2சிஎஸ், ப.துசியந்தன் - 3சி,க.சுவசாயினி - சி2எஸ்.

# வெற்றிக்கு நாமே துணை

*மாணவன் யோகதீபன் அறிவுரை*



யாழ்ப்பாணம்,ஜன.18
எங்களது வெற்றிக்கு நாங்களே துணை. முயற்சித்தால் வெற்றி கிடைக்கும். வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்குள் இருக்க வேண்டும். இவ்வாறு புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மாணவன் சந்திரலிங்கம் யோகதீபன் தெரிவித்தார்.
க.பொ.த உயர்தர பரீடசைப் பெறுபேற்றின் அடிப்படையில் உயிர்முறைமைகள் தொழில் நுட்பப் பிரிவில் (பழைய பாடத்திட்டம்) 2பிசி பெறுபேறுகளைப் பெற்று மாவட்ட நிலையில் முதலாம் இடம் பெற்ற மாணவன் மேலும் தெரிவித்ததாவது:
"உயர்தரத்தில் முதலாவதாகத் தோற்றிய போது நல்ல பெறுபேறு கிடைக்கவில்லை. இரண்டாவது தடவையாக உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி இருந்தேன். வெளியான பெறுபேறுகளுக்கமைய மிகப் பெரிய அதிஷ்டம் கிடைக்கும்என்று எதிர்பார்க்கவில்லை. சிறந்த பெறுபேறு பெற்றமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன். தரம் 1 இருந்து தரம் 3வரை புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயத்திலும், அதன்பின் நான்காம் தரம் முதல் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியிலும் கல்வி கற்றேன். சிறுவயது முதல் பல வெற்றிகள் பெறுவதற்கும், இந்தப் பெறுபேற்றைப் பெறுவதற்கும் உதவிய எனது பெற்றோர், கல்லூரி அதிபர், வகுப்பாசிரியர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி" - என்றார். (க)

# முயன்றேன் சித்தியடைந்தேன்

## லகீசன் பெருமிதம்



யாழ்பாணம்,ஜன.18
முதல் தரத்தில் எதிர்பார்த்த பெறுபேறுகள் கிடைக்காவிடிலும், இரண்டாம் தரம் முயற்சி செய்து பரீட்சைக்குத் தோற்றினேன். சிறந்த பெறுபேறுகளைப் பெற்றேன் என்று செல்வநாதன் லகீசன் தெரிவித்தார்.
க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இலத்திரனியல் தொழில் நுட்பப் பிரிவில் ஏ2பி பெறுபேறுகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 4 இடத்தைப் பெற்ற புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி மாணவன் மேலும் தெரிவித்ததாவது:
"ஆரம்பத்தில் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்று சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று உயர்தரக் கல்விக்காக ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில் கல்வி கற்றேன். பின்தங்கிய கிராமத்தில் வசித்த நான் குடும்பத்தின் வறுமையை நினைத்து உயர்தரத்தில் சிறந்த பெறுபேறு பெற்றுச் சிறந்த நிலையை அடைந்து அனைவருக்கும் சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்துடன் இருந்தேன். உயர் தரத்தில் முதல் தடவையில் எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்கவில்லை. எனினும் எனது பெற்றோர்களின் ஊக்குவிப்பும், சகோதரனின் நம்பிக் கையூட்டலும், ஆசிரியர்களின் ஆலோசனையும் உயர்தரத்தில் இரண்டாம் முறை சிறந்த பெறுபேறு பெறுவதற்கு -உதவியது." என்றார். (க)

# அதிக பயிற்சி கைகொடுத்து

## கௌரீசன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஜன.18
பல்தேர்வு வினாக்களைக் கூடுதலாகப் பயிற்சி செய்தேன். சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு அதுவே கைகொடுத்தது என்று தர்மசிங்கம் கௌரீசன் தெரிவித்தார்.
க.பொ.த உயர்தர பரீட்சையில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் வர்த்தகத்துறையில் பழைய பாடத்திட்டத்தில் 2ஏபி பெறுபேறு பெற்று மாவட்ட மட்டத்தில் 2 ஆம் இடத்தைப் பெற்ற மாணவன் மேலும் தெரிவித்ததாவது:
"ஒழுங்காக வகுப்புகளுக்குச் சென்று பயிற்சி வினாக்களைச் செய்தேன். சிறந்த பெறுபேறு கிடைத்துள்ளது. இந்த நிலையை அடைவதற்கு ஊக்கம் அளித்த பெற்றோர்களுக்கும், கல்லூரி, ஆசிரியர்கள் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள், மாணவ நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் கணக்காளர் ஆக வந்து சமூகத்துக்கு சேவை செய்ய விரும்புகின்றேன்" - என்றார். (க)

# ஆறு பேருக்கு ரூ.12,000 தண்டம்



யாழ்ப்பாணம்,ஜன.18
டெங்குத் தொற்றுப் பரவக் கூடிய வகையில் சூழலை வைத்திருந்த 9 பேரில், 6 பேருக்கு 2 ஆயிரம் ரூபா வீதம் 12 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
அத்துடன் மன்றுக்குச் சமுகமளிக்காத மூவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.
யாழ். மாநகரப் பகுதியில் டெங்குத் தொற்றாளர்கள் அதிகமாக இனங்காணப்பட்டு வருகின்றமையைத் தொடர்ந்து, சுகாதாரப் பிரிவினர் வீடு வீடாகச் சென்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ப.சஞ்ஜீவன் யாழ். நகர்ப் பகுதியில் வர்த்தக நிலையங்கள் உட்பட வீடுகளைச் சோதனைக்கு உட்படுத்தினர். அதில் ஒன்பது இடங்களில் குடம்பிகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.
அவர்களுக்கெதிராக யாழ். நீதிமன்றத்தில் கடந்த வாரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையில் மன்றுக்குச் சமுகமளித்த ஆறு பேரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டமையையடுத்து, தண்டம் விதிக்கப்பட்டது. (க-115)

# நாடக ஆற்றுகை

வவுனியா,ஜன.18
'அன்பமுதூறும் அயலார்" என்ற நாடகம் ஆற்றுகை நாளை ஞாயிற்றுக்கிழமை வவுனியா குடியிருப்புக் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
காலை 9.30 மணிக்கும் பிற்பகல் 3 மணிக்கும் நாடகம் ஆற்றுகைசெய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
தேசிய கலை இலக்கியப் பேரவையின் வவுனியாப் பிரதேசப் பேரவையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.
உலகப் புகழ்பெற்ற ரஷ்ய நாடக ஆசிரியர் அன்ரன் செக்கோவ்வின் எழுத்துருவில், குழந்தை ம. சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்பில், சத்தியசீலனின் நெறியாள்கையில் உருவான செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் இந்த "அன்பமுதூறும் அயலார்" என்ற நாடகமே ஆற்றுகை செய்யப்படவுள்ளது. (ஜ)

# பசும்பாலுக்கு குறைவில்லை



யாழ்ப்பாணம், ஜன.18
தைப்பொங்கல் மற்றும் முக்கிய விரத நாள்களில் மட்டுமே பசும்பாலுக்குப் பற்றாக்குறை ஏற்படுவது வழக்கம். தற்போது பசும்பால் போதியளவு நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது என்று யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்தனர்.
கடந்த பொங்கல் தினத்தன்று பசும்பாலுக்குப் பெரும் கிராக்கியும், பற்றாக்குறையும் ஏற்பட்டது. பசும்பாலைப் பெறுவதற்கு நுகர்வோர் பால்சாலைகளுக்கு அலைந்து திரிந்தனர். பசும்பால் விற்றுத் தீர்ந்து விட்டதாகப் பால் சாலை விற்பனை நிலையங்கள் கைவிரித்தன.
இது குறித்து யாழ்கோ நிறுவனத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,
வழமையாகக் கால்நடை வளர்ப்போர் அங்கத்தவர்களிடம் இருந்து தினமும் 5 ஆயிரத்து 500 லீற்றர் பசும்பால் கொள்வனவு செய்யப்படுகின்றது. அந்தப் பால் விற்பனை நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.
இந்தப் பசும்பால் தினமும் விற்றுத் தீர்ந்து விடுகின்றன. தைப்பொங்கலை முன்னிட்டு ஏற்கனவே மூவாயிரம் வரையிலான பைக்கற் பால் தயார் செய்யப்பட்டு, அவை பால் விற்பனை நிலையங்கள் ஊடாக நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டன.
இவ்வாறு முக்கிய விரதகாலம் மற்றும் தைப்பொங்கல் போன்றவற்றின் போது பாலுக்குப் பற்றாக்குறை ஏற்படுவது வழக்கம் என்று தெரிவித்தனர். (க-17)

# கால்கோள் விழாக்கள்

## வவுனியா சிதம்பரபுரம் ஸ்ரீநாகராசா வித்தியாலயம்





வவுனியா சிதம்பரபுரம் ஸ்ரீநாக ராசா வித்தியாலயத்தின் கால் கோள்விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பாடசாலையில் அதிபர் தமிழழகன் தலைமை யில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தின ராக வவுனியா தெற்கு ஆசிரியர் கல்விவள முகாமையாளர் வீ. பரஞ்சோதி, சிறப்பு விருந்தி னராக வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-222)

## முல்லைத்தீவு அணிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் வித்தியாலயம்




முல்லைத்தீவு அணிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் வித்தியாலய கால்கோள் விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி.ந.விஜயராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மனைப் பொருளியல் ஆசிரிய ஆலோசகர் செல்வி.பொ.ஜோயினா கலந்துகொண்டார். நிகழ்வில் புதிதாக இணைந்துகொண்ட மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-74)

## முல்லைத்தீவு முள்ளியவளை தமிழ் வித்தியாலயம்





முல்லைத்தீவு முள்ளியவளை தமிழ் வித்தியாலய கால்கோள் விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் புதிதாக இணைந்த மாணவர்களும், அவர்களது பெற்றோரும் சேர்ந்து பாடசாலை வளாகத்தில் மரக்கன்றுகளை நடுகை செய்தனர். அத்துடன் மாணவர்களுக்கான பரிசுப்பொதிகளை சிவம் அறக்கட்டளையூடாக கந்தப்பிள்ளை திலீபன் வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)

## வவுனியா விபுலானந்தாக் கல்லூரி





வவுனியா விபுலானந்தாக் கல்லூரியின் கால்கோள் விழா நேற்றுமுன்தினம் பாடசாலை மண்டபத்தில் அதிபர் பொன். சிவநாதன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு கல்விப் பணிப்பாளர் எஸ். ராதாகிருஷ்ணன், சிறப்பு விருந்தினர்களாக பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் ஸ்ரீதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். பாடசாலையில் தரம் ஒன்றுக்கு புதிதாக இணைந்து கொண்ட மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-18)

## மன்னார் வலயமட்ட கால்கோள் விழா






இவ்வருடத்துக்கான மன்னார் வலய மட்ட கால்கோள் விழா நேற்று வெள்ளிக்கிழமை பேசாலை மன். சென் மேரிஸ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் கே.ஜெ.பிறெட்லி தலைமையில் நடைபெற்ற விழாவில் பிரதம விருந்தினராக மன்னார் நகர சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் எஸ்.கில்ரோய் பீரீஸ் கௌரவ விருந்தினர்களாக பேசாலை பங்குத் தந்தை அருட்பணி எஸ்.தேவராஜா அடிகளார், மன்னார் கோட்டக் கல்வி அதிகாரி ரி.கிறிஸ்துராஜா, நானாட்டான் கோட்டக் கல்வி அதிகாரி ஜெகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-60)

## வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம்



வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயத்தின் கால்கோள் விழா வயாவிளான் மத்திய கல்லூரியின் இராமசாமி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினராக மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ரீ.ஜோன் குயின்ரஸ், கௌரவ விருந்தினராக வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தரம் இரண்டு மாணவர்கள் புதிதாக தரம் ஒன்றுக்கு இணைந்த மாணவர்களை மாலை அணிவித்து வரவேற்றனர். தரம் ஒன்று மாணவர்களுக்குப் பரிசில்களும், மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (ந-159)

# ஐ.தே.க. சிக்கலுக்கு திங்கள் தீர்வு வரும்

## அந்தக் கட்சி எம்.பிக்கள் நம்பிக்கை

**ஐக்கிய தேசியக்கட்சிக்குள் எழுந்துள்ள தலைமைத்துவப் பிரச்சினைக்கு எதிர்வரும் திங்கட்கிழமை தீர்வு எட்டப்படும் என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.**

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கருஜயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகிய மூவரும் ஒரு மேசையில் அமர்ந்து பேச்சு நடத்தி இறுதி முடிவை அறிவிப்பார்கள் எனவும் அவர்கள் கூறினர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் கூடியது. சுமார் 65 உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

கட்சித் தலைமைத்துவம் தொடர்பில் ஆராய்வதற்கு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் ஆரம்பத்தில் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதால் சஜித் அணியினர் எதிர்ப்பை வெளியிட்டனர்.

கட்சித் தலைமைத்துவத்தை சஜித்துக்கு வழங்குவது தொடர்பில் இரகசிய வாக்கெடுப்பை நடத்துமாறும் வலியுறுத்தினர். வாக்கெடுப்பை நடத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்கவும் அவரின் சகாக்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இறுதியில் சஜித் ஆதரவு அணியினரால் வாய்மொழிமூலம் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 52 பேர் ஆதரவு தெரிவித்தனர். கடும் அமளி ஏற்பட்டதால் ரணில் வெளியேறினார். இதனால் தீர்மானம் எதுவுமின்றி கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

சஜித்தை தலைவராக்கும்வரையில் சிறிகொத்தவில் தங்கியிருப்பதற்கு ஹரின் பெர்னாண்டோ உள்ளிட்ட சில எம்.பிக்கள் தீர்மானித்திருந்தாலும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமைவரை ரணில் விக்கிரமசிங்கவுக்கு கால அவகாசம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் திங்கட்கிழமை ரணில், கரு, சஜித் ஆகிய மூவரும் நேரில் சந்தித்து பேச்சு நடத்தி - தலைமைத்துவம் தொடர்பில் இறுதி முடிவை எடுப்பார்கள் என தெரிய வருகின்றது. (எ)

## வரி நிவாரணம் அளிக்காத நிறுவனங்களுக்கு ஆபத்து

கொழும்பு, ஜன.18

பொது மக்களுக்கு வரி நிவாரணம் வழங்காத நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்நாட்டு வருவாய்த் துறை தெரிவித்துள்ளது.

உள்நாட்டு வருவாய்த் துறையில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அதன் ஆணையாளர் நாயகம் ஜெனரல் அசோக நந்துன் குருஜே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு வழங்கிய வரி நிவாரணம் பெறாத மக்களின் முறைப்பாடுகள் தொடர்பாகச் சிறப்பு விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

ஒவ்வொரு துறையிலும் ஒரு முழுமையான கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஆனாலும் சில துறைகளுக்கு இந்த வரிச் சலுகை வழங்கப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தற்போது நாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது. இந்த மாதம் 20ஆம் திகதிக்குப் பின்னரே இந்த விடயங்களில் முழுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

அதன்பின்னரே அந்த நிறுவனங்கள், வாடிக்கையாளருக்கு வரி நிவாரணம் அளித்திருக்கிறார்களா என்பது தொடர்பாக அவதானிக்க முடியும். இந்த விடயம் தொடர்பாக அடுத்த சில நாள்களில் விவாதிக்கவும் நாங்கள் தயாராக உள்ளோம் - என்றார். (எ)

## கைதடியில் இன்று பொங்கல் விழாவும் காத்தவராயன் கூத்தும்

யாழ்ப்பாணம், ஜன. 18

கைதடி கிழக்கு சனசமூக நிலைய இந்து வாலிபர் சங்கம் நடத்தும் தைப்பொங்கல் விழா நிலைய விசேட அரங்கில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

கைதடி கிழக்கு வீரமாகாளி அம்மன் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ முத்துக்குமார கணேசக் குருக்கள் முன்னிலையில் இந்து வாலிபர் சங்கத் தலைவர் மு.பத்மரூபன் தலைமையில் இது நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்துகொள்வார்.

முன்பள்ளி மாணவர் கௌரவிப்பு உட்பட பல்வேறு நிகழ்வுகளுடன் இரவு 8 மணிக்கு 'மாலைக்காக வாதாடிய முத்துமாரி மைந்தன் காத்தவராயன்' சிந்து நடைக்கூத்து நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## கௌரவிப்பு

மாவிட்டபுரம்,ஜன.18

யாழ்ப்பாணம் விது நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர் மற்றும் சமூகசேவையாளர்கள் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். இந்த நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவிட்டபுரம் பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)


**UNIVERSITY OF JAFFNA**
**FACULTY OF TECHNOLOGY**
**WALK - IN - INTERVIEW**

Walk in Interview for appointments to the following posts will be held on 29/01/2020at 9.30 a.m.at the Board Room of Faculty of Agriculture,Ariviyalnagar, Kilinochchi

Temporary Assistant Lecturer and Temporary Demonstrator in Engineering Technology
Temporary Demonstrator in BioSystems Technology and Inter Disciplinary Studies

**Qualification:**

1. A degree with Specialization in the relevant subject with First or Second Class (Upper Division) Honours;
OR
2. A degree with Specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;
OR
3. A degree with Specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honors and (b) a recognized postgraduates degree in the relevant subject.

Note I: Special Consideration will be given in Engineering Technology to those who have degrees in Technology or Engineering in one or more of the following fields;
- Building Construction / Civil Engineering
- Automobile Technology / Mechanical Engineering
- Electro Technology / Electrical & Electronic Engineering(priority will be given to candidates with expertise on Electronics & Tele communication)

Note II: Special Consideration will be given in Bio systems Technology to those who have degrees Specialized in one or more of the following fields;
- Food Production Technology
- Commercial Green farming Technology

Note III: Special Consideration will be given in Inter Disciplinary Studies to those who have studied Mathematics/ Physics related field in under graduate studies;

Note – Candidates who are awaiting the results of the final degree examinations may also present for the positions of Temporary Demonstrator.

SALARY SCALE: Temporary Assistant Lecturer-Rs.49,860/p.m
(Fixed Temporary Demonstrator- Rs. 40,920/-p.m (Fixed)

Candidates are requested to appear with relevant certificates, NIC and Self - prepared applications.

Registrar
University of Jaffna.



**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை**
**கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான**
**மீள் கேள்வி அறிவித்தல்-2020**

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் அதிகாரத்திற்குட்பட்ட கீழ்க்காணும் கடைகளை 01.02.2020 முதல் 31.12.2020 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 20.01.2020 முதல் 31.01.2020 ந.ப 12.00 மணி வரையான அலுவலக நேரம்.**

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :- 31.01.2020 நண்பகல் 12.00 மணி வரை**

**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 31.01.2020 நண்பகல் 12.00 மணி.**

**இயக்கச்சி சந்தை வளாக கடைகள்**

| இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விவைப்புபணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | VS - 04 | 15,000.00 | 3,000.00 | 2000.00 |
| 02 | PS -04 | 30,000.00 | 3,000.00 | 2000.00 |
| 03 | PS -07 | 24,000.00 | 3,000.00 | 2000.00 |
| 04 | PS -08 | 21,000.00 | 3,000.00 | 2000.00 |
| 05 | PS -09 | 21,000.00 | 3,000.00 | 2000.00 |
| 06 | PS -10 | 21,000.00 | 3,000.00 | 2000.00 |
| 07 | PS -11 | 19,200.00 | 3,000.00 | 2000.00 |
| 08 | PS -12 | 19,200.00 | 3,000.00 | 2000.00 |
| 09 | PS -13 | 19,200.00 | 3,000.00 | 2000.00 |
| 10 | PS -14 | 19,200.00 | 3,000.00 | 2000.00 |

**நியந்தனைகள்**

01. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை / செல்லுபடியான / கடவுச்சிட்டு / செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமுகமளித்தல் வேண்டும்.
02. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"செயலாளர் பச்சிலைப் பள்ளி பிரதேசசபை பளை"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 31.01.2020 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்பட மாட்டாது.
04. கேள்வி நியந்தனை அறிவுறுத்தலுக்கமையாத கேள்விக் கோரிக்கையை நிராகரிக்கவும் எந்த ஒரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரமுண்டு.
05. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்
06. கேள்விப்பத்திரங்களை கீழ்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணமும் செலுத்தி பிரதேச சபையின் தலைமைக்காரியாலயத்தில் மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கௌ்ளல் வேண்டும்.
07. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் 1/3 ஒரு பகுதியை முழுமையாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.
08. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கெள்ளலாம்.

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை – பளை.** **18.01.2020**

## மாட்டுப்பொங்கல் நிகழ்வு



வவுனியா ஜன.18

வவுனியா குட்செட் வீதியில் அமைந்துள்ள கருமாரி அம்மன் கோவிலில் தமிழ்விருட்சம், சர்வதேசஇந்து இளைஞர்பேரவை மற்றும் ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் மாட்டுப்பொங்கல் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இதன்போது ஆலயத்தில் விசேடபூசை வழிபாடுகள் இடம்பெற்றதுடன், பசுமாடு அலங்கரிக்கப்பட்டு அதற்கு உணவுகள் வழங்கப்பட்டிருந்தன.

நிகழ்வில் வன்னிமாவட்ட பிரதிபொலிஸ்மா அதிபர் தம்மிக பிரியந்த, தமிழ்மணி அகளங்கன், அந்தணர் ஒன்றியத்தினர் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். இதேவேளை வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் மாட்டுப்பொங்கல் நிகழ்வுகள் சிறப்பாக கொண்டாடப்பட்டன. (ந-110)

## பொங்கலுடன் கால்கோள் விழா



ஏழாலை, ஜன.18


ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா மற்றும் கால்கோள் விழா நேற்று முன்தினம் பாடசாலையில் நடைபெற்றன.

அதிபர் செ.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக சமூக ஆர்வலர் சி.சிவகாந்தன், வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் அபராசுதன் மற்றும் வலிகாமம் வலய கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த ஆசிரிய ஆலோசகர் சிவகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சமூக ஆர்வலர் சிவகாந்தனால் மாணவர்கள் அனைவருக்கும் புத்தகப் பைகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (ந)





சிறகுகள் அமைப்பின் 'நூலகம்' நிறுவனத்தின் பொங்கல் நிகழ்வு கடந்த புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் ஆடிய பாதம் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெற்றது. (ஐ-222)

## பாரம்பரிய விளையாட்டுக்கள்!!





வவுனியா, ஜன.18

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு பெண்களுக்கான பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் வவுனியா பூந்தோட்டம் பெரியார்குளத்தில் இடம்பெற்றன.

புலம்பெயர்ந்து வசிக்கும் கந்தப்பிள்ளை திலீபனின் நிதி உதவியில், வவ்னியா நகரசபை முன்னாள் உறுப்பினர் பா.பிரசன்னாவின் ஒழுங்கமைப்பில் போட்டிநிகழ்வுகள் இடம்பெற்றன.

கிடுகுபின்னல், கோலம் போடுதல், சங்கீதக்கதிரை, கயிறுழுத்தல், தோரணம் கட்டுதல் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்களும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ-110)

## கால்கோள் விழா



கொடிகாமம், ஜன.18

யாழ்ப்பாணம் குடமியன் அ.த.க பாடசாலையின் கால்கோள் விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ம.லினாஷ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் வ.கனகரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக விக்னேஸ்வரா முன்பள்ளி ஆசிரியைகளான திருமதி கி.சுஜிகரன், திருமதி பா.தாஸ்மோகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தரம் ஒன்று மாணவர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். (ஐ-159)

## பொங்கல் விழா



யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் தைப்பொங்கல் விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 9மணியளவில் செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலர் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

உத்தியோகத்தர்களின் பேச்சு, பாடல், கவிதை போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து சூரிய வழிபாடு இடம்பெற்று அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது. (ஐ-222)



இலங்கை ஐக்கிய நாடுகள் நட்புறவு அமைய்த்தின் நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளுக்கான சாவகச்சேரி பிரதேச இளைஞர் சபையின் பொங்கல் நிகழ்வு கைதடி தெற்கு மின்னொளி இளைஞர் கழக மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ஐ-159)



நல்லூர் பிரதேச சபையின் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சபை வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. (ஐ)



முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் பொங்கல் விழா நேற்று வெள்ளிக்கிழமை செயலக வளாகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. (ஐ-222)

## மன். மாவட்டச் செயலகத்தில் களைகட்டிய பொங்கல் விழா

### விவசாயிகளுக்கும் மதிப்பளிப்பு





மன்னார், ஜன.18

மன்னார் மாவட்டச் செயலகத்தின் பொங்கல் விழா நேற்றுக் காலை சிறப்பாக இடம்பெற்றது. மன்னார் மாவட்டத்தில் உற்பத்தியான அரிசியில் பொங்கியதால் பொங்கல் களைகட்டியது.

மாவட்டச் செயலாளர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் பொங்கல் விழா நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகப் பிரிவில் இருந்தும் வலுவிழந்தும் நலிவுற்ற விவசாயிகளும் நஞ்சற்ற விவசாய உற்பத்திகளை செய்யும் விவசாயிகளுமாக 12 பேர் இந்த விழாவில் மதிப்பளிக்கப்பட்டனர்.

கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் பங்கு கொண்ட சிறப்புப் பட்டிமன்றமும் இடம்பெற்றது.

பொங்கல் நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மாவட்டச் செயலர்.

" உழவர் தினம் என்பது நமது கலாசாரப் பண்பாடுகளின் தொடர்ச்சியான விழுமியங்கள். இவ்வளவு காலமும் பொங்கல் நிகழ்வு கடைகளில் வாங்கப்பட்ட பழைய அரிசியில் பொங்கி நிகழ்வுகள் கொண்டாடப்பட்டன ஆனால் இந்த முறை மன்னாரில் விளைவித்து அறுவடை செய்த புது அரிசியில் பொங்கல் பொங்கப்பட்டது. அது ஒரு சிறப்பு அம்சமாகும் அந்த வகையில் காலநிலையும் நம் அனைவருக்கும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

மன்னார் மாவட்டம் விவசாயப் பயிர்ச் செய்கை வளர்ச்சியில் மிகவும் சிறப்பான மாவட்டமாக இருக்கிறது. போர்க்காலங்களிலும், இதர பிரச்சினைகளாலும் இந்த மாவட்டம் நெற்செய்கையில் பின்னடைவை கண்டபோதிலும் தற்பொழுது மீண்டும் புத்துயிர் பெற்று வந்து கொண்டிருக்கிறது.

அதற்குக் காரணம் இப்போதுள்ள விவசாய வளங்களும் நாங்கள் கொடுக்கின்ற உதவிகளும் அவர்களுக்கு உறுதுணையாக உள்ளன. எனவே இன்று உழவர் தினம் கொண்டாடும் நோக்கம் இந்த மக்களை ஊக்குவிக்கவேண்டும், அதற்காக நாங்கள் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இருந்து இரண்டு விவசாயிகள் வீதம் பன்னிரண்டு விவசாயிகளை மதிப்பளித்துள்ளோம். இந்த நிகழ்வின் ஊடாகவேனும் மன்னார் மாவட்டத்தின் விவசாய உற்பத்தி பெருகி விவசாயத்தில் மன்னார் மாவட்டம் தன்னிறைவு காணவேண்டும் என்ற நோக்கத்தில் நாங்கள் செயற்பட்டு வருகின்றோம்" என்றார்.

இந்தப் பொங்கல் நிகழ்வில் மன்னார் மாவட்ட மேலதிகச் செயலாளர் சி.குணபாலன், மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ அதிகாரி நடராசா திலீபன், மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜெ.ஜெனிற்றன், மன்னார் மாவட்ட பிரதம கணக்காளர் ப.செல்வக்குமார் மற்றும் மாவட்டச்செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ஜ-213,56)

# 4 லட்சம் பேருக்கு 2019இல் சிகிச்சை

*யாழ்ப்பாணம், ஜன.18*

யாழ். போதனா மருத்துவமனையில் கடந்த 2019 ஆம் ஆண்டில் மட்டும் மூன்று லட்சத்து 91 ஆயிரத்து 849 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் மருத்துவமனை விடுதிகளில் தங்கி ஒரு லட்சத்து 34 ஆயிரத்து 258 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். அதனைவிட வெளி நோயாளர் பிரிவில் மட்டும் இரண்டு லட்சத்து 57 ஆயிரத்து 591 பேர் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர் என்று மருத்துவமனைப் புள்ளி விவரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

விடுதிகளில் சகல நோய்த் தாக்கங்களுக்கும் இலக்கானவர்கள் தங்கிச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவில் கூடுதலாக காய்ச்சல்,தடிமல், சளி,இருமல், தலையிடி போன்ற நோய்த் தாக்கங்களுக்கு இலக்கானவர்கள் அதிகமாகச் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

டெங்கால் பாதிக்கப்பட்ட அநேகமானவர்கள் மருத்துவமனை விடுதியில் தங்கி சிகிச்சை பெற்றுள்ளனர் என்று புள்ளிவிவரத் தகவலில் குறிப்பி டப்பட்டுள்ளது. (க-17)

## வருடாந்த ஒன்றுகூடல்

சாவகச்சேரி, ஜன.18

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை ஊழியர் நலன்புரிச் சங்க வருடாந்த ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு மருத்துவமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவர் திருமதி டயாளினி மகேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் இ.தேவநேசன் கலந்து கொள்வார். (ஐ-9)

# முகாமையாளரின் காருக்குத் 'தீ'

## விசமிகள் கைவரிசை

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் வீடு ஒன்றுக்குள் புகுந்த விசமிகள், அங்கு நிறுத்தி வைத்திருந்த காருக்கு தீ மூட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதனால் கார் பகுதியளவில் சேதமாகியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 11.30 அளவில் இடம்பெற்றுள்ளது. சமுர்த்தி வங்கி முகாமையாளர் வரதராஜா கேதீஸ்வர சர்மாவின் வீட்டுக் காணிக்குள் நுழைந்து இந்த விசமத்தனமான செயலில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.



சம்பவத்தை உணர்ந்த வீட்டாரும் அயலவர்களும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

கோப்பாய் பொலிஸார் விசாரணை நடத்தினர். (து-20,21)

# பொங்கல் விழா

திருகோணமலை, ஜன.18

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக்கிளையின் பொங்கல் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பொங்கல் விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான க. துரைரெட்ணசிங்கம், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி. துரைராசசிங்கம், யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-40)




யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய தைப்பொங்கல் விழா, நேற்றுக்காலை சங்கத் தலைமையகத்தில் தலைவர் என்.எஸ் சத்தியதாசன் தலைமையில் நடைபெற்றது. (க-17)





வவுனியா தவசிக்குளம் ஓஹான் நிறுவனத்தில் மன வளர்ச்சி குன்றிய சிறார்களின் புதுவாழ்வுப் பூங்கா சிறப்புப் பாடசாலையில் பொங்கல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ஐ-222)

# 2020 புத்தாண்டு பொதுப் பலன்கள்



## சாதகங்களும் 'கவனத்துக்கு' உரியவையும்!

கணிப்பவர்
கே.பி.வித்யாதரன்






## கன்னி

உத்திரம் 2,3,4ஆம் பாதம், அஸ்தம், சித்திரை 1,2ஆம் பாதம்

மனசாட்சிக்கு மதிப்பளித்து நடப்பவர் நீங்கள். உங்களின் ராசிக்கு 6ஆவது ராசியான கும்பத்தில் இந்த ஆண்டு பிறப்பதால் எதிரிகளை வீழ்த்தும் வலிமை உண்டாகும். சேமிக்கும் அளவுக்கு வருவாய் அதிகரிக்கும். அடிப்படை வசதிகள் பெருகும். கணவன் - மனைவிக்குள் பாசம் அதிகரிக்கும். திடீர்ப் பயணங்களும் செலவுகளும் அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். நண்பர்களின் ஒத்துழைப்பும் உண்டு.

கன்னி ராசிக்காரர்களுக்குத் தொழில் துறையில் மாற்றத்தையும் ஏற்றத்தையும் தரக்கூடிய ஆண்டாக 2020 ஆம் ஆண்டு பிறக்கிறது.

பதவி உயர்வை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு அந்தப் பதவி உயர்வு இப்போது கிடைக்கப்போகிறது. இப்போதிருக்கும் வேலையில் இருக்கலாமா, இன்னொரு வேலைக்கு மாறலாமா என்று எண்ணிக் கொண்டிருந்தவர்களுக்கு, மாற்றம் தரக்கூடிய புதிய வேலை கிடைக்கும். உங்களுக்கான வாய்ப்புகள் வெளியில் மிகவும் அதிகம். அநேகமாக மார்ச் மாதத்தில் உங்களின் இந்த எண்ணம் நடந்தேறும்.

கன்னி ராசிக்காரர்களுக்கு குரு பகவான் மூன்றாம் இடத்திலிருந்து இத்தனை நாள்களாகப் பார்த்து வந்தார். அவர் கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெயர்ச்சியாகி நான்காமிடத்துக்கு வந்து சேர்ந்தார்.

26.12.20 வரை 4ஆம் வீட்டில் சனி பகவான் தொடர்வதால், தாயார் உடல்நலனில் கவனம் தேவை. தாய்வழி உறவினர்களால் அலைச்சல் உண்டாகும்.

வருமானம் அதிகரிக்கும். புத்தாண்டின் தொடக்கம் முதல் 12.11.20 வரை உங்களின் சுக ஸ்தனாதிபதியும் சப்தமாதிபதியான குரு பகவான் உங்களின் ராசிக்கு 4ம் வீட்டில் அமர்ந்திருப்பதால், இனம்புரியாத கவலைகள் வந்து போகும்.

வர வேண்டிய பணத்தைப் போராடி வசூலிப்பீர்கள். புதியவர்களை நம்பி பழைய நண்பர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். அரசு வகைக் காரியங்களை உடனுக்குடன் முடித்து விடுங்கள். அடுத்தவர் விவகாரங்களில் தலையிட வேண்டாம்.

நவம்பர் 13 முதல் குரு பகவான் உங்களின் ராசிக்கு 5ஆம் வீட்டில் நுழைவதால், பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்று சேருவார்கள். திடீர்ப் பணவரவு உண்டு. சிலருக்குக் குழந்தைபாக்கியம் கிடைக்கும். மகளுக்குத் திருமணம் கைகூடிவரும். சிலர், சொந்த வீட்டுக்குக் குடிபுகுவார்கள். வருடம் பிறக்கும்போது, கேது 4ஆம் வீட்டில் நிற்பதால், தாய்மாமன் வகையில் கருத்து வேறுபாடுகள் வரலாம். ராகு 10ஆம் வீட்டில் தொடர்வதால், ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும்.

செப்ரெம்பர் மாதம் முதல் உங்களின் ராசிக்கு 3ஆம் வீட்டில் கேதுவும் 9ஆம் வீட்டில் ராகுவும் நுழைவதால் வழக்கு விரைந்து முடியும். வட்டிக் கடனைத் தந்து முடிப்பீர்கள். வெளிநாட்டில் இருப்பவர்களால் உதவியுண்டு. 9.1.2020 முதல் 2.2.2020 வரை உள்ள காலகட்டத்தில் சுக்கிரன் 6ஆம் வீட்டில் மறைவதால் குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அனுசரித்துப் போவது நல்லது.

**இந்த ஆண்டின் முற்பகுதி செலவுகளை தந்தாலும் பிற்பகுதி கையிருப்பைக் கூட்டும்**



16.08.2020 முதல் 26.10.2020 வரையும் 13.12.2020 முதல் டிசெம்பர் 31ஆம் திகதி வரையிலும் உங்களின் ராசிக்கு 8ஆம் வீட்டில் செவ்வாய் அமர்வதால் பணப் பற்றாக்குறை ஏற்படும். முன்னெச்சரிக்கையாக சேமிக்கப் பழகுங்கள். பயணங்களின்போது கவனம் தேவை.

வியாபாரிகளே! பெரிய முதலீடுகளைச் செய்யும்போது கவனம் தேவை. வாடிக்கையாளர்களின் தேவையறிந்து கொள்முதல் செய்யுங்கள். வானொலி விளம்பரம், தொலைக்காட்சி விளம்பரங்களால் வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். விவசாயிகள், பக்கத்து நிலத்துக்காரரை அனுசரித்துச் செல்வது நலம். கடனுதவி கிடைக்கும். நெல், கரும்பு சாகுபடியால் நல்ல லாபம் உண்டு.

உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். அதேநேரம் பதவி மற்றும் ஊதிய உயர்வு உண்டு. கணினித் துறையினர், தற்போது பணிபுரியும் அலுவலகத்திலிருந்து தலைமை அலுவலகத்துக்கு மாற்றப்படுவார்கள். மாணவர்கள், எதிர்பார்த்தபடி நல்ல கோர்ஸில் சேருவார்கள். அயல்நாடு சென்று படிக்கும் வாய்ப்பும் தேடிவரும். கலைஞர்களுக்கு, வாய்ப்பு கிடைப்பதில் இழுபறி நிலை நீடிக்கும். மூத்த கலைஞர்களின் நட்பைப் பெறுவார்கள்.




## சோதனை களத்தில் நாம்...

இன்றைய உலகில் ஒவ்வொருவரும் எப்படியேனும் பொருளீட்ட வேண்டும், சொத்து சேர்க்க வேண்டும், நாளைய வாழ்வை சிறந்த முறையில் அமைத்துக்கொள்ள வேண்டும், நன்றாகச் செலவு செய்ய வேண்டும் என்று உலக வாழ்க்கையை மட்டுமே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

பொருளீட்டும் இந்தப் போராட்டத்தில் மறுமை வாழ்வை மறந்து வாழ்கின்றனர். எதற்காக இவ்வுலக வாழ்வு என அறியாமல் செயல்படுகிறார்கள்.

உலகில் மனிதர்கள் வாழ்ந்து கொண்டும், இறந்து கொண்டும் இருக்கின்ற இந்தத் தொடர் நிகழ்ச்சி இறைவனால் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதற்கான காரணம், அவர்களைச் சோதித்து யாருடைய செயல் இவ்வுலக வாழ்வுக்கும், மறுமை வாழ்வுக்கும் உகந்ததாக உள்ளது என்பதை அறிந்து கொள்வதற்குத்தான்.

சோதனைக்கு ஆளாகாத மனிதர் எவரும் கிடையாது. ஏதோ ஒரு வகையில் மனிதன் சோதிக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றான். நல்லவனாக இருந்தாலும் சோதிக்கப்படுவான், தீயவனாக இருந்தாலும் சோதிக்கப்படுவான். இது இறைவனின் நியதி. இந்த நியதியை எவராலும் மாற்ற முடியாது.

சோதனைகளை வென்று அவற்றை பொறுமையுடன் சகித்துக்கொண்டவர்கள் வரலாற்றில் நிலைத்து நிற்கின்றார்கள். மட்டுமல்ல, அவர்கள் அடுத்தவர்களுக்குப் பாடமாகவும் திகழ்கின்றார்கள். ஆயினும் சோதனைகளைத் தாங்கிக் கொள்ளாமல் அவசர கதியில் வாழ்வை முடித்துக்கொள்பவர்கள் மோசமான முன்னுதாரணமாக விளங்குகின்றார்கள்.

இந்த நிரந்தரமற்ற உலகில் நாளைய வாழ்வாதாரங்களை தேடும் விதத்தில் செல்வங்களின் பின்னால் விரைந்து கொண்டிருக்கிறோம். ஆகவேதான் இவ்வுலக மோகங்கள் அனைத்தும் இம்மை வாழ்வில் மட்டும் பயன்பட்டு நிரந்தரமான மறுமை வாழ்வில் கேள்விக்குறியாகி விடுகிறது.

இவ்வுலகம் நிரந்தரம் என எண்ணி செயல்படாமல் இவ்வுலகம் ஒரு சோதனைக் களம்; அதில் நாம் சோதிக்கப்படுகின்றோம் என எண்ணி சோதனைகளை வெல்ல வேண்டும்.

இவ்வுலகம் மறுமைக்கான ஒரு விளைநிலமே. இதில் நாம் எதை விதைக்கிறோமோ அதைத்தான் மறுமையில் அறுவடை செய்வோம். எனவே சோதனைகளின்போது பொறுமை காத்து நல்லவற்றை விதைத்து மறுமையில் நல்லவற்றையே அறுவடை செய்வோம்.

**மறுமை :**
இறப்புக்குப் பின் எடுக்கும் பிறவி
மறுபிறவி
அடுத்த ஜென்மம்

## வான்...

வித்துள்ளார்.

திருகோணமலை விமானப்படைத் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2009ஆம் ஆண்டு போர் வெற்றியைப் பெற்றுக்கொள்ள விமானப்படையின் பங்களிப்பு காத்திரமாக அமைந்திருந்தது. தோற்கடிக்க முடியாதென கூறப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பை முப்படையினரின் பங்களிப்புடன் தோற்கடித்தோம்.

வன்னியைக் கைப்பற்றும் நடவடிக்கையின் போது மிகப் பெரிய நிலப் பரப்பை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த புலிகள், இராணுவத்தினரின் நகர்வுக்குத் தடையை ஏற்படுத்தியிருந்தனர். வான்வழித் தாக்குதல்கள் மூலம் புலிகளை பின்வாங்கச் செய்து இராணுவத்தின் பயணத்துக்கான ஒத்துழைப்புகளை விமானப் படையே வழங்கியிருந்தது.

உலகளாவிய ரீதியில் தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராக போராடிய விமானப் படைகளில் அதிகமாக அனுவபத்தை கொண்டுள்ளது இலங்கை விமானப் படைதான். ஏனெனில் உலகில் எந்தவொரு தீவிரவாத அமைப்புக்கும் வான்வழித் தாக்குதல்களை நடத்தக்கூடிய வல்லமை இருக்கவில்லை.

ஈரான் மற்றும் ஈராக் நாட்டில் மிகப்பெரிய நிலப்பரப்பை கைப்பற்றி வைத்திருந்த ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புக்குக் கூட வான்வாழித் தாக்குதல்களை நடத்தக் கூடிய வலிமை இருக்கவில்லை. ஆனால் புலிகள் அமைப்புக்கு மாத்திரம் வான்புலிகள் என்ற விமானப்படை இருந்தது.

கொலன்னாவை எண்ணைக் குதம், கட்டுநாயக்க விமானப் படைத் தலைமையகம் என பல இடங்களில் வான்புலிகள் தாக்குதலை நடத்தினர். அவை ,மிகச் சிறியளவிலான சேதங்களை உண்டு பண்ணியதால் நாம் அவற்றைக் 'குரும்பட்டித்' தாக்குதல் என்றே கூறிவந்தோம். ஆனால் உண்மையில் அந்தத் தாக்குதல்கள் வெற்றியளித்திருந்தால் நாம் மிகப்பெரிய இழப்புகளைச் சந்தித்திருப்போம். புலிகளின் இவ்வாறான தாக்குதல்களை முழு உலகமே உற்றுநோக்கியது. சிறிய விமானங்களின் இயந்திரம் வெளிவிடும் வெப்பத்தை வைத்துக் கூட அவற்றை எமது நவீன கண்காணிப்புச் சாதனங்களோ, தன்னியக்க விமான எதிர்ப்பு ஏவுகணைகளோ கண்டறிய முடியாத வகையில் வடிவமைத்திருந்தனர். " -என்றார். (அ-ஒ-5,24)

## சம்பந்தன்...

சர் விமல் வீரவன்ச.

வடக்கு மாகாணத்துக்கு நேற்று வருகை தந்த அமைச்சர் விமல் வீரவன்ச, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையைச் சென்று பார்வையிட்டார். ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மூன்று மாதங்களுக்குள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

பின்னர் யாழ்ப்பாணத்துக்கு வந்த அமைச்சர் கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிலையம், அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை ஆகியவற்றைப் பார்வையிட்டார்.

இதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர், தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவதாக ஆட்சிப்பீடம் ஏறிய முன்னைய அரசு சம்பந்தனுக்கு அவர் வசிப்பதற்கான வீட்டையே பெற்றுக்கொடுத்தது. தமிழ் மக்களுக்கு இது வரை ஒன்றும் செய்துகொடுக்கப்படவில்லை.

நான் நாடாளுமன்றம் சென்று 20 வருடங்கள் ஆகின்றது. சம்பந்தன் அன்று கூறியதையே இன்றும் கூறுகின்றார். ஆனால் விக்கினேஸ்வரன் நீதியரசராக இருக்கும்போது ஒரு மாதிரியாகவும் முதலமைச்சரான பின்னர் இன்னொரு மாதிரியாகவும் இருக்கிறார். அவர் இனவாதத்தைத் தூண்டுவதைத் தவிரவேறொன்றும்செய்யவில்லை-என்றார். (ஒ,5,20,246)

## மீண்டும்...

பொங்குதமிழ் பிரகடன 19 ஆம் ஆண்டு நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் நேற்று நடைபெற்றது. பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தால் 2001 ஆம் ஆண்டு பொங்கு தமிழ் நடத்தப்பட்டது. தமிழ் மக்களின் அபிலாசைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டுமென பிரகடனம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அது நிறைவேற்றப்பட்டதன் 19ஆவது ஆண்டு நிகழ்வில் மாணவர் சமூகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஈழத் தமிழ் மக்களின் சுதந்திர தாயகத்துக்கான அடிப்படை அபிலாசைகளையும் நியாயங்களையும், சர்வதேசத்துக்கு ஒரே குரலில் தமிழ் மக்கள் வெளிப்படுத்திய தளமாகவும், இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த தமிழரின் மரபுவழித் தாயகமும், அதனால் சிதைக்கப்பட்டிருக்கும் தன்னாட்சி உரிமையையும் வேண்டி நின்ற தமிழ்மக்கள், தமிழ் தேசியத்தின் பால், தாம் கொண்டுள்ள ஆழமான விடுதலை உணர்வை வெளிக்கொணர்வதற்கும், வலியுறுத்துவதற்குமாக 2001 ஆம் ஆண்டு ஜனவரி 17 இல் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால், மிகக் கொடூரமான இராணுவ அடக்குமுறைக்கு மத்தியிலும் யாழ். குடாநாட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி யாழ். பல்கலைக்கழகத்தில் மக்கள் பேரெழுச்சியாக திரண்ட நிகழ்வே 'பொங்கு தமிழ்'.

இதனைத் தொடர்ந்து ஈழத்தின் அனைத்து மாவட்டங்களிலும், புகலிட தேசங்களிலும் பொங்கு தமிழாய் எம் மக்கள் விடுதலைக்காய் பேரெழுச்சி கொண்டனர். அப்போது யாழ். மண்ணில் இராணுவத்தினரின் அடக்குமுறைகளையும், கொலை அச்சுறுத்தல்களையும், வீதிமறிப்புக்களையும், கெடுபிடியான சோதனை நடவடிக்கைகளையும் தாண்டி குடியிருப்புக்களின் மதில்களால் பாய்ந்தும், குறுக்கு பாதைகளினாலும், இளைஞர்கள் முதியவர்கள், மதகுருமார், பெண்கள், மாணவிகள் என்ற பாகுபாடின்றி, சாரைசாரையாக திரண்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களுடன் பேரெழுச்சி கொண்டு பொங்கிப் பிரவாகித்து நின்றது 'பொங்குதமிழ் 2001'.

அரசின் கொடுமைகளுக்கு எதிராகவும் தமிழ்தேசத்தின் திட்டமிட்ட அழிப்புக்கு எதிராகவும் அவற்றைத் தகர்த்தெறிந்து எழுச்சி கொண்டு தமிழ் மக்கள் தமது உரிமைக் குரலை உயர்த்தி வெளிப்படுத்திய எழுச்சிமிக்க பிரகடனமே 'பொங்கு தமிழ்'. இந்நிகழ்வு நடைபெற்று இன்றுடன் 19 ஆண்டுகள் நிறைவடைகின்றன. எனினும் எம்மினம் இன்னமும் சிங்கள-பௌத்த பேரினவாத அடக்குமுறைக்குள் சிக்குண்டு எமது தேசத்தின் தாங்குதூண்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவ் அழிப்பு தொடர்வதனை நாம் அனுமதிக்க முடியாது.

இந்நாளில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் எமது பல்கலைக்கழகம் கடந்தகாலத்தில் மேற்கொண்ட வரலாற்றுக் கடமையை ஜனநாயக வழியில் தொடர்ந்து முன்னெடுப்போம் எனக் உறுதியெடுக்கின்றோம். இப்புனித நாளில் அரசால் கடந்த ஆட்சியில் தாயாரிக்கப்பட்டு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய ஒற்றையாட்சிக்கான இடைக்கால அறிக்கையை நிராகரித்து எமது தேசத்தின் இருப்பை பாதுகாக்க பின்வரும் தீர்மானங்களை வலியுறுத்துகின்றோம்.

வடக்கு கிழக்கு இணைந்த தமிழரின் தாயகம் அங்கீகரிக்கப்படல் வேண்டும். தமிழரின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும். தமிழ்த் தேசமும் அதன் தனித்துவமான இறைமையும் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். மேற்படி கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படல் வேண்டுமென வலியுறுத்தி இவ்வாண்டு இறுதிக்குள் மாபெரும் மக்கள் எழுச்சி நிகழ்வை இப்பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கவுள்ளோம், என்றுள்ளது. (ஒ,5,20)

## சஜித்தோடு...

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்ற முக்கிய கூட்டம் நேற்று மாலை நாடாளுமன்றக்கட்டத் தொகுதியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் சஜித் பிரேமதாஸ, ரஞ்சித் மத்துவ பண்டார, கபீர் ஹாசீம், மலிக் சமரவிக்கிரம, சரத் பொன்சேக்கா ஆகியோரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் மனோ கணேசன், பழனி திகாம்பரம் ஆகியோரும் கலந்துகொண்டனர். ஜாதிக ஹெல உறுமயவை பிரதிநிதித்து வப்படுத்தி சம்பிக்க ரணவக்கவும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் ரவூப் ஹக்கீமும், ஏனைய கட்சிகளின் சார்பில் ராஜித சேனாரத்னவும் பங்கேற்றனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் சிறிகொத் தவில் நேற்றுமுன் தினம் இரவு நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் பற்றி பங்காளிகளுக்கு ரஞ்சித் மத்தும பண்டார தெளிவுபடுத்தியதுடன், தலைமைப் பதவியிலிருந்து விலகமறுக் கும் ரணில் மீதும் கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் சஜித் பிரேமதாஸ பக்கமே நிற்பதாகவும், எனினும், கட்சியாப்பை பயன்படுத்தி குறுக்குவழி செயற்பாட்டில் ரணில் தரப்பு இறங்கக்கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து பங்காளிக்கட்சி தலைவர்கள் கருத்து வெளியிட்டனர். ரணிலின் தலைமைத்துவத்தை கிராம மட்ட மக்கள் விரும்பவில்லை என்றும், பொதுத் தேர்தலில் வாக்கு வங்கியை தக்கவைத்துக் கொள்ளவேண்டுமெனில் சஜித்தின் தலைமைத்துவம் அவசியம் எனவும் வாதிட்டனர்.

இறுதியில் அடுத்த பொதுத்தேர்தலை சஜித் தலைமையில் எதிர்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. கூட்டணியின் பெயர் குறித்தோ, சின்னம் பற்றியோ, பதவி பங்கீடுகள் சம்பந்தமாகவோ எவ்வித முடிவும் எட்டப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மனம்மாறி கூட்டணியில் இணைந்தால் அவரையும் இணைத்து பயணிப்பதென்றும், கருஜய சூரிய போன்ற சிங்கள, பௌத்த மக்களின் நம்பிக்கையை வென்ற தலைவர்களுக்கு சஜித் தலைமையிலான கூட்டணியில் முக்கிய இடத்தை வழங்குவதற்கும் கூட்டணியில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி சபாநாயகர் கருஜயசூரியவை சஜித் பிரேமதாச இன்று சந்தித்து கலந்துரையாடவுள்ளார். அத்துடன், மனோ கணேசன் நேற்று கருவை சந்தித்து நிலைமை குறித்து எடுத்துரைத்துள்ளார்.

அதேவேளை, ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருக்கு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது. ராஜித சேனாரத்னவால் பொதுச்செயலர் அகில விராஜ் காரியவசத்துக்கு கடிதம் அனுப்பபடும் என எதிர்பார்க்கப்படுகின்றது:

சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ராஜித சேனாரத்ன, சஜித்தின் தலைமைத்துவத்தின்கீழ் புதிய ஜனநாயக முன்னணியில் போட்டியிடுவோம்' என குறிப்பிட்டார். (ஒ,5,44,22)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1110
சீட்டிழுப்பு திகதி 2020.01.16 வியாழக்கிழமை
M 07 12 29 48
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 91,090,452/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 17.01.2020 | வெற்றி வாரம் 2741 | வர்ணம் கருநீலம்
கன்னி
வெற்றி இலக்கங்கள் 05 30 52 57
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000/=
18.01.2020 ம் திகதி சனிக் கிழமை இளம் நீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 855
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.01.17
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 58,449,205/-
வெற்றி இலக்கங்கள் 29 31 39 51
ஆங்கில எழுத்து C
அபிவிருத்தி லொத்தர் சபை

சංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 315
சீட்டிழுப்பு திகதி 17.01.2020 சிவப்பு
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 11 49 69
விதி எண் 08
எதிர்வரும் சுப்பர் பரிசப்பொதி ரூ. 50, 242, 472/=
22.01.2020 ம் திகதி புதன் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk



## இன்றைய நாள்

**மேடம்:** முன்னர் செய்த உதவிக்கு நற்பலன் தேடி வரும். உறவினர்கள் பெருமைப்படுத்துவர். பணப்பரி வர்த்தனையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு எதிர்ப்பு விலகும்.

**இடபம்:** நிதானித்து செயல்படுவதால் நற்பலன் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராகும். குறைந்த அளவில் பணவரவு கிடைக்கும். பணி யாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**மிதுனம்:** மனதில் பதற்றம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை நல்வழி தரும். தொழில், வியாபாரத்தில் அளவான மூல தனம் போதும். அதிக உழைப் பால் பணவரவு சீராகும்.

**கடகம்:** நண்பருக்கு உதவுவீர்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை கிடைக் கும். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். குடும்பத்தின் முக்கிய தேவை நிறைவேறும். வழக்குகளில் அனுகூலத் தீர்வு கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் குழப்பம் ஏற்படலாம். பிறருக்காக எவ்வித பொறுப்பும் ஏற்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சிரமங்களை திறமையுடன் சரிசெய்வீர்கள். சுமாரான பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** மனதில் மகிழ்ச்சி நிறைந் திருக்கும். எல்லோரிடமும் சாந்த குணத்துடன் பேசுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து வள ரும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** பொழுது போக்காக பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியா பாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். திருப்திகரமான அளவில் பணவரவு கிடைக்கும். வீட்டு உபயோகப்பொருள் வாங்குவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர், உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி எளிதாக நிறைவேறும். ஆதாய பணவரவு கிடைக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**தனுசு:** இனிய அணுகுமுறை நற்பலன் தரும். உறவினர், விரும்பி சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழித்து வளரும். நிலுவைப்பணம் வசூலாகும்.

**மகரம்:** செயல்களில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற கூடுதல் பணிபுரிவீர்கள். பணவரவு குறையலாம். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**கும்பம்:** பேச்சு, செயலில் நிதானம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் உள்ள சிரமங்களை பிறரிடம் விவாதிக்க வேண்டாம்.

**மீனம்:** அவமதித்து பேசியவர்கள் அன்பு பாராட்டுவர். மனதில் புத்துணர்வு பெறு வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.



# ஆஸியில் மழை தணிகின்றது தீ!

சிட்னி, ஜன. 18

ஆஸ்திரேலியாவின் கிழக்குப் பகுதியில் காடுகள் அடர்ந்த ஒரு கோடி ஹெக்டேர் பகுதியில் கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. இதில் 2 ஆயிரம் வீடுகள் எரிந்தன. 28 பேர் இறந் துள்ளனர். அரிய வகை விலங்கு க்ள் உட்பட இலட்சக்கணக்கான வனவிலங்குகள் இறந்துள்ளன.

3 மாதங்களுக்கு மேல் காட்டுத்தீ எரியும் இடங்களில் நியூ சவுத் வேல்ஸ் உள்ளிட்ட சில பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது.

இதனால், தீ ஓரளவு கட்டுக்குள் வந்துள்ளது. தீயை அணைக்க தொடர்ந்து போராடி வரும் தீய ணைப்பு வீரர்களுக்கு இந்த பலத்த மழையால் சற்று நிவாரணம் கிடைத் தாலும் வெள்ளம், நிலச்சரிவு ஆகி யவை ஏற்படும் வாய்ப்புகள் இருக்கின்றன என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

அதே நேரம் காட்டுத் தீயை முழு மையாக அணைக்க இந்த மழை போதாது என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம)



அமெரிக்கா - சீனாவுக்கு இடையில் நீண்டகாலமாக இடம்பெற்று வந்த வர்த்தகப்போருக்குத் தீர்வுகாணும் முகமாக ஓர் ஒப்பந்தம் கைச்சாத்தா கியுள்ளது. அமெரிக்க ஜனாதிபதிக்கும் சீனத் துணை ஜனாதிபதிக்கும் இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது. (ம)

# சுவிற்சர்லாந்து சிறப்பானது!



சூரிச், ஜன. 18

அனைத்துவிதத்திலும் மக்கள் வாழத் தகுதியான நாடுகள் என்ற தலைப்பில் பிரபல நிறுவனமொன்று உலக நாடுகளைப் பட்டியலிட்டுள்ளது. சுவிற்சர்லாந்து இதில் முதலிடத்தில் உள்ளது. கனடா, ஜப்பான், ஜேர்மனி, ஆஸ்திரேலியா, பிரிட்டன், அமெரிக்கா, சுவீடன், நெதர்லாந்து, நோர்வே ஆகியன இந்தப் பட்டியலில் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. (ம)

# ஈரானின் தாக்குதல்களில் காயமடைந்தது உண்மை


### அமெரிக்கா ஏற்பு

வொஷிங்டன், ஜன. 18

ஈராக்கில் அமெரிக்க ராணு வத் தளத்தில் கடந்த வாரம் ஈரான் நடத்திய தாக்குத லில் தங்கள் நாட்டு ராணுவ வீரர்கள் காயம் அடைந்த னர் என அமெரிக்கா ஒப் புக் கொண்டுள்ளது.

ஈராக்கில் உள்ள அல் அசாத் விமான தளத்தில் ஈரான் கடந்த வாரம் தாக்கு தல் நடத்தியது. இதில் அமெரிக்க வீரர்கள் உயிரி ழந்தனர் என்று ஈரான் கூறி யது. ஆனால் இந்தத் தாக் குதலில் யாரும் கொல்லப் படவில்லை என்றும் யாருக் கும் எந்த காயமும் ஏற்பட வில்லை என்றும் அமெ ரிக்கா கூறிவந்த நிலையில் தற்போது தமது சிப்பாய்க ளுக்குக் காயம் ஏற்பட்ட தாக அந்நாடு ஒப்புக் கொண்டுள்ளது. (ம)





# நான்கே மாதங்களில் 1,000 பேர் சாவு!

## சிரியப் பெரும் துயர் இது



டமஸ்கஸ், ஜன. 18

சிரியா உள்நாட்டுப் போரில் கடந்த 4 மாதங்களில் சுமார் ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

சிரியாவில் ஷியா பிரிவைச் சேர்ந்த அதிபர் பஷார் அல் ஆசாத்துக்கும் சன்னி பிரிவைச் சேர்ந்த கிளர்ச்சிப் படைகளுக்கும் கடந்த 2011ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அதிபர் ஆசாத்துக்கு ரஷ்யாவும் சன்னி பிரிவு கிளர்ச்சிப் படைகளுக்கு அமெரிக்கா, துருக்கி உள்ளிட்ட நாடுகளும் ஆதரவு அளித்து வருகின்றன.

சிரியாவின் வடமேற்கில் கிளர்ச்சிப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள இட்லிப் பகுதியில் அதிபர் ஆசாத் படைகள் நேற்று முன்தினம் வான் வழி தாக்குதலை நடத்தின. இதில் பல்வேறு நகரங்கள், கிராமங்கள் உருக்குலைந்தன. கிளர்ச்சிப் படையைச் சேர்ந்த 22 வீரர்கள் உட்பட 39 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். இதுகுறித்து 'வொயிட் ஹெல்மெட்' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவன நிர்வாகிகள் கூறியதாவது:

தலைநகர் டமாஸ்கஸ், அலெப்போ நகரை இணைக்கும் இட்லிப் பகுதி சாலைகள் கிளர்ச்சிப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்த சாலைகளை அரசு கட்டுப்பாட்டில் கொண்டு வர சாலையோர நகரங்கள், கிராமங்களை குறிவைத்து அதிபர் ஆசாத்தின் விமானப்படை குண்டுகளை வீசியது. இதில் பலர் உயிரிழந்தனர்.

ஏராளமானோர் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளமையால் உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும். கடந்த 4 மாதங்களில் மட்டும் அரசுப் படைகள் நடத்திய தாக்குதலில் 1,000 பேர் உயிரிழந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர் இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

ஐ.நா. சபை வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் கூறியிருப்பதாவது:

சிரியாவில் சுமார் 50 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்து இடம் பெயர்ந்துள்ளனர். சிறுவர்கள் போரில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். சிறுமிகள் பாலியல் அடிமைகளாக மாற்றப்படுகின்றனர். அரசு, கிளர்ச்சிப் படைகள் என இருதரப்பினரும் மனித உரிமைகளை மீறி வருகின்றனர் இவ்வாறு அந்த ஆய்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம)

---

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராசேந்திரம் புவன்ராஜ்**

மலர்வு 20.08.1968
உதிர்வு 09.02.2018

திதி: நவமி (18.01.2020)

எம் வாழ்வில் ஒளிவிளக்கேற்றிய
அன்புத் தெய்வமே!
எம் வாழ்வில் எத்தனை கோடி இன்பங்கள் இருந்தாலும்
அது அத்தனையும் உங்களுக்கு நிகராகுமா?
இரண்டு ஆண்டு சென்றாலும் நீங்காது உம் நினைவுகள்
என்றென்றும் எம் மனதில்....

கலைவாணி லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

---

### 4ஆம் ஆண்டு விண்ணக வாழ்வின் நினைவாக



**அமரர் கபிரியேல் ஜோஜ்**

மண்ணில் 01.09.1937
விண்ணில் 18.01.2016

"ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்
ஏனெனில் அவர் நல்லவர்
என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு"


எங்களை அன்புடனும் பண்புடனும் நல்வழி காட்டிய
அன்புத் தந்தையே நீங்கள் எங்களைவிட்டு
விண்ணுலகுபோய் நான்கு ஆண்டு சென்றாலும்
நாம் உள்ளளவும் உங்கள் நினைவில் நிலைத்திருப்போம்.

60, டேவிட் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 29.01.2019 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் கந்தசாமி ஸ்ரீகாந்தன்**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் இன்று (18.01.2020) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மலர்வு 18.03.1954
உதிர்வு 29.01.2019

குடும்பத்தினர்.
லக்சுமி பேக்கவுஸ்
077 218 9718

மானிப்பாய் வீதி,
நாலுகால் மடம்.

---

### மரண அறிவித்தல்

**வேலுப்பிள்ளை நாகராசா**



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகராசா நேற்று (17.01.2020) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மாணிக்கம் தம்பதிகளின் மகனும், சுப்பையா - சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரன் (சுவிஸ்), அபிராமி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஸ்குமார் (மாகாண சுகாதார சேவை பணிமனை, வட மாகாணம்), காஞ்சனா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், கோபிஷன், கோபிகா, ராகுல், வைசாலிகா, விசாலிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2020) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி,
இணுவில் சந்தி, இணுவில்.

(CS//30653) (11,17)

தகவல் :
குடும்பத்தினர்.





# பாடும்மீன் - சென்மேரிஸ் இறுதியில் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.18
யாழ். கால்பந்தாட் லீக்கின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்பட்ட கால் பந்தாட்டத் தொடரில் யாழ்.மாவட்டத்தில் முன்னணி கால் பந்தாட்ட அணிகள் மோதிய கால் பந்தாட்டத் தொடரில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி, நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி ஆகியவை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றனர்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மின் ஒளியில் இடம் பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒவ்வொரு கோலைப் பதிவு செய்ய ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு சம நிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம் பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணிமோதியது.

இதில் இரண்டு அணிகளும் ஆட்ட நேர முடிவில் தலா ஒவ்வொரு கோலைப் பதிவு செய்ய ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது.

இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இதனால் குருநகர் பாடும் மீன், நாவாந்துறை சென்.மேரிஸ் ஆகிய அணிகள் இறுதியில் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. (23)

# ஆசிகாவுக்கு மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.18
2019ஆம் ஆண்டு நேபாளத்தின் காத்மண்டுவில் நடைபெற்ற 13ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற வடக்கின் இரும்புப் பெண் என்று அழைக்கப்படுகின்ற யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி வி.ஆசிகாவுக்கு கல்லூரி சமூகத்தினரால் மதிப்பளிக்கப்பட்டார். இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கல்லூரி அதிபர் திருமதி துசிதரன் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவிகள் கலந்து கொண்டனர். (23)



# மதிப்பளிப்பு

வவுனியா, ஜன.18
பாகிஸ்தானில் நடைபெறவுள்ள குத்துச் சண்டைப் போட்டியில் பங்குபற்றவுள்ள இலங்கை குத்துச் சண்டை அணியில் இடம் பிடிந்துள்ள வவுனியா காமினி மகாவித்தியாலய மாணவன் சிறீகாந்தன் சிறிதர்சனுக்கு வவுனியா மாவட்ட சமூக சேவை



அலுவலகத்தில் மதிப்பளிக்கப்பட்டார்.
அத்துடன் நோர்வேயில் வாழ்ந்து வரும் புலம்பெயர் உறவான சண்முகம் ராஜமோகன், ஏ3 பவுண்டேசன் ஊடாக பாகிஸ்தான் செல்லும் குத்துச் சண்டை வீரர் சிறிகாந்தன் சிறிதர்சனுக்கு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் சிறிநிவாசன் ஊடாக நிதி உதவியை வழங்கினார். (ந-222)

# நடுவர்களுக்கான செயலமர்வு நாளை

யாழ்ப்பாணம்,ஜன.18
இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளத்தினால் நடத்தப்படவுள்ள வலைப் பந்தாட்ட நடுவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. இதற்கான செயலமர்வை யாழ். மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தர கல்லூரியில் நடத்தவுள்ளது. இந்தச் செயலமர்வில் நடுவர் பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்து(ஏ,பி,சி) தர நடுவர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

# வீதி ஓட்ட நிகழ்வு





யாழ்ப்பாணம்.ஜன.18
கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிக்கான வீதி ஓட்ட நிகழ்வு நேற்று கல்லூரி அதிபர் அரவிந்தன் தலைமையில் இடம் பெற்றது. இதில் ஆண்கள் பிரிவில் பிரவீணன் முதலாம் இடத்தையும், கே.சாருசன் இரண்டாமிடத்தையும், ஜி.றொஜன் மூன்றாமிடத்தையும், பெண்கள் பிரிவில் நா.சுஜாதா முதலாம் இடத்தையும், து.ரமணி இரண்டாமிடத்தையும், மதுசியா மூன்றாமிடத்தையும் பெற்றனர். (23-108)



# ஒருநாள் போட்டிக்கு திரும்பும் வில்லியர்ஸ்

தென்னாபிரிக்காஅணிக்கு மீண்டும் திரும்ப இருக்கும் நிலையில், ஒருநாள் கிரிக்கெட்டும் முடிந்து விடவில்லை என ஏபி டி வில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா அணியின் தலைசிறந்த பேட்ஸ்மேனாக திகழ்ந்தவர் ஏபி டி வில்லியர்ஸ். இவர் ஒருநாள் கிரிக்கெட்டில் பல சாதனைகள் படைத்தவர். கடந்த 2018ஆம் ஆண்டு திடீரென சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார். இவரது இந்த அறிவிப்பு தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபைக்கு மட்டுமல்ல, உலக கிரிக்கெட் ரசிகர்களுக்கும் அதிர்ச்சி அளித்தது.

2019ஆம் ஆண்டு உலக கோப்பை தொடரின் போது மீண்டும் அணிக்கு திரும்ப பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால் தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை அதற்கு சம்மதிக்கவில்லை. இதற்கிடையே அம்லா போன்ற வீரர்கள் ஓய்வு பெற்றதால் தென்னாபிரிக்கா அணி தொடர்ந்து பல தோல்விகளைச் சந்தித்தது.

அணியில் மாற்றம் கொண்டு வர ஸ்மித்தை இயக்குனராகவும், மார்க் பவுச்சரை தலைமை பயிற்சியாளராகவும் நியமித்தது தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை. இருவரும் இந்த வருடம் நடைபெறும் ரி-20 உலக கோப்பை தொடரில் சிறப்பாகவிளையாடுவதற்காக ஏபி டி வில்லியர்ஸை மீண்டும்அணிக்குகொண்டு வர பேச்சுவார்த்தை நடத்தினர். இதனையடுத்து ஏபி டி வில்லியர்ஸும் அதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வில்லியர்ஸ் தெரிவிக்கையில்;

நான் 50 ஓவர் கிரிக்கெட்டில் விளையாட விரும்புகிறேன். அதில் எந்தவொரு பிரச்சினையும் இருக்காது. நான் எப்போதுமே தென்னாபிரிக்காவுக்காக விளையாடவிரும்புகிறேன். நான் மார்க் பவுச்சர் மற்றும் ஸ்மித்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன். மேலும் சிலர் அதில் இணைந்திருந்தார்கள். ஆகவே, சாத்தியக்கூறு உள்ளது என்ற நம்பிக்கை உள்ளது. நான் விளையாடுவதற்கான சிறந்த விவாதம் நடைபெற்றது.

டிசெம்பரில் இருந்து சில டெஸ்ட் போட்டிகளை பார்த்தேன். கிரிக்கெட்டில் இருந்து விலகி இருப்பது மிகவும் சிறந்தது என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், நினைவுகள் எனது வாழ்க்கையை மாற்றியது.

ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து முற்றிலுமாக ஒதுங்கி இருக்க விரும்பவில்லை. ஆனால், டெஸ்ட் கிரிக்கெட் முடிந்துவிட்டது- என்றார்.

# வீதியோட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜன.18

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நடத்தப்படும் வீதியோட்ட நிகழ்வு இன்று காலை 6 மணிக்கு ஆரம்பமாகும். கல்லூரியின் விளையாட்டுத்துறைத் தலைவர் ஆர். இராஜகாந்தன் ஆசிரியரின் ஒழுங்கமைப்பில் அதிபர் மு. செல்வஸ்தானின் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வை பிரபல கட்டட ஒப்பந்ததாரர் எஸ். வசீகரன் கொடியசைத்து ஆரம்பித்து வைப்பார்.

பாடசாலை முன்றலில் ஆரம்பிக்கும் வீதியோட்டம் கந்தையா வாத்தியார் வீதி, உடுவில் வீதி, கே. கே.எஸ் வீதிகளினூடாக சுன்னாகத்தை வந்தடைந்து டாக்டர் சுப்பிரமணியம் வீதியூடாக பாடசாலையில் நிறைவடையவுள்ளது.

இதேவேளை பெண்களுக்கான வீதியோட்டம் சுன்னாகத்தில் ஆரம்பித்து கல்லூரியில் நிறைவடையவுள்ளது. (ந)





# ஒலுமடு மகா வித்தி. வீதி ஓட்ட நிகழ்வு

வவுனியா,ஜன.18

ஒலுமடு மகா வித்தியாலய வருடாந்த இல்ல திறனாய்வுப் போட்டியின் வீதியோட்ட நிகழ்வு கடந்த வியாழக் கிழமை பாடசாலை அதிபர் கு.விமலேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் த.சுதன் முதலாம் இடத்தையும், சி.விதுஷன் இரண்டாம் இடத்தையும்,ம.கோபி மூன்றாம் இடத்தையும் , பெண்கள் பிரிவில் ர.டினுஜா முதலாம் இடத்தையும்,த.தர்சனா இரண்டாம் இடத்தையும்,ந.புகழினி மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கு வெற்றிக் கேடயங்கள் வழங்கி வைக்கப்பட்டன.மேற்படி போட்டியில் நாற்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள்,மாணவிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (222)

# தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் மாணவர்களுக்கான வீதியோட்ட நிகழ்வு

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு மாணவர்களுக்கு இடையிலான வீதியோட்ட நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம் பெற்றது.

இதில் ஆண்களுக்கான வீதியோட்டப் போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி முன்றிலில் கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டுத்துறை பொறுப்பசிரியர் குமரேசனால் ஆரம்பிக்கப்பட்டு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்றலில் நிறைவு பெற்றது.

இதேவேளை பெண்களுக்கான வீதியோட்டப் போட்டி மல்லாகம் மகாவித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்றிலில் நிறைவு பெற்றது.

இதில் நூற்றம்பதுக்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தனர். போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் கல்லூரியின் பழைய மாணவன் பிரசாத் ஞாபகார்த்தமாக ஆதியின் அனுசரணையில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (39)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.18

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டு கழகம் நடத்தும் அணிக்கு 11பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம்,ஜன.18

மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் தாளையடி சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம்,ஜன.18

பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் பெண்களுக்கான கரப்பந்தாட்டம் மற்றும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம்,ஜன.18

பிரிந்தானியா தென்மராட்சி அபிவிருத்தி கழகத்தின் உதவியுடன் தென்மராட்சியில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா கல்லூரியில் புனரமைக்கப்பட்ட கடினப் பந்து துடுப்பாட்ட பொது விளையாட்டு மைதான திறப்பு விழவை முன்னிட்டு தென்மராட்சி பிரிவில் உள்ள பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவினருக்கான 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கடினப் பந்து துடுப்பாட்டத் தொடர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று சனிக்கிழைம பிற்பகல் 1.30 மணிக்கு இடம் பெறும். இதில் சாவாகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சாவாகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி மோதவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம்,ஜன.18

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் இன்று சனிக்கிழமை ஆண், பெண் இருபாலாருக்குமான கரம் போட்டி காலை 8 மணிக்கும் சதுரங்க போட்டி முற்பகல் 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம்,ஜன.18

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் பேர்ட்டி சாவகச்சேரி கச்சாய் வீதியிலுள்ள உள்ள புனித லிகோரியார் ஆலயத்துக்கு அருகில் உள்ள கடற்கரையில் இடம்பெறவுள்ளது. (9-23)

◆ ◆ ◆

வவுனியா பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டி யுனிபைட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (23)

# ஆஸியின் அசத்தலான போராட்டம் வீண்

ஆஸ்திரேலியா அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி வருகின்றது. முதலாவது ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலியாஅணி10விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது. இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டி நேற்று ராஜ்கோர்ட்டில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா அணி முதலில் இந்திய அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது. களமிறங்கிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து 340 ரன்களைப் பெற்றது. அணி சார்பில் தவான் (96). ராகுல் (80).கோக்லி (78). சர்மா (48) ரன்களை அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சம்பா 3 விக்கெட்டையும். ரிச்ஹட்சன் 2 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இணையை இந்திய பந்து வீச்சாளர் சமி. அணி 20 ரன்களைப் பெற்ற போது பிரித்தார். வோர்னர் 15 ரன்னுடன் ஏமாற்றமளித்தார். அதனைத் தொடர்ந்து சீரான இடைவெளிகளில் பின்ஞ். லபஸ்சாக்னே ஆட்டமிழந்தாலும் ஒருமுனையில் சிமித் அதிரடி காட்டினார். அவர் 98 ரன்களைப் பெற்ற போது குல்தீப் ஜதாவ்வின் பந்து வீச்சில் ஆட்டமிழக்க, அதே ஓவரில் க்ரேயும் ஆட்டமிழக்க ஆஸ்திரேலியா அணியின் வெற்றி பறிக்கப்பட்டது. இருந்தும் பின் வரிசை வீரர்கள் இந்திய அணியை இறுதி வரை பயமுறுத்தி இருந்தனர். அணி 49.1 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 304 ரன்களைப் பெற்று 36 ரன்களால் வெற்றியைத் தவறவிட்டது.

பந்து வீச்சில் சமி 3 விக்கெட்டையும், யாதவ், சனி, ஜடேஜா தலா 2 விக்கெட்டை வீழ்த்தினர். ஆட்டநாயகனாக கே.எல். ராகுலி தெரிவு செய்யப்பட்டார்.

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு
தனிவீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு:- 077 908 6737

## விற்பனைக்கு

மாற்றுத் திறனாளிகளுக்கான
**மின்சார ஸ்கூட்டர்**விற்பனைக்கு
(Electric Scooter For Disable People)
**077 233 4197**

## தைப்பொங்கலை முன்னிட்டு

A4 இரண்டு பக்கங்கள் போட்டோ கொப்பி 2/=
தமிழ் மற்றும் ஆங்கிலம் Typing செய்து கொடுக்கப்படும்.

**LUXON ENTERPRISE**
No 77B, Kandy Road, Jaffna.
T.P.No:0774115335 Fax No: 021 222 5335

உச்சிப்பிள்ளையார் துணை

## தென்னிந்திய யாத்திரை

**ஆரம்பம் :- 03.02.2020** **நாள்கள் :-16**

தமிழ்நாடு. ஆந்திரா. கர்நாடகா. கேரளா. பாண்டிச்சேரி ஊடான யாத்திரை. உச்சிப்பிள்ளையார் 9 நவக்கிரக ஆலயங்கள். பஞ்சபூதத் திருத்தலங்கள். ஆறுபடைமுருகன். குருவாயூர். திருப்பதி. மதுரைமீனாட்சி. இராமேஸ்வரம் உட்பட 60 இற்கு குறையாத ஆலயங்களை தரிசிக்கலாம். விவரங்களை கேட்டறிந்து பதிவு செய்க.
**ஸ்ரீரங்கநாதன் - 077 768 0102, ராஜன் - 077 736 2154**

### சிங்கப்பூர், மலேசியா சுற்றுலா

மலேசியா. சிங்கப்பூர் சுற்றுலா ஆரம்பம் 23.02.2020. 5 இரவு 6 நாள்கள். அனைத்து செலவுகள் உட்பட விவரங்களை கேட்டறிந்து பதிவு செய்க. உணவு பொபே. சைவம். அசைவம். தங்குமிடங்கள் 4ஸ்ரார் அறைகள். விவரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்க. **077 768 0102, 077 736 2154**

### காசி சீரடி யாத்திரை

**ஆரம்பம் :- 03.03.2020 நாள்கள் :-15 யாத்திரீகர் - 15**

டெல்லி நாராயணர் உட்பட சுற்றிப்பார்த்தல். ஆக்ரா தாஜ்மகால் மதுரா கிருஸ்ணஜென்மபூமி பிரேம்மந்திர் அலகாபாத் திருவேணிசங்கமம். கயா சிரார்த்தம் செய்யுமிடம் காசியில் 15 இடங்கள் புத்தகாயா. இராமேஸ்வரம். சீரடிபாபா. சனிதிங்கனாப்பூர் திரியம்பகேஸ்வரர் ஜோதிலிங்கம். நாசிக் பஞ்சவடி உத்திர கோசமங்கை. காளபைரவர் உட்பட விவரங்களை கேட்டறிந்து பதிவு செய்க. உணவு சுத்தமான சைவ உணவு. அனைத்து செலவுகளும் உட்பட

### யாத்திரையில் எமது சேவை

இருவழி விமான ரிக்கட் மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு காப்பி. ரீ. குடிநீர். தரமான தங்குமிடம் 2பேருக்கு வெஸ்ரன் கொமட் குளியலறை. கட்டில் மெத்தை. இணைந்த அறைகள் AC வாகன வசதி. யாழ். கொழும்பு வாகன வசதி செய்து தரப்படும்.

கலாநிதி.T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11
Email:- sriranganathan2601@gmail.com
Face book:- sridevisriranganathanthuraiappa
**077 736 2154, 077 768 0102**

## புலமைப்பரிசிலும் தொழிற்பயிற்சியும்

கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் ஐ.நா. அபிவிருத்தி திட்ட உதவியுடன் அரச திணைக்களங்களில் கணினிப் பயிற்சியை வழங்கிய **யாழ். MCS IT CAMPUS** நிறுவனம்.
தனது **20 ஆண்டுகள்** பூர்த்தியை முன்னிட்டு வடபிராந்திய தகவல் தொழில்நுட்ப சம்மேளனத்துடன் இணைந்து மாணவர்களுக்கு புலமைப்பரிசிலும் தொழிற்பயிற்சியும் வழங்க தீர்மானித்துள்ளது.

* Bachelor in Information Technology (BIT) கொழும்பு பல்கலைகழகம், CIMA UK. Computer Engineering –USA, மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற CAA மற்றும் ஆங்கிலம் ஆகிய கற்கை நெறிகளை பயில அரிய சந்தர்ப்பம்.!
* 100% இலவச கற்றலுடன் முழுநேர தொழில் பயிற்சியும் வழங்கப்படும்.!!
* புலமைப்பரிசில்கள் க.பொ.த உயர்தர பெறுபேற்றின் அடிப்படையிலும் ஏனையவர்களுக்கு நிறுவனத்தினால் நடத்தப்படும் பரீட்சைகளின் அடிப்படையிலும் வழங்கப்படும்!!!
* புலமைப்பரிசிலிற்கு உங்கள் பெயர். முகவரி. பிறந்ததிகதி என்பவற்றை 772395895 என்ற எண்ணிற்கு sms செய்யவும்.






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.